

# நிவேதன மலர்

## யா/ நல்லூர் சென். பெனடிக்ற் வித்தியாலயம்




**2010**

## பரிசளிப்பு விழா மலர்

A. KUMARATHASAN
40 KALAIMAGAL ROAD
ARIYALAI WEST
JAFFNA

# Nivethana Malar

## J/ NALLUR ST. BENEDICT'S R.C.T.M.V.

PURE

TRUTH HONEST

ELITTER

# Prize Day Magazine

## 08.05.2010

| | | |
|---|---|---|
| நூல் | : | "நிவேதனம்" |
| வெளியீடு | : | மலர்க்குழு<br>யா/ நல்லூர் சென். பெனடிக்ற் வித்தியாலயம் |
| ஆலோசனை | : | அதிபர், அருட்சகோதரி மரியமலர் யோசவ் |
| இதழாசிரியர் | : | திருமதி கவிதா சிவகாந்தி |
| இணையாசிரியர்கள் | : | திருமதி விமலன் ஜெயபாரதி<br>திருமதி ஜே.ஏ.வி.அன்ரன்<br>திருமதி நே.இரவீந்திரன்<br>திரு.இ. அரசகுலசூரியன்<br>திருமதி தி. துரைரட்ணம் |
| முகவரி | : | யா/ நல்லூர் சென். பெனடிக்ற் வித்தியாலயம்<br>கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். |
| பிரதிகள் | : | 200 |
| பதிப்பு | : | கரிகணன் பிறிண்டேர்ஸ்,<br>யாழ்ப்பாணம். |

## தூரநோக்கு - VISION

"பண்புசார் வள முகாமைத்துவத்தினூடாக தரமான கல்வி உள்ளீடுகளை அதி உச்சப் பயன்பாட்டிற்கு உட்படுத்தி நெறி முறையான சமூகம் ஒன்றைக் கட்டியமைத்தல்"

## நோக்கக் கூற்று - MISSION

01) தகைமைத்திறனுள்ள சமநிலை ஆளுமை மிக்க மாணவ சமுதாயத்தினை உருவாக்குதல்.

02) சிறந்த பண்பாட்டு விழுமியங்களைக் கையளிப்பதன் மூலம் சமூகப் பொருத்தப்பாடுடைய மாணவ சமுதாயத்தினை உருவாக்குதல்.

03) நவீன உலகின் அறைகூவல்களை எதிர்கொள்ளக் கூடிய அறிவு, திறன், மனப்பாங்கினைக் கொண்ட மாணவர் சமுதாயத்தினை உருவாக்குதல்.

# பாடசாலைக் கீதம்

வாழ்கவே வளர்கவே நாளெல்லாம்
வானவரும் மற்றவரும் வாழ்த்திட - இப்பாடசாலை

ஆசிர்வாதப்பரின் அருட் டிறத்தில் உயர்வது
நோய்கள் தீர்ப்பவர்க்கு நிம்மதியைத் தருவது
நாளையெங்கள் நாட்டினிலே நல்லவராய் வாழ்ந்திட
வேளை தவறாது நாமும் வெற்றியோடு கற்றிட
வாழ்கவே வளர்கவே......

காலை வேளை தவறாது கனிவுடனே வந்திடுவோம்
சீலமாகப் பெரியோருடன் இனிமையுடன் பழகுவோம்
சொல்லிலுயர் பண்பதனைச் செயலினிலும் காட்டிட
நல்லவராம் வல்லவராம் நாயகனை வணங்கிட
வாழ்கவே வளர்கவே........

சீருடை தரித்து நாமும் சீர்பெற உயர்ந்திடுவோம்
பாரினிற் புகழ்பெறப் பண்போடு வாழ்ந்திடுவோம்
ஆசிரியர் அதிபருக்கு அன்புடன் பணிந்திட
நீதியுடன் போதனைகள் ஆவலுடன் கற்றிட
வாழ்கவே வளர்கவே......

உண்மை தூய்மை நேர்மை என்ற விருதைத் தாங்கி நிற்பது
நன்மை செய்து வாழ எம்மை பயிற்றுவித்துச் செல்வது
கண்ணைப் போல நாங்கள் என்றும் உயர்வுடனே போற்றிட
கடவுளின் ஆசியோடு சிறப்புடன் திகழ்ந்திட
வாழ்கவே வளர்கவே......

# வரவேற்புப் பா

**இராகம்:** அமிர்தவர்சினி
**தாளம் :** ஏகம் (திஸ்ரநடை)

**பல்லவி**

யாழ் நகர் நல்லூர்ப் பதியினில் விளங்கும்
புகழுறு பெனடிக்ற் வித்தியாலயத்தில்

மாண்புறு பரிசுகள் வழங்கு நன் நாளில்
மகிழ்வுடன் இணைந்தே வணங்கி நின்றோமே!

**சரணம்**

கல்வியும் கலையும் அறிவியல் அனைத்தும்
கண்ணென வளர்க்க அரும்பணி புரியும்
நல்மனத் தாயாம் அருளேஸ் வரியை
மகிழ்வுடன் பிரதம விருந்தினர் என்றே
மாணவர் நாமும் இத்திரு நாளில்
பெருமைகள் சேர்ந்திட வரவேற்றோமே!

பல்கலைக் கழக தமிழ்த்துறை தன்னில்
மாண்புறு தலைமைப் பதவியில் நின்று
சொல்லரும் பணிபல புரிந்திடு பெரியோன்
மகிமை சேர் சிவலிங்க ராஜா அவரை
மகிழ்வுடன் சிறப்புறு விருந்தினர் என்றே
சிரமது பணிந்தே வரவேற்றோமே!

கோட்டக் கல்விப் பணியினில் உயர்ந்த
கௌரவ விருந்தினர் மாணிக்கராஜா
கோமகன் தன்னையும் வருக என்றழைத்து
துறவியர், பெற்றோர், பெரியோர் தம்மையும்
அதிபரா சிரியர் மாணவர் பணிந்தே
இறையருள் துணைவர வரவேற்றோமே.

# Our Principal



**Rev. Sr. Mariamalar Joseph (A.C)**
B.A., Dip. in Edu. SLTS - I

# உள்ளுறைபவை ...

பக்கம்

## ஆசிச் செய்திகள்


| | | |
|---|---|---|
| 1. | யாழ். ஆயரின் ஆசிச்செய்தி | ix |
| 2. | நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலய பங்குத்தந்தையின் ஆசிச்செய்தி | x |
| 3. | Message from the Councillor for Education The Apostolic Carmel Provincial House | xi |
| 4. | வடமாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி | xii |
| 5. | மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி | xiii |
| 6. | யாழ் வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி | xiv |
| 7. | தமிழ்த்துறை, உதவிக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி | xv-xvi |
| 8. | ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி | xvii-xviii |
| 9. | நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி | xix-xx |
| 10. | முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி | xxi |
| 11. | முன்னாள் அதிபரின் வாழ்த்துச் செய்தி | xxii |
| 12. | ஆசிரியர் நலன்புரிச் சங்கத்தினரின் வாழ்த்துச் செய்தி | xxiii |
| 13. | பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி | xxiv |
| 14. | பாடசாலை பழைய மாணவர் சங்கச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி | xxv |
| 15. | Message from the Superior Lourdes Convent Jaffna | xxvi-xxvii |

## ஆக்கங்கள்


| | | |
|---|---|---|
| 16. | அதிபர் அறிக்கை | 01-11 |
| 17. | பாடசாலை வரலாறு | 12-15 |
| 18. | கடமையே கண்ணாயினார் | 16-18 |
| 19. | An ardent & active Principal - Sr Malar | 19-20 |
| 20. | பாடசாலையின் வளர்ச்சியும், அருட் சகோதரியின் விடாமுயற்சியும் | 21-22 |
| 21. | அரவணைக்கும் எம் அதிபர் | 23 |
| 22. | ஆளுமை மிக்க அதிபர் | 24-25 |
| 23. | பாடசாலையில் அதிபரின் பங்கு | 26 |
| 24. | சென். பெனடிக்ற் பாடசாலையும் புலமைப் பரிசில் பரீட்சையும் ஒரு நோக்கு | 27-30 |
| 25. | எமது பாடசாலையும் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளும் | 31-32 |
| 26. | எமது பாடசாலையும், கல்விக் கொள்கைகளும் | 33-34 |
| 27. | பாடசாலை தந்த புலமைப் பரிசில் | 35-36 |
| 28. | My School | 37 |
| 29. | விசேட கல்வி ஒரு நோக்கு | 38-41 |
| 30. | கல்வி , ஒழுக்கம், இறைபக்தியில் எம்மை வளர்க்கும் பாடசாலை | 42-44 |
| 31. | சிறுவரும் அரங்க விளையாட்டுக்களும் | 45-46 |
| 32 | ஆரம்பக் கல்வியின் அணுகுமுறை நுட்பங்கள் | 47-48 |
| 33. | யாழ்ப்பாணப் பாடசாலைகளிற் கவி நிலையைத் தரும் 5 S நடைமுறைகள் | 49-50 |
| 34. | சிறுவர்களே எதிர் காலத்தை உருவாக்கும் சிற்பிகள் | 51-52 |
| 35. | எல்லா நாளும் மகிழவே !.... | 53 |
| 36. | ஆசிரியரே தெய்வம் | 54 |



# ஆயரின் ஆசியுரை

வருடாந்தப் பரிசளிப்பு விழாவைக் கொண்டாடும் யாழ். நல்லூர் சென். பெனடிக்ற் வித்தியாலய வெளியீட்டு மலருக்கு ஆசியுரை வழங்குவதிற் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

புனித ஆசீர்வாதப்பர் திருநாமத்தைப் பூண்டு 1905ஆம் ஆண்டு பெருமதிப்பிற்குரிய நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்ட யா/நல்லூர் சென். பெனடிக்ற் வித்தியாலயம், பல ஆண்டுகள் தனது கல்விப்பணியிற் பல வளர்ச்சிகளைக் கண்டுள்ளது. எனினும் கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக அப்போஸ்தலிக்க கார்மேல் சபை அருட்சகோதரிகள் பொறுப்பேற்றுத் திறம்பட நடத்தி வருகிறார்கள் என்பதை நினைந்து இறைவனுக்கு நன்றி கூறுவதிற் பெருமிதமடைகின்றேன்.

இவ்வித்தியாலயம் ஆனது புனிதமான கல்விப் பணியின் ஊடாக, ஆளுமையும், ஒழுக்கமும் நிறைந்த மாணவ சமுதாயத்தை உருவாக்கி வருவது பாராட்டுவதற்குரியது.

அருட்சகோதரி மரியமலர் யோசவ் தனது துறவற வாழ்க்கையினாலும், கல்விச் சேவையினாலும் இறைவனுக்கும், மனிதருக்கும் அரும்பணியாற்றியுள்ளார். இப்பாடசாலையைப் பொறுப்பேற்றதில் இருந்து மெய்நோக்காது, தூக்கம் பார்க்காது பாடசாலையின் முன்னேற்றத்திற் சிறப்பாகப் பணிபுரிந்து சக ஆசிரியர், மாணவர்களின் நன்மதிப்பையும், பாசத்தையும் பெற்றுள்ளார். இவரின் நிர்வாகத்தின்கீழ் பாடசாலை அடைந்த நன்மைகளின் பட்டியல் நீண்டுகொண்டே போகும். இவ்வித்தியாலயத்தின் ஆன்மீகப் பணியும், கல்விப் பணியும் இன்னும் பல்லாயிரம் மாணவர்களைச் சென்றடையவேண்டும் என்று விரும்பி, இன்றைய பரிசில் தின நன்நாளில் இறையாசீர் ஈந்து பாடசாலைச் சமூகத்தை வாழ்த்தி நிற்கின்றேன்.

**மேதகு இ.தோமஸ்.சவுந்தரநாயகம்,**
யாழ் . ஆயர்.



# ஆசிச் செய்தி

புனித ஆசீர்வாதப்பரின் ஆசீரும், அருள் வளங்களும், நிறையப்பெற்று, எம் பங்கின் அருகிலே அமைந்துள்ள பாடசாலையில், நடைபெறவுள்ள பரிசளிப்பு விழாவிலே மணம் வீசும் மலராகி வெளியாகும் மலரிற்கு ஆசிச் செய்தி ஒன்றினை வழங்க எனக்களித்த வாய்ப்பிற்காக மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது பங்கிலே அமைந்துள்ள பாடசாலை புனித ஆசீர்வாதப்பரின் நாமத்தை அணிந்துகொண்டது எமக்குக் கிடைக்கப் பெற்ற மாபெரும் வரமென்றே கூறலாம். இப்பாடசாலையிற் பல சில வருடங்களாகப் பணியாற்றிவரும் ஆசிரியர்களின் அக்கறையும், தொடர்ந்து கடமையுணர்வோடு அதிபர்களாகித் தம்மைக் கரைத்துப் பணியாற்றி வரும் அருட்சகோதரிகள் வரிசையிலே, சில வருடங்களே பொறுப்பெடுத்து, இப்பாடசாலையின் தீவிர வளர்ச்சிக்காக இலை மறை காயாகப் பல அரும்பணிகளைப் புரிந்துவரும் என் அன்புக்கும், மதிப்பிற்கும் உரிய அதிபர், அருட்சகோதரி மரியமலர் யோசப் அவர்களை நாம் இவ் வேளையில் நன்றிப் பெருக்கோடு நினைவு கூருகின்றோம்.

இப்பாடசாலைப் பிள்ளைகள் கல்வி வளர்ச்சியிலும், நல் விழுமியங்களில் மிளிர்வதற்கும், இதனூடாகப் பாடசாலைத் தரம் தொடர்ந்தும் மேன்மை பெறுவதற்கும், மூலகாரணமாகி இருப்பவர் அதிபர் என்றால் அது மிகையாகாது. பிள்ளைகள் துய்மையாக இருப்பதோடு; பாடசாலையும் அதன் சுற்றாடலும் தூய்மையாகப் புனிதமாக வைத்த யேசுவின் கூற்றுக்கு அமைய "நான் பணிவிடை பெற அல்ல; பணிவிடை புரிய வந்தேன்" என்ற விருது வாக்கிற்கு அர்ப்பணித்து, தனது மாணவச் செல்வங்களின் எதிர்கால மேன்மையான வாழ்விற்காக முற்றுமுழுமையாக அர்ப்பணித்தவர் எம் அதிபர்.

2010ஆம் ஆண்டு வெளியிடப்பட உள்ள மலர் பாடசாலையின் தனித்துவச் செயல்பாட்டையும், கடந்த ஆண்டில் இறை துணையோடு எடுக்கப்பட்ட திட்டங்களிற் பெற்ற வெற்றிகளையும் எடுத்துக் காட்டுகின்றது. யாவற்றிற்கும் மேலாக, திருச்சபையை வழிநடத்தும் தற்போதைய தலைவர் எம் பங்கின் நாமத்தைக் கொண்டிருப்பது நாம் பெற்ற பெரும் பேறாகும்.

எனவே, இவ்வாலயத்திற் பணிபுரியும் அடியேனாகிய நானும், இம்மலர் வெளியீட்டில் தங்களை வாழ்த்தி, என் ஆசிச் செய்தியை வழங்கி நிற்கின்றேன்.

**அருட்தந்தை A.லோறன்ஸ்**
பங்குத் தந்தை
(புனித ஆசீர்வாதப்பர் ஆலயம்)



# *Message of Felicitation*

Sister Mariamalar has retired after strenuous, hard labour in mission schools as teacher and as Principal at R.C.T.M.S. Thalayady and lastly as Principal at St.Benedict's R.C.T.M. Vidyalayam, Jaffna. She committed her life to teaching and toiled with heart and mind for the people who were affected by the war and the Tsunami.

One has to be assessed and honoured for one's service while living. This is the way to show due respect for the person, to encourage the new one who succeeds her and to enhance the culture of people. Thus Sister Mariamalar has served selflessly wherever she held positions as teacher or principal. I thank Almighty God for the Yeoman services she rendered to the people who were in dire need during the war and the Tsunami affected period. It is a fitting and grateful gesture given to her by the school and educational community as she retires from activity service in the field of education. I am very pleased to send this message on this occasion held to felicitate Sister Mariamalar on her retirement.

Since she assumed duty in 2007 as Principal of St.Benedict's R.C.T.M. Vidyalayam has developed and grown considerably. The students improved in curricular and co-curricular activities. The school culture of the past and physical resources were maintained by her. The Scholarship students continued to perform better each Year.

As she successfully carried on her work with the school community, she also maintained a cordial relationship with educational authorities. She will be ever remembered gratefully by the school and society in Jaffna.

Despite many challenges and difficulties during her teaching career she withstood all with faith in the Lord. While congratulating her on this occasion we the members of the Apostolic Carmel thank God for the gift of Sister Mariamalar to our congregation, Church and Society. May she find peace, happiness and joy in the service of the Lord as she continues her service in the congregation.

May God bless her and reward her abundantly.

**Sister Therese Ranee, A.C.**
***Councillor for Education,***
***The Apostolic Carmel***
***Provincial House.***



# வாழ்த்துச் செய்தி

யா/ சென் பெனடிக்ற் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தினால் நடாத்தப்படுகின்ற பரிசில் தினத்திற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

வடமாகாண யாழ் கல்வி வலயத்தில் அமைந்துள்ள இவ் வித்தியாலயம் இப் பிரதேச மக்களின் தேவையைப் பூர்த்திசெய்ய முனைகின்றது. சமூகத்தின் மத்தியில் இப் பாடசாலையில் மாணவர் அனுமதிக்கான தேவையும் அதிகமாகவுள்ளது.

இக் கல்லூரி அதிபர் அருட்சகோதரி மரியமலர் யோசவ் அவர்கள் கல்வியிலும் அனுபவத்திலும் முதிர்ச்சி பெற்றவர். முகாமைத்துவப் பண்புகளையும் கொண்டவர். இவ் அதிபரின் அர்ப்பணிப்பு, ஆசிரியர்களுடைய ஒத்துழைப்பு பாடசாலை அமைந்துள்ள பிரதேச மக்களின் உற்சாகம் ஆகிய அனைத்தும் சேர்ந்து இவ் ஆரம்பப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களது கல்வி மேம்பாட்டிற்கு உறுதுணையாக உள்ளன.

பாடசாலையின் கவர்ச்சியான தோற்றம், முகாமைத்துவ கட்டமைப்பு, புலமைப் பரிசில் பரீட்சையில் கூடுதலான சித்தி வீதம் என்பன, அதிபர் ஆசிரியர்களின் உழைப்பிற்கு அத்தாட்சியாக உள்ளன. கிடைக்கின்ற அனைத்து வளங்களையும் உச்சமாகப் பயன்படுத்தி பெற்றோர்களின் ஒத்துழைப்புடன் பழைய மாணவர்களையும் ஒருங்கிணைத்து ஆசிரியர் குழாத்துடன் சேவையாற்றிவரும் சிறப்பு ஏனைய பாடசாலைகளுக்கு எடுத்துக்காட்டாக உள்ளது.

இவ் வித்தியாலயத்தில் கல்வி கற்ற மாணவர்கள் இன்று சமுதாயத்தில் நற்பிரஜைகளாக மிளிர்கின்றனர். இது இப் பாடசாலையின் சிறப்பான அம்சமாகும். இவ் வித்தியாலயத்தின் முகாமையாளர் ஓய்வின் பின் கல்விப் பணியுடன் இறை பணியையும் திறம்படச் செய்ய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன். இன்றைய நன்னாளில் பரிசில்கள் பெறும் அனைத்து மாணவச் செல்வங்களையும் பாராட்டுகின்றேன். இவ் விழாவினை ஒழுங்கு செய்த அனைவரையும் வாழ்த்துவதிலும் பெருமிதமடைகின்றேன்.

**வீ. இராசையா**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
வட மாகாணம்

வரோதய நகர்.
திருகோணமலை



# வாழ்த்துச் செய்தி

**பத்துத் தசாப்தம் கல்வித் தொண்டாற்றிய கலாலயம்**

யா/நல்லூர் சென்.பெனடிக்ற் றோ.க.த.க. பாடசாலை நூறாண்டுகளுக்கு மேலாக ஏழைப்பிள்ளைகளின் அறிவுக் கண்களைத் திறக்கத் தொண்டாற்றியுள்ளது. இப் பாடசாலையை நிர்வகித்த அதிபர்களாக அருட்சகோதரிகள் இருந்துள்ளனர். இவ் அருட் சகோதரிகளின் அர்ப்பணிப்பான சேவையினால் இப்பாடசாலையும் மாணவர் அனுமதியில் முன்னிலை வகிக்கும் பிரபல்ய பாடசாலையாகத் திகழ்கிறது. எனது காலத்தில் அருட்சகோதரி தேவநேசம், அருட்சகோதரி மரியமலர் யோசப் ஆகியோரின் திறமையான நிர்வாகத்தை அவதானிக்க முடிந்தது. அருட்சகோதரி தேவநேசம் காலத்திற் புதிய கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டது. அருட் சகோதரி மரியமலர் யோசப் சுனாமியாற் பல இழப்புக்களையும் இழந்து; உடல், உளம் சோர்ந்த நிலையிற் கடமையேற்றார். அவருடைய சோர்வினை இக்கல்லூரியின் தொண்டு மாற்றியுள்ளது என்றால் மிகையாகாது. இவ் அதிபர்களுக்கு வலதுகரமாகச் செயற்பட்ட இப்பாடசாலை ஆசிரியர்கள், இப்பாடசாலையின் வரலாற்றிற் பொன்னெழுத்துக்களாற் பொறிக்கப்பட வேண்டியவர்கள். இவ்வருடம் சிறப்பாகக் கொண்டாடப்படும் பரிசளிப்பு விழாவானது இங்கு கற்கும் மாணவர்களுக்கு ஊக்குவிப்பாக அமைகிறது.

இப் பரிசளிப்பு விழாவை நடாத்தும் அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கு எனது பாராட்டுக்கள். கஷ்டப் பிரதேசங்களில் அர்ப்பணிப்பான சேவையையாற்றி, இப்பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெறும் அதிபர், அருட்சகோதரி மரியமலர் யோசப்பிற்கு, யேசுவின் கூற்றுப்படி, சுமை சுமந்து சோர்ந்திருப்போரே என்னிடம் வாருங்களென இறைவனின் ஆசிகள் என்றும் உண்டு. ஓய்வுபெறும் அதிபர், அருட்சகோதரி மரியமலர் யோசப்பிற்கு எனது வாழ்த்துக்களையும், கல்விச் சமூகம் சார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். பரிசளிப்பு விழா சிறப்புற நடைபெற எனது வாழ்த்துக்கள்.

**வே.தி.செல்வரத்தினம்**
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
யாழ். மாவட்டம்.



# வாழ்த்துச் செய்தி

யா/நல்லூர் சென்.பெனடிக்ற் வித்தியாலயத்தின் பரிசளிப்புத் தினத்தை முன்னிட்டு வெளியிடப்படும் இம் மலருக்கு எனது வாழ்த்துச் செய்தியினை அனுப்புவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இப் பாடசாலை கல்விக்கான கவின் நிலையைக் கொண்டு கல்விச் செயற்பாட்டிலும், இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் சாதனை படைத்து எனது வலயத்தில் ஒரு முன்னணிப் பாடசாலையாகத் திகழ்வது குறிப்பிடத்தக்கதாகும். அதற்கு, காலத்துக்குக் காலம் செயற்றிறன் மிக்க அதிபர்களும், அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்களதும் சேவையே காரணமாகும். அந்த வரிசையில் இன்றைய அதிபர், அருட்சகோதரி மரியமலர் யோசப் அவர்கள் சேவையில் மலர்ந்த மலராக இருந்து, ஆசிரியர்களையும், மாணவர்களையும் சிறப்பானமுறையில் நெறிப்படுத்தி இப்பரிசுத் தினத்தினைக் கொண்டாடுவதனையிட்டு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்றைய பரிசுத்தினம், மாணவர்களின் பன்முகத்திறன்களின் அடைவுகளை முன்னிலைப்படுத்தி அவர்தம் ஆற்றல் வெளிப்பாடுகளுக்குத் தூண்டுதலளிக்கின்ற தினமாகும். அத்துடன் ஆசிரியர்களின் வினைத்திறன் மிக்க கற்பித்தற் பணியின் பெறுபேறுகளைச் சமூகத்திற்குக் கையளிக்கின்ற தினமுமாகும்.

அந்த வகையில், இன்று பரிசுபெறும் மாணவர்கள் பாராட்டுக்குரியவர்கள். அவர்களது திறன், விருத்தி, வினையாற்றலுடன், கற்பித்த ஆசிரியர்களையும், அவர்களை உரிய முறையில் நெறிப்படுத்திய அதிபரையும் இத்தருணத்திற் பாராட்டுவதுடன், எதிர்காலத்தில் மாணவர் அனைவரதும் தேர்ச்சிமட்ட அடைவிற்கு மேன்மேலும் இப் பாடசாலை ஊக்கியாகச் செயற்பட வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**திருமதி அ.வேதநாயகம்,**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.



# வாழ்த்துச் செய்தி

### ஓயாது உழைக்கும் உத்தம அதிபர்

நிமிர்ந்து, உயர்ந்து நிற்கும் சென்.பெனடிக்ற் வித்தியாலயத்தைப் பார்க்கும்போது எங்கள் அதிபர், அருட்சகோதரி மரியமலர் ஜோசப் அவர்களின் முழுநேர சேவையும், அர்ப்பணிப்பும், தியாகமும்தான் எம் கண்முன்னால் நிற்குமென்றால் அது மிகையன்று.

நகரப் புறத்திலே சென்.பெனடிக்ற் பாடசாலையை அடையாளம் காட்டி, பெறுபேறுகளிலும், நடத்தையிலும், அறிவிலும், ஆற்றலிலும், ஆளுமையிலும் மாணவர்களை உருவாக்கி, இடைநிலைப் பாடசாலைகளுக்குக் கொடுக்கும் பெரும் பணியை வித்தியாலய அதிபர் செய்து வருகின்றமை பாராட்டுதற்குரியதாகும்.

பாடசாலைக் கவின்நிலையை ஏற்படுத்திய தனிச் சிறப்பு அதிபர் அவர்களுக்கே உரியது. பாடசாலையில் நுழைந்த உடனேயே கல்விகற்கும் சூழலும், ஒரு தேவ பிரசன்னமும் இருப்பதனை உணரும் வகையில், மிகக் கண்ணியமாகவும், உண்மையோடும், நேர்மையோடும், தேவ பயத்தோடும் பாடசாலையை நிர்வகிக்கும் திறன் அவருக்கே உரிய தனித்துவமானது.

இப்பாடசாலையில் நடைபெறும் அநேகமான நிகழ்வுகளில் நான் கலந்து கொண்டிருக்கின்றேன். அந்த நிகழ்வுகள் எல்லாம் அதிபரின் அக்கறையான செயற்பாட்டையும், ஆர்வத்தையும், நேர முகாமைத்துவத்தையும் பொட்டிட்டுக் காட்டுவனவாக இருக்கின்றன.

நிகழ்வுகளிற் பங்குபற்றும் மாணவர்களின் துடிப்பான செயலும், நேர்த்தியான ஆடை அலங்காரமும், ஒழுங்கமைப்பும், அதிபர் அவர்களின் சிந்தனையில் உதித்த எண்ணங்களும், மிகக் கச்சிதமாக வெளிப்படுத்தி நிற்பதனைக்கண்டு நான் பாராட்டாத நிகழ்வுகளே இருக்காது என்று நினைக்கின்றேன்.

*" அருவினை என்ப உளவோ கருவியான்*
*காலம் அறிந்து செயின்"*

என்ற குறளுக்கமையக் காலம் அறிந்து செயற்பட்டால் வெற்றி கொள்வதற்கியலாத

அருஞ் செயலாக எதுவுமில்லை என்பதுபோல இப் பாடசாலை அதிபர், தொட்டசெயல் எல்லாவற்றிலும் வெற்றிகாணும் திறன் படைத்தவர்.

அண்மையிலே மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வருகை தந்தவர்கள் கோவைகள் பேணுவதிலும், முகாமைத்துவத்திலும், நிர்வாகத்திலும், கற்றல், கற்பித்தற் செயற்பாடுகளிலும், இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் சிறப்பான பாடசாலை என்று இப்பாடசாலையை பாராட்டியதும், பாடசாலை அதிபரின் திறன்மிக்க செயற்பாட்டைப் பறைசாற்றி நிற்கின்றது.

காலையும், மாலையும் பாடசாலையிற் கடமைசெய்து, பாடசாலையை எல்லா விடயங்களிலும் உயர வைத்த, உத்தம அதிபர், பாரதியின் பாடல்................

*"உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்*
*உண்மை என்று தான் அறிதல் வேணும்*
*வைரமுடைய நெஞ்சு வேணும் - இது*
*வாழும் முறைமையடி பாப்பா"*

என்ற அடிகளுக்கிணங்க, அன்பும், தெய்வ பக்தியும், வைர நெஞ்சமும், விடா முயற்சியுமுடைய பெருமதிப்புக்குரிய அதிபர் அவர்களது அறுபதாவது அகவையில், அவர் எல்லா சிறப்புக்களும் பெற்று, நீண்ட ஆயுளோடு மேலும் சிறப்புறவாழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திருமதி. மீரா அருள்நேசன்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
(தமிழ்த்துறை)
வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.



# வாழ்த்துச் செய்தி

கல்விப் பாரம்பரியம் மிக்க எழில்மிகு யாழ்ப்பாண நகரில், தமிழ் நறுமணம் வீசும் நல்லூர்ப் பதியினிலே; தரமான, உறுதியான ஆரம்பக் கல்வியை முறையாக வழங்கிவரும் யா/செள். பெனடிக்ற் றோ.க.த.க. பாடசாலையின் இவ்வாண்டுக் கான பரிசளிப்பு விழா சிறந்திட ஆண்டவனை வேண்டுகின்றேன்.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில், ஆரம்பக் கல்வித்துறையில் தனி முத்திரை பதித்து, முன்னேற்றப் பாதையில் வீறுநடைபோடும் இப்பாட சாலையின் சகல மாணவர்களும் பரிசுகள் பெற்றிட வாழ்த்துகின்றேன்.

சமயப் பணியுடன் கல்விப் பணியையும் இணைத்துத் தமிழ் சமூக முன்னேற்றத்திற்காக அரும்பணி புரிந்த அருட்தந்தை சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களால் 1905ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை பல தசாப்தங்களாகப் பாலர்களின் அடிப்படைக் கல்வியை வழங்குவதில் ஏணிப்படிகளாக உயர்ந்துசெல்வது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்ற பழமொழிக்கிணங்கச் சிறந்த சமூகப் பிரஜைகளின் உருவாக்கத்திற்கு அடிநாதமான ஆரம்பக் கல்வியை வழங்குவோர் வரிசையில் துடிதுடிப்பும், விடாமுயற்சியும் கொண்ட அதிபர், அருட்சகோதரி மரியமலர் ஜோசப் அவர்களின் சீரிய வழிகாட்டலின்கீழ் அர்ப்பணிப்பும், ஆற்றலும், சேவை மனப்பாங்கும் மிக்க ஆசிரியர்களின் கல்விப் பணி போற்றுதற்குரியது. அத்துடன் பாடசாலை வளர்ச்சியிற் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், பழைய மாணவர் சங்கமும் வழங்கிவரும் ஒத்துழைப்பும் சிறப்பானதாகும்.

பரிசளிப்பு விழாக்கள் மாணவரின் அடைவு மட்டத்தை மேலும் ஊக்குவிக்கவும், அதிபர், ஆசிரியர்களின் கடின உழைப்பினாலான வகுப்பறைச் செயற்பாடுகளின்மூலம் மாணவர் பெற்ற தேர்ச்சிகளையும், பாடசாலை மட்டச் செயற்பாடுகள்மூலம் மாணவர் அடைந்த திறன்களையும், ஆளுமைப் பண்புகளையும் சமூகத்திற்கு எடுத்துக்காட்டும் ஒரு

களமாக அமைகிறது. எனவே, இப் பாடசாலையின் ஆரோக்கியமான கள நிலையை மேலும் வளர்த்திட வேண்டும்.

கல்வி மறுசீரமைப்பிற்கேற்பக் கலைத்திட்ட அமுலாக்கத்தில் முன்னணிப் பாடசாலைகளுள் ஒன்றாகிய இப் பாடசாலையின் கல்விப் பெறுபேறுகளும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளும் பாராட்டப்பட வேண்டியவை.

கவின்நிலைமிக்க இப் பாடசாலைக் கட்டிடங்களும், கற்றலைத் தூண்டும் வகுப்பறைகளின் வடிவமைப்பும், பொருளாதார வசதி குறைந்த இப் பிரதேசப் பிள்ளைகளின் ஆரம்பக் கல்வியை வளமாக்குகின்றன. யுத்தத்தினாற் பாதிப்படைந்த மாணவர்களை உள்வாங்கிக் கற்றலுக்கு வழிகாட்டும் பண்பு சிறப்பானதாகும்.

சிதைக்கப்பட்ட எம் சமூகம் மீண்டும் தழைத்திட, தாழ்த்தப்பட்ட எம் கல்வி அறிவு மீண்டும் உயர்ந்திட, சீரழியும் எம் பண்பாடுகள் உறுதியுடன் பேணப்பட, ஒளி வீசும் இப்பாடசாலை மேலும் பிரகாசிக்கட்டும்.

இன்றைய தினம் பரிசுகள் பெறுவோரையும் எதிர்காலத்திற் பரிசுகள் பெறத் துடிப்போரையும், மீண்டும் வாழ்த்துவதிற் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**திரு.பி.குகதாசன்**
ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்.வலயம்.



# வாழ்த்துச் செய்தி

யாழ்/நல்லூர் சென்.பெனடிக்ற் வித்தியாலயத்தின் 2010ஆம் ஆண்டுக்கான வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று நடைபெறுவதனையிட்டுக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்ற வகையில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த காலங்களிற் கல்விச் செயற்பாடுகளிலும், இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் உயர்நிலைபெற்ற மாணவர்கள், பிரதம விருந்தினர் கரங்களாற் பரிசுகளைப் பெறும் சந்தர்ப்பம் கிடைத்தது அவர்களின் வாழ்வியல் முன்னேற்றத்தின் படிக்கற்கள் என்றால் மிகையாகாது.

இன்றைய பரிசளிப்பு விழாவிற் சின்னஞ்சிறுசுகள் பரிசுகளும், சான்றிதழ்களும், பெற்றுக் கொண்டிருக்கும் சந்தோஷத்தினை அனுபவித்துக்கொண்டிருக்கும் கல்விச் சமுகத்தினருக்கு எதிர் காலத்தில் இடம்பெறப்போகும் இரண்டு சம்பவங்கள் தொடர்பான மன நெருடலின் தாக்கம் உச்ச அளவில் இருப்பது அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

01. அதிபர் அவர்களின் ஓய்வு.
02. இப் பாடசாலை மாணவர்களின் தாயாக, தந்தையாக உழைத்து, ஏழு ஆண்டுகள் ஆசிரியர் சேவைப் பூர்த்தி காரணமாக இடம்பெற்றிருக்கும் இடமாற்றம்.

இந்த வகையில் இப்பாடசாலை இன்று யாழ். மாவட்டப் பாடசாலைகளில் முன்னணி ஆரம்பக் கல்விப் பாடசாலையாக விளங்குகின்றதென்றால் அதற்கு முழுக் காரணமும் அதிபர், அருட்சகோதரி மரியமலர் யோசப் அவர்களின் தன்னலமற்ற சேவையும், அச் சேவைக்கூடாகத் தன் பின்னே ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் இழுத்துச்செல்லும் நிர்வாகத் திறமையே எனக் கூறலாம்.

திரு.திருமதி யோசவ் அக்னஸ் அவர்கள் தந்த கடவுளின் சொத்தான அன்னை மரியமலர் அவர்கள், ஆயிரம் ஆயிரம் குழந்தைகளின் தாயாக இருந்து இப்பாடசாலையைப் பௌதீக வள ரீதியாகவும், கல்வித்தர ரீதியாகவும் வளர்த்தெடுத்த பெருமைமிகு அதிபர், பரிசளிப்பு விழாவைத் தொடர்ந்துவரும் சில நாட்களின்பின் பாடசாலைக்கு வராமல் விடப் போகின்றார் என எண்ணுவதற்கு எவருக்கும் மனம் எடுக்காது என்றே எண்ணுகின்றேன்.

புலோப்பளை றோ.க.த.க. பாடசாலையும், அச்சுவேலி புனித திரேசாள் கல்லூரியும், யாழ். பல்கலைக் கழகமும் புடம்போட்டு வளர்த்தெடுத்த கல்வித் தாயாக விளங்கும் அருட்சகோதரி மரியமலர் அவர்கள் தான்படித்த அச்சுவேலி புனித திரேசாள் கல்லூரியில் 1990இல் முதல் நியமனத்தைப் பெற்று, அங்கு எடுத்த கள்ளங் கபடமற்ற பயிற்சியே இன்று இப் பாடசாலையின் இந்த வளர்ச்சியும், மாணவர்களின் சிறப்பார்ந்த கல்வியும், பரிசளிப்பு விழாவும் என்றால் மிகையாகாது.

எடுத்த காரியத்தினைக் கச்சிதமாக முடிக்கும் மனப்பக்குவம், துணிவு, பெரியோரை மதிக்கும் பண்பு, கனிவான பேச்சு, தான் இருக்கும் இடத்தின் அழகைப் பேணும் விதம், கடமையை முதன்மையாக மதிக்கும் மனப்பக்குவம் இவை அனைத்தும் அவரிடம் இருக்கும் உயரிய குணங்கள். இதனாலேதான் மனிதத்தையே காணமுடியாத இந்த உலகத்திலே அவர்மூலம் நான் மனிதத்தைக் காண்கின்றேன். அதனால் இவ் விழாவில் நின்று அவர் வளர்த்த பிள்ளைகளை வாழ்த்துவதிலும், பாராட்டுவதிலும் பெருமையடைகின்றேன்.

அன்பான மாணவச் செல்வங்களே! நல்ல தரையில் வீசப்படும் விதைகள் ஒரு போதும் நற்பயனைத் தராது விடுவது இல்லை. அந்த வகையில் நல்ல வளம்கொண்ட தரையான அதிபர், அருட்சகோதரி மரியமலர் அவர்களின் கைகளில் நீங்கள் விதையாவதற்கு உங்கள் பெற்றோர்களால் முளைத்து, வளர்ந்து வளம்பெற்ற உண்மை மனிதமாக மேன்மை பெற வீசப்பட்டவர்கள். நிச்சயம் அவராலும், அவரது ஆசிரியர்களாலும் வளர்த்தெடுக்கப்பட்ட கல்வித் தேர்ச்சிப் பண்புகள் நிறைந்த நீங்கள், எதிர்காலத்தில் மேன்மைமிகு மக்களாக மிளிருவீர்கள். அதற்கு அருட்சகோதரி மரியமலர் அவர்கள் வழிபடும் ஆண்டவர் என்றும் துணை நிற்பார் என்பது எனது அசையாத நம்பிக்கையாகும்.

**திரு. சி. மாணிக்கராசா**
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
நல்லூர்.



# வாழ்த்துச் செய்தி

நல்லூர்க் கல்விக் கோட்டத்தில் ஆரம்ப பாடசாலைகளில் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாக சென். பெனடிக்ற் வித்தியாலயம் விளங்குகின்றது. இப்பாடசாலையின் அகப்புறத் தோற்றங்கள் கவர்ச்சியானவை. அதேபோல் மாணவர்களின், ஒழுக்கம், பழக்க வழக்கங்கள் என்பவை தனிச் சிறப்பானவை. இவற்றுக்கெல்லாம் மூலமாகத் திகழ்ந்தவர் இப் பாடசாலையின் அதிபர் திலகமாகத் திகழ்ந்த அருட்சகோதரி மரியலர் யோசப் ஆவார். அவருடைய செயற்றிறனும், ஆளுமையும், ஒத்துழைப்பு மனப் பான்மையும், நல்லூர்க் கல்விக் கோட்டத்தில் நடைபெறும் போட்டிகள் மற்றும் நிகழ்வுகளிலும் நன்கு பயன்பட்டன.

நல்லூர்க் கோட்ட அதிபர் சங்கத்தின் வருடாந்த நிகழ்வுகள் சிறப்புற நடைபெறத் தனது பாடசாலையின் வளங்களையும், தனது சேவையையும் சலிப்புறாது வழங்கி உதவியவர்.

கடமையிற் கருத்துடனும், கண்ணியத்துடனும் செயற்படுபவர். இவரது சேவை இந்தப் பாடசாலையின் உன்னத வளர்ச்சிக்கு ஏணிப் படிகளாக அமைந்திருந்தன என்றால் அது மிகையாகாது. புலமைப் பரிசிற் பரீட்சையிற் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு ஏனைய பாடசாலைகளில் இருந்தும் வித்தியாசமானதாகவும், மேம்பட்டதாகவும் செயற்படுத்திக் காட்டியவர் அருட்சகோதரி மரியமலர் யோசப் அவர்களாவர்.

அவரது சேவை தொடர்ந்தும் மாணவர்களுக்கும், மக்களுக்கும் கிடைக்கும் வகையில் அவருக்கு நல்ல தேகாரோக்கியத்தையும், உள நிறைவையும் ஆண்டவர் வழங்கவேண்டுமென இறைஞ்சுகின்றேன்.

**தமிழறிஞர் கே.வி.குணசேகரம்**
முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர்.



# வாழ்த்துச் செய்தி

யா/நல்லூர் சென்.பெனடிக்ற் றோ.க.வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி அளிப்பதிற் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இவ்வித்தியாலயம் 105 ஆண்டுகளை நிறைவு செய்கின்ற இந்நேரத்திலே, புகழ்பூத்த அதிபராக இருந்து அகவை காரணமாக ஒய்வு பெறுகின்ற அருட்செல்வி மரியமலர் யோசவ் (அ.கா) அவர்களுக்கு எனது வாழ்த்துக் களையும், பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் மகிழ்வுறுகிறேன்.

தனது சேவைக்காலத்தில் எங்கெல்லாம் உதவிபெற முடியுமோ அங்கெல்லாம் உடனுக்குடன் சென்று, ஒயாது சலியாது உதவிபெற்றுத் தனது பாடசாலையையும், மாணவர்களையும் உயர்ந்த உன்னத நிலைக்குக் கொண்டுவந்ததுடன், சிறந்த பெறுபேறுகளையும் ஆசிரியர்கள், மாணவர்கள் மூலம் பெற்று, ஒரு சிறந்த பாடசாலையாகத் திகழவைத்த பெருமை அவரையே சாரும்.

தனது கடின உழைப்பாற் பாடசாலைக்கு நற்பெயர் பெற்றுக்கொடுத்தார். நல்லூர்க் கோட்டத்தில் இயங்கும் ஆரம்பப் பாடசாலைகளுள் தகைமையாலும், கட்டொழுங்கு, பண்பாட்டு வடிவத்தினாலும் சிறப்பார்ந்த வித்தியாலயமாகச் சென்.பெனடிக்ற் வித்தியாலயம் விளங்குகின்றது.

பாடசாலைப் பணிகளுடன் தனது இறைபணிக்கான விடயங்களிலும் புனித ஆசிர்வாதப்பர் ஆலயப் பங்குத் தந்தையுடன் இணைந்து மறைபணி புரிந்தவர்.

"பணிவிடை பெறவல்ல, பணிவிடை புரியவே வந்தேன்" என்ற இறைவாக்கிற்கேற்ப வாழ்ந்தவர் அருட்செல்வி மரியமலர் யோசவ். நற்பணிபுரிந்த மன நிறைவோடும், மன மகிழ்வோடும், ஓட்டப்பந்தயத்தை முழுமையாக ஒடி முடித்து வென்ற பெருமையோடும், பாடசாலையை விட்டு ஒய்வு பெற்றாலும் இவர் தொடர்பணி சிறக்க இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

**அருட்செல்வி M.தேவநேசம் (அ.கா)**
முன்னாள் அதிபர்.

# தூய்மையைப் பேணும் நற்பணியாளர்

யாழ். நகரின் நல்லூர்ப் பதியிற் பெருமையுடன் திகழும் சென். பெனடிக்ற் றோ.க.வித்தியாலயம் தனது பரிசளிப்பு விழா மலரினை வெளியிடுவதிற் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

இந்நாளில் சென்.பெனடிக்ற் பாடசாலைச் சமூகமானது இவ் வித்தியாலயத்தின் அதிபராகக் கடந்த நான்கு ஆண்டுகளாகத் திறமைமிக்க ஓர் அதிபராகப் பணியாற்றிவரும் எமது அருட்சகோதரி மரியமலர் ஜோசவ் அவர்களின் பணிவாழ்வின் மகத்துவத்தைப் பார்ப்பது மிகவும் பொருத்தமானதாகும். அவர் தனது வாழ்க்கையில் எமது பாடசாலைத் தாயையும், தமது சொந்த அன்னையையும் ஒரே மாதிரியாகவே நேசித்து வந்துள்ளார். இவர் எமது பாடசாலையிற் பணிபுரியும்போதெல்லாம் துடிப்பும், திறமையும், தூய்மையும் அவரகத்தே குடிகொண்டி ருப்பதை நாம் அவதானிக்க முடிந்தது. "பணிவிடை பெறுவதற்கு அல்ல. பணிவிடை புரியவேவந்தேன்" என்னும் கூற்றுக்கமைய இவரது பணிக்காலம் அமைந்ததையும் நாம் உணர்ந்தகொண்டோம். உண்மையிலேயே இவரது பணிக் காலம் எமது பாடசாலையின் பொற்காலமாகும். தன்னைப்போலவே எமது ஆசிரியர் குழாத்தினையும், மாணவச் செல்வங்களையும் "தூய்மையைப் பேணும் துடிப்புள்ள சமுதாயமாக" மாற்றியமைக்கப் பெரும்பாடு பட்டுள்ளார்.

இவரது குறிக்கோளை நிறை வேற்றுவதில் எம் ஆசிரியர் குழாம் என்றும் நினைவிற்கொண்டு சேவையாற்றுவோம் என்றுகூறி, இந்நாளில் எமது இனிய அதிபரின் சேவையையும் நன்றியுடன் நினைவு கூர்வதோடு, எமது பரிசளிப்பு விழா மலர் வெளியீட்டிலும் எமது மாணவச் செல்வங்களின் எதிர்கால வளர்ச்சிக்கும் எமது ஆசிரியர் குழாம் தனது மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றது.

**யா/நல்லூர் சென். பெனடிக்ற் றோ.க.வித்தியாலய**
**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்.**



# நல்லூர் - அரியாலைப் பிரதேச மக்களுக்குக் கிடைத்த பெரும் சொத்து

காலத்தால் மறக்க முடியாத காவிய நாயகர் அருட்தந்தை ஞானப்பிரகாசர் அடிகளார் அவர்களின் முயற்சியால் எமது பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டுக் காலத்துக்குக் காலம் அருட்சகோதரிகளின் வழிநடத்தலில் மேன்மை பெற்றுவருகின்ற எமது யாழ். நல்லூர் சென். பெனடிக்ற் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையானது வேகமாக வளர்ச்சிபெறுகின்ற ஆரம்பப் பாடசாலைகளில் முதன்மை யானதாக விளங்கி வருவதனை அனைவரும் ஏற்றுக்கொள்வர்.

இதற்குச் சான்றாக எமது பதவிக்காலத்தில் இப் பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வுகளான கல்விக் கண்காட்சி, தமிழ்த்தின நிகழ்வு, ஆங்கில தின நிகழ்வு, ஆசிரியர் தின நிகழ்வு, ஒளிவிழா, பெற்றோர் தின நிகழ்வு, விளையாட்டுப் போட்டி என அனைத்து நிகழ்வுகளும் சிறப்புப் பெற்றிருந்தமையை இந் நிகழ்வுக்கு விருந்தினர்களாக வருகை தந்திருந்த விருந்தினர்களின் உரையிலிருந்தும், கலந்துகொண்டவர்களின் உள்ளங்களில் இருந்தும் அறிந்துகொள்ளக் கூடியதாகவுள்ளது. அத்துடன் இப் பாடசாலையில் இருந்து புலமைப் பரிசிற் பரீட்சையிற் சித்தியடையும் மாணவர்களின் விகிதம் காலத்துக்குக் காலம் அதிகரித்துச் செல்வதையும் அவதானிக்க முடிகின்றது.

இவை எல்லாவற்றிற்கும் மகுடம் சூட்டுவதுபோல, தற்போதைய அதிபர், அருட்சகோதரி மரியமலர் ஜோசப் அவர்களின் அர்ப்பணிப்புடன்கூடிய முழு முயற்சியினாற் பாடசாலை, பரிசில் தின நிகழ்வு, ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. அதிபர் அவர்களின் இந்தக் கன்னி முயற்சிக்கு உறுதுணையாக இருந்து செயற்பட்டுவரும் இப் பாடசாலையின் உப அதிபர் மற்றும் ஆசிரியர்களையும் மாணவச் செல்வங்களையும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் சார்பிற் பாராட்டுவதிற் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

அத்துடன் விரைவில் ஓய்வுபெற்றுச் செல்லவிருக்கும் இப்பாடசாலை அதிபரின் ஆதங்கம் போல, பாடசாலைப் பரிசளிப்பு தின நிகழ்வு இனிவரும் ஒவ்வொரு ஆண்டிலும் சிறப்பாக நடைபெற வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

"நன்றி"

**நா. குமணதாசன்**
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.



# வாழ்த்துச் செய்தி

நல்லூர் சென்.பெனடிக்ற் றோ.க.த.க. வித்தியாலயம், ஆரம்பிக்கப்பட்டு 105 வருடங்களைப் பூர்த்திசெய்து முதற்தடவையாகப் பரிசளிப்பு விழாவினையும், சிறப்பு மலரினையும் வெளியிடும் இந்நாளில், இம்மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதிற் பாடசாலையின் பழைய மாணவர் சங்கச் செயலாளர் என்ற வகையில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன். பாடசாலையின் வரலாற்றிற் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளிற் பரிசுத் தினமும் ஒன்றாகும். அந்த நாள் இன்று முதற் தடவையாக நடைபெறும் இந்நாளிலே, அதன் மலர் வெளியீடும் நடைபெறுகின்றது. இந் நிகழ்வு நடைபெறுவதற்கு உறுதுணையாக நின்ற அதிபர், ஆசிரியர்கள் மற்றும் அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

எமது பாடசாலை அதிபர், மதிப்பிற்குரிய அருட்சகோதரி மரியமலர் யோசப் அவர்கள் இப் பாடசாலையின் உச்ச வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டுக்கொண்டிருப்பவர். இப் பரிசுத்தின விழாவும், அதன் சஞ்சிகை வெளியீடும் நடைபெறுவதற்கு முழுமுதற் காரணகர்த்தாவாக விளங்குபவர் இவரே. இத்தருணத்தில் எமது அதிபரின் சேவையைப் பாராட்டுவதிற் பேருவகை அடைகின்றேன். பாடசாலையில் இருந்து ஓய்வுபெறுவதற்கு முன்னர் இந்நிகழ்வை நடத்தவேண்டும் என்ற உறுதியோடிருந்தார். தற்போது நிறைவேற்றி இருக்கின்றார்.

இது மட்டுமல்லாமல் மாணவர்களுக்குத் தேவையான உதவிகளுக்காக; அது சீருடையாக இருந்தால் என்ன, சப்பாத்தாக இருந்தாலென்ன, வேறு என்னென்ன பொருட்களாக இருந்தாலென்ன, தனக்குத் தெரிந்தவர்கள், அறிமுகமானவர்கள், பெற்றோர்கள், நண்பர்கள், பழைய மாணவர்கள் என்று பலரிடமும் துணிவுடன் கேட்டுப் பெற்றுக்கொண்ட சம்பவங்கள் பல உள்ளன. தனது மலர்ந்த முகத்தாலும், இனிய பேச்சாலும் அனைவரையும் கவரும் புன் சிரிப்பாலும் பல விடயங்களைச் சாதித்துள்ளார். அத்துடன் பாடசாலையின் கல்வி வளர்ச்சியில் மட்டுமன்றி இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் முன்நிலையிற் திகழ்கின்றது. சமய, சமூக, விளையாட்டுப் போட்டிகளிலும் யாழ். நகரிற் பெரும் பாடசாலைகளை விஞ்சும் அளவிற்கு இப் பாடசாலையும் தனது திறமையைப் பெருமையை நிலைநாட்டி நிற்பது சாதாரண விடயமல்ல. இவை அனைத்திற்கும் அதிபரினதும், ஆசிரியர்களினதும், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் என்ற பாடசாலைக் குடும்பத்தின் கடின உழைப்பும், அர்ப்பணிப்பும், கடமை உணர்ச்சியுமே காரணமாக அமைகின்றது.

இத்தகைய ஒரு நேரத்தில் இச் சஞ்சிகை விழா நடைபெறுவதற்குக் காரணமாக இருந்த அதிபரை வாழ்த்துகின்றேன். எமது அதிபரின் அரிய சேவைக்கு நாம் செய்யும் நன்றிக்கடன் இப் பாடசாலையை மேன்மேலும் வளர்த்தெடுப்பதேயாகும். இந்நாளிலே இப் பாடசாலையின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் அனைவரையும் வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இவ் விழாவும், சஞ்சிகை வெளியீடும் தொடர்ந்துவரும் காலங்களிலும் நடைபெற வேண்டுமென வாழ்த்தி நிற்கின்றேன்.

R.நிரோஷானந்
செயலாளர்,
ப.மா.சங்கம்.

# *Message from the superior*

**Lourdes convent, Jaffna.**

It' s my great joy and pleasure to give this is message of felicitation. appreciation and congratulations to this special souvenir bulletin of St. Benedict R.C.T.M. Nallur to be released on the occasion of the Prize day 2010. It' is a great privilege for me because the prize Day takes place for the first time in this school and I it's a memorable day in the history of the school I hope this Magazine will be a historical document for the growth of this school.

St.Benedict R.C.T.M. plays a unique role in the formation of boys and girls in the Nallur Division. It provides equal opportunity to learn without any discrimination of rich or poor, and caste or religion. There have been tremend-ous and remarkable achievements in every field during the long years of her existence. it's visible growth is seen in it's expansion of buildings in the number of students and the achievements of it 's past students in their various fields. The cause of these achievements and improvements in the studies and extra curricular activities is due to the genuine, devoted and untiring efforts of past and present principals, staff and students. Jaffna has been always affected by ethnic war. Inspite of all these tragic incidents the Principals and staff have done a marvelous Job in the life of these children through their dedicated services.

When the war in vanni broke out in 2009 the parents of the displaced were trying to admit their children in schools in Jaffna peninsula. I can proudly say this school accommodated many students. The present Principal is kind and flexible so that all those who came for admission were admitted in this school.

The Parents of this school always supported its growth and they have trust and confidence in the Education, discipline and formation the children receive in this school.

I Take this opportunity to thank the Lord for His innumerable blessings He has showered down on this school up to now, for the development of this school and to the dedicated services of the Principal, staff and students.

I congratulate and wish Sr.Maria Malar Joseph the Present Principal and her staff and students for their untiring efforts made for the upliftment of this school. Their joint efforts have now happily resulted in the crowning event of the forth coming first Prize-Day of this school.

I earnestly pray that this school may continue to receive all the graces and strength she needs to face any challenges and difficulties in their on-going journey in the path of Education. May the good Lord continue to bless this school in every way.

**Rev. Sr. Joyce Marie A.C**
*Lourdes convent,*
*Jaffna.*

# அதிபர் அறிக்கை

யாழ். நகரில் நல்லூரின் மத்தியில் ஆரம்பக்கல்வியில் புகழுடன் வளர்ந்து வரும் யா/ நல்லூர் சென். பெனடிக்ற் வித்தியாலய பரிசுத்தின நன்நாளில் முதன்மை விருந்தின ராக கலந்து சிறப்பித்துக் கொண்டு இருக்கும் பெருமதிப்பிற்கும், பேரன்பிற்கும் உரிய யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்களே!

சிறப்பு விருந்தினராக வருகை தந்து எமது வித்தியாலயத்தைப் பெருமைப் படுத்தி நிற்கின்ற எமது மதிப்பிற்குரிய யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர், தமிழ்த் துறைத் தலைவர் சிதம்பரப்பிள்ளை – சிவலிங்கராஜா அவர்களே!

எமது வித்தியாலயத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு எம்மை வழிநடத்தி வருகின்ற அன்பிற்குரிய யாழ். நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சிதம்பரப்பிள்ளை – மாணிக்கராஜா அவர்களே!

அருட்தந்தையர்களே,
அருட்சகோதரிகளே,
கல்விப்புலம் சார்ந்த சான்றோர்களே,
சகோதரப் பாடசாலை அதிபர்களே,
ஆசிரியர்களே,
பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் களே,
பழைய மாணவர் சங்க உறுப்பினர்களே,
அன்பான ஆசிரியர்களே,
பெற்றோர்களே,
நலன் விரும்பிகளே,
அன்பின் மாணவச்செல்வங்களே,

உங்கள் அனைவருக்கும் அன்பு கலந்த வணக்கம். இன்றைய பரிசுத்தின விழாவிற்கு வருகைதந்து எமது பாடசாலையை பெருமைப்படுத்தி எம்மை மகிழ்விக்கும் அனைவரையும் வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

யாழ் கல்வி வலயத்தின் அனைத்து மாணவர்களினதும் கல்வித்தரத்தை உயர்த்து வதற்காக பல்வேறு செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்தி தன் நேரத்தை முழுமையாக அர்ப்பணித்து நல்லதோர் நிர்வாகியாக விளங்கும் பிரதமவிருந்தினர் யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. அருளேஸ்வரி வேதநாயகம் அவர்களே, எமது பாடசாலையில் நடைபெறும் முக்கிய விழாக் களிலும் இன்றைய பரிசுத்தின விழாவிலும் கலந்து சிறப்பிப்பதையிட்டு நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவர் தமிழும், சைவமும் தழைத் தோங்கும் அச்சுவேலியில் அன்னராசா இராசமணி தம்பதிகளுக்கு மகளாகப் பிறந்து அக்குடும்பத்தவர்களுக்கு மட்டு மல்லாது அக்கிராமத்துக்கே புகழையும், பெருமையையும் தேடிக் கொடுத்தார். தனது ஆரம்பக் கல்வியை அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் வித்தியாலயத்திலும்,

அச்சுவேலி சரஸ்வதி வித்தியால யத்திலும் உயர்கல்வியை கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயத்தில் கற்றார்.

இவர் கணிதபாட ஆசிரியராக அச்சு வேலி புனித திரேசாள் மகளிர் வித்தியாலயத்தில் கல்விப்பணியை ஆரம்பித்தார். கற்பித்த காலங்களில் மாணவ உள்ளங்களை துல்லியமாக வென்றெடுத்த கணித நல்லாசானாக அர்ப்பணிப்புடன் சேவையாற்றிக் கொண்டிருந்தவேளையில் கணிதபாட ஆசிரிய ஆலோசகராக நியமிக்கப்பட்டார். கணித பாடத்தில் மாணவர்கள் சிறந்த பெறு பேறுகள் பெறவேண்டும் என்பது, அன்றி லிருந்து இன்றுவரை இவரின் பெருவிருப்பம் ஆகும். முதன் முதலாக கணித, விஞ்ஞான மூலவள நிலையத்தை யாழ். மாவட்டத்தில் நிறுவி கல்வி சமூகத்திற்கு பெரும்பங்கு ஆற்றியுள்ளார்.

மேற்படிப்புக்களைத் தொடர்ந்து கலைமாணி, முதுமாணிப்பட்டங்களைப் பெற்றுக் கொண்டார். கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையிலும் சித்தி பெற்றதன் மூலம் கல்விச்சேவையில் புதிய பரிமாணத் தைப் பெற்று கோட்டக்கல்விப்பணிப்பாளர், வலயக்கல்விப் பணிப்பாளராக படிநிலை வளர்ச்சி அடைந்து மாகாண கல்வி அமைச்சில் ஆரம்பக் கல்விக்கும், முன்பள்ளி அபிவிருத்திக்கும் பொறுப்பாக நியமனம் பெற்று கல்வி அபிவிருத்திக்கு பெரும் பணியாற்றி இருக்கின்றார்.

கல்வியின் முக்கியத்துவத்தை யாவருக்கும் உணரவைப்பதுடன், இறுவெட் டுக்கள் (CD) மூலம் கல்வி விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்திவருவது சிறப்பம்ச மாகும்.

தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளராகச் சேவையாற்றி 10.03.2008 முதல் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப் பாளராகக் கடமையைப் பொறுப்பேற்று எமது வலயத்தின் செயற்பாடுகள் யாழ். மாவட்டத்தில் சிறப்பாக இருக்கவேண்டு மென்ற நோக்கில் கடமையே கண்ணாக கருதிச் செயற்பட்டு வருவதன் காரணமாக, கல்வித்தரங்களின் படிநிலை வளர்ச்சி முன்னேற்றம் அடைந்திருப்பது பெருமைப் பட வேண்டியதொன்றாகும்.

பல்வேறு சிறப்புக்கள் பொருந்திய கல்விப்பணிப்பாளர் இன்று மாணவர் களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்க இருப்பது எமக்கு மகிழ்வைத்தருகிறது.

இன்றைய விழாவிற்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர், பேராசிரியர் சிதம்பரப்பிள்ளை, சிவலிங்க ராஜா அவர்களே, நீங்கள் முதன்முறையாக எங்கள் வித்தியாலயத்திற்கு வருகைதந்து எம்மை பெருமைப்படுத்தியமைக்காக எமது பாடசாலை சமூகம் பேருவகை கொள்கிறது. தங்கள் வரவு நல்வரவாகுக!

இவர் தனது ஆரம்பக்கல்வியை கரவெட்டி யாக்கரு விநாயக வித்தியா சாலையிலும், இடைநிலைக்கல்வியை கட்டைவேலி மெதடிஸ்த மிசன் கல்லூரி யிலும், உயர்கல்வியை கரவெட்டி விக்னேஸ் வராக் கல்லூரியிலும் கற்று கல்வி அறிவு,

ஒழுக்கம் போன்றவற்றில் உயர்ந்து நின்றதோடு பண்பாட்டு விழுமியங்களை தனதாக்கி கற்ற பாடசாலைகளுக்கு பெருமை தேடிக்கொடுத்தார். யாழ் பல்கலைக்கழகத்தில் தமிழ் சிறப்புப் பட்டத்தை பெற்று விரிவுரையாளராக சிறந்த பணியாற்றி பலரது நன்மதிப்பைப் பெற்றார். தொடர்ந்து இளமாணி, முதுமாணி பட்டங்களையும், கலாநிதிப்பட்டத்தினையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பெற்ற இவர் தற்போது அதே பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறையின் தலைவராகப் பணியாற்றி வருகின்றார். தமிழ்த் தொண்டு செய்த நம் முன்னோர்களின் வழிநின்று தமிழ் மொழியின் வளம் பெருக்கி நல்ல தலைமுறை களை உருவாக்கும் நற்பணியாற்றி பலரின் நன்மதிப்பை பெற்றுவருவது குறிப்பிடத் தக்கது. தங்கள் பணிசிறக்க வாழ்த்து கிறோம்.

கௌரவ விருந்தினராக வருகை தந்துள்ள யாழ். நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் அவர்களே ! எங்கள் பாடசாலை யின் வளர்ச்சியில் காட்டிவரும் அக்கறையும் அன்பும் எம்மை மனநிறைவடையச் செய்கிறது. அனைவரோடும் அன்பாகவும், பண்பாகவும் பழகும் இவர் எந்த வேளையி லும் எவருக்கும் உதவிசெய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கோடு துடிப்புடன் சேவையாற்றி வருபவர்.

இவர் அதிபர் நியமனத்திற்கான போட்டிப் பரீட்சையிலும், கனேடிய நாட்டின் புலமைப்பரிசில் பெற்று அதிபர் தகைமைத் திறன் கற்றலுக்கு கனடா சென்று வந்தார். அதிபராக யாழ். சன்மார்க்க மகாவித்தி யாலயத்தில் கடமையை பொறுப்பேற்று சிறந்த நிர்வாகியாகத் திகழ்ந்த இவர் யாழ் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்று 2009ஆம் ஆண்டு நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளராகப் பதவியேற்று பாடசாலைகளுக்கு சிறந்த பணியாற்றி வருவது யாவரும் அறிந்ததே.

அன்பான பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளை எங்கள் கரங்களில் ஒப்படைத்து அவர்களின் படிநிலை வளர்ச் சிகண்டு இன்று பரிசில் பெறுவதைக்காண மகிழ்வுடன் வருகை தந்துள்ளீர்கள். உங்கள் வருகையால் நாம் மகிழ்வடைகின்றோம். நிதி உதவியளித்த தங்களுக்கு நன்றி கூறி வாழ்த்துகின்றோம். நீங்கள் எந்த வேளையிலும் உங்கள் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் தொடர்ந்து அக்கறை யுடன் செயற்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

என் இனிய மாணவச் செல்வங்களே ! நீங்கள் கல்வியிலும், ஒழுக்கத்திலும், இறை பக்தியிலும் சிறந்து உங்கள் எதிர்காலம் சிறப்பாக அமைய இறைஆசி வேண்டி நிற்கின்றேன்.

கல்வியில் கருத்தூன்றி நிற்கும் உத்தியோகத்தர்களே !

எமது வித்தியாலயத்தில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் சிறந்த முறையில் நடைபெறுவதற்கு பல்வேறு வழிகளிலும், மேற்பார்வை செய்தும் ஒழுங்குபடுத்தியும் ஆலோசனை வழங்கியும், ஆளணி

வளங்களை தந்துதவியும் வருகின்றீர்கள். உங்கள் அனைவரையும் வரவேற்று பாடசாலை சமூகத்தின் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின் றேன்.

இவ்வித்தியாலய வளர்ச்சிக்காக உழைத்த முன்னாள் அருட்சகோதரிகள், ஆசிரியர்களை மனதில் இருத்தி இறையா சீருடன் 2008–2009 காலப்பகுதிக்கான அதிபர் அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிப் பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**கல்விசார் செயற்பாடுகள்**

எமது வித்தியாலயமானது ஒரு ஆரம்பப் பாடசாலையாக இருப்பதனால் நாம் வருடந் தோறும் பெற்றோர் தின விழாவினையும், தரம் 5 புலமைப்பரிசிற் பரீட்சையிற் சித்தி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் முகமாகப் பாராட்டு விழாவினையும் முன்னெடுத்து வருகின்றோம். அத்துடன், தமிழ்த்தினம், ஆங்கில தினம் ஆகிய நிகழ்வுகளை நடாத்தி மாணவர்களை பல வழிகளிலும் ஊக்குவித்து வருகின்றோம். இருந்தபோதும் நவீன கல்வி முறைக்கு ஏற்ப அனைத்து மாணவர்களையும் ஊக்குவித்து மேலும் கல்வியிலே சிறந்து விளங்க வேண்டும் என்ற உயரிய நோக்கோடு பல வருடங் களின் பின் இப்பரிசளிப்பு விழாவினை ஒழுங்கு செய்துள்ளோம்.

**மாணவர் விபரம்**

| | 2008 | 2009 |
|---|---|---|
| ஆண்கள் | 137 | 188 |
| பெண்கள் | 133 | 189 |
| மொத்தம் | 270 | 377 |

**ஆசிரியர் விபரம் :**

எமது வித்தியாலயத்தில் தற்போது அதிபருடன் 14 நிரந்தர ஆசிரியர்கள் சேவையாற்றி வருகின்றனர்.

| இல | ஆசிரியர் பெயர் | தகைமை | சேவை |
|---|---|---|---|
| 01. | அருட்செல்வி.மரியமலர் ஜோசவ் | B.A.Dip.in.Edu | S.L.T.S.I |
| 02. | திருமதி.ஜெ.விமலன் | B.A Sp.Trd.Primary | S.L.T.S.I |
| 03. | திரு.சி.குலசிங்கம் | Dip.in.Music | S.L.T.S. 2 I |
| 04. | திருமதி.தி.மனோகரநாதன் | Sp.Trd.Primary | S.L.T.S. 2 I |
| 05. | திருமதி.ச.சிறீதரன் | Dip.in.Music | S.L.T.S. 2 II |
| 06. | திருமதி.டொ.சுவேந்திரராஜன் | Sp.Trd.R.C | S.L.T.S. 2 II |
| 07. | திருமதி.நே.இரவீந்திரன் | Sp.Trd.Primary | S.L.T.S. 2 II |
| 08. | திருமதி.ம.கொலீந்திரன் | B.A.Sp.Trd.Primary | S.L.T.S. 3 II |
| 09. | திருமதி.ஜே.ஏ.வி.அன்ரன் | Sp.Trd.English | S.L.T.S. 3 I |
| 10. | திருமதி.க.சிவகாந்தி | Sp.Trd.Primary | S.L.T.S. 2 I |
| 11. | திருமதி.ஜெ.பேரின்பநாதன் | Sp.Trd.Primary | S.L.T.S 2 I |
| 12. | திருமதி.த.சாம்சன் ஜெராட் | Asst.Teacher | |
| 13. | திருமதி.ற.சர்வேஸ்வரன் | Asst.Teacher | |
| 14. | செல்வி.கோ.அரியரட்ணம் | Asst.Teacher | |

**மனமகிழ்வோடு வரவேற்கின்றோம்**

எமது வித்தியாலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறை இருந்தபோது பாடசாலையில் இணைந்து சிறந்த பணியாற்றி எமக்கு பல்வேறுபட்ட வகையில் ஒத்துழைப்பு வழங்கி தற்போது உதவி ஆசிரியர்களாக நியமனம் பெற்று தமது பணியைத் தொடர்கின்ற,

| | |
|---|---|
| திருமதி. சர்வேஸ்வரன் | றஜித்தா |
| திருமதி. ஷாம்சன் | தனசீலி |
| செல்வி. அரியரட்ணம் | கோசலை |
| செல்வி. அலோசியஸ் | தர்சினி |

ஆகியோரை பாடசாலை சமூகத்தின் சார்பில் அன்போடு வரவேற்று அவர்கள் பணி சிறக்க வாழ்த்துகின்றேன்.

தொடர்ந்தும் பாடசாலையில் தொண்டர் ஆசிரியராகத் தனது சேவையை வழங்கி வருகின்ற செல்வி. றொனிற்றா யேசுதாதன் அவர்களுக்குப் பாடசாலைச் சமூகத்தின் சார்பில் நன்றி கூறுவதோடு அவரின் வாழ்வு சிறக்க மனமார வாழ்த்து கின்றோம்.

எமது பாடசாலைக்கென நடன ஆசிரியை இல்லாத போதிலும் அக்குறை யினை நிவர்த்திசெய்து எமது மாணவர் களின் கவின் கலைவளர்ச்சிக்குத் தன்னால் இயன்றளவு பங்களிப்பினையும் வழங்கி, மாணவர்களைப் பயிற்றுவித்ததுடன் எமது பாடசாலை இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டிகளின்போது இடைவேளை நிகழ் வினை நெறியாள்கை செய்து தனது பங்களிப்பினை திறம்பட ஆற்றிய செல்வி. சிவஞானம் திஷா அவர்களுக்கு எமது நன்றியினை கூறி இவரது வாழ்வு வளம்பெற வாழ்த்துகின்றோம்.

**இணைப்புப் பெற்ற ஆசிரியர்கள்**

திருமதி. மார்க்ஸ்வெஸ்வி கவிதா, திருமதி. இராஜேஸ்வரன் மதிவதனி, செல்வி. புவனா மரியநாயகம், திருமதி. பிறின்சிலின் அருள்நேசராஜா ஆகியோர் இணைப்பு பெற்று எமது பாடசாலையில் கடமை உணர்வோடு சிறந்த சேவையை ஆற்றி மீண்டும் தமது நிரந்தரப் பாடசாலை களுக்குச் சென்றுள்ளனர். அவர்களின் சேவைக்கு நன்றி கூறி அவர்களின் சேவை மேலும் சிறப்படைய வாழ்த்துகின்றேன்.

**இடமாற்றம் - 2009**

இவ்வித்தியாலயத்தில் 20ஆண்டுகள் பணியாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற திருமதி. ப.ஸ்ரீராமன் ஆசிரியை ஆரம்பக்கல்வியை திறம்பட கற்பித்ததுடன், பல்வேறு இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப் புடன் செயற்பட்டவர். இவர் சென்ற பாடசாலையிலும் இவரின் பணி சிறக்க வாழ்த்துகின்றேன்.

**ஓய்வு பெற்றோர் - 2008**

திருமதி. க.இலங்கநாதன் ஆசிரியை (பயிற்றப்பட்ட கணிதம்) அவர்கள் இவ்வித்தி யாலயத்தில் 5ஆண்டுகள் பணியாற்றியதுடன் ஆங்கிலக் கல்விக்கு ஆசிரியர் பற்றாக்குறை இருந்த போது ஆங்கிலப் பாடத்தினை விருப்புடன் பொறுப்பெடுத்துச் சிறப்பாக கற்பித்தார். மாணவர்களை பல்வேறு போட்டிகளிற்

பங்குபெறச் செய்து வெற்றிபெற முன்னின்று உழைத்து பலருடைய பாராட்டையும் பெற்றார். அவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றேன்.

## மன்றச் செயற்பாடுகள்

### தமிழ் மன்றம்

**பொறுப்பாசிரியர்:**
செல்வி ம.புவனா (2008)
திருமதி ம.கொலிந்திரன் (2009)

இம்மன்றமானது மாணவர்களின் தமிழ்மொழித்திறன் அறிவை மேம்படுத்தும் வகையில் செவிமடுத்தல், பேச்சு, வாசிப்பு, எழுத்து திறன்களை விருத்தி செய்யும் வகையிற் பல்வேறு துறைகளிலும் செயற்பட்டு வருகிறார்கள். தமிழ்தர வட்டத்தின் ஊடாக, மாணவரிடையே தினமும் வாசிப்பு, சொல்வதெழுதுதல் பயிற்சிகள் அளித்துவருகின்றமை குறிப்பிடத் தக்கது. சிறப்பான முறையில் வருடந்தோறும் முத்தமிழ் விழாவினை நடாத்தி மாணவர்களிடையே அவர்களது ஆற்றல்களை வெளிப்படுத்த போட்டிகளை நடாத்தி பரிசில்கள் வழங்குதல். கலைத் துறைச் செயற்பாடுகளில் மாணவர்களின் திறன்களை ஊக்குவித்து, தலைமைத்துவப் பண்பு விருத்தியை வளர்த்தெடுக்கப் பொறுப்பாசிரியருடன் இணைந்து செயற்படும் செல்வி. யே.றொனிற்றா, செல்வி சி.திஷா, திருமதி க.சிவகாந்தி, திருமதி ஜெ.பேரின்பநாதன் ஆகியோருக்கு பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### கிறிஸ்தவ மன்றம்

**பொறுப்பாசிரியர் :**
திருமதிடொறின்சுவேந்திரராஜன்
(2008, 2009)

இம்மன்றமானது கத்தோலிக்க மாணவர்களின் மறை அறிவை வளர்ப்பதுடன், அவர்கள் இறை அன்பிலும், பக்தியிலும் வளர்வதற்கு பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். வித்தியாலயத்தில் நடைபெறும் விசேட நிகழ்வின்போது திருப்பலி நிறைவேற்றுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டு இத்திருப்பலியில் அனைத்து ஆசிரியர்களும், மாணவர்களும் கலந்துகொள்வது சிறப்பான அம்சமாக காணப்படுகிறது. மறைக்கல்விப் போட்டி, ஒளிவிழா, போன்றவற்றை நடாத்து வதற்கு சிறப்பாகப் பணியாற்றி, வரும் பொறுப் பாசிரியருடன் இணைந்து செயற்படும் கத்தோலிக்க ஆசிரியர்கள் அனைவருக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் தொடர்ந்தும் இம்மன்றம் சிறப்பாகச் செயற்பட இறை ஆசிவேண்டி வாழ்த்துகின்றேன்.

### இந்துமன்றம்

**பொறுப்பாசிரியர் :**

திருமதி ப.ஸ்ரீராமன் (2008)
திருமதி தி.மனோகரநாதன் (2009)

இம்மன்றமானது மாணவர்களின் பக்திநெறியை வளர்க்கும் நோக்குடன் இறை நம்பிக்கையையும், சமய அறிவை வளர்க்கும் செயற்பாடுகளையும்

மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன், வாணி விழாவினையும் சிறப்பாக நடாத்துவதுடன் சைவப்பரிபாலன சபை, மாநகரசபையினால் நடாத்தப்படும் சமயப் பரீட்சைகளில் மாணவர்களை ஈடுபடுத்தி கூடுதலான மாணவர்கள் சான்றிதழ்கள் பெறு வது சிறப்பம்சமாகும். பொறுப்பாசிரியர் களுடன் இணைந்து செயற்படும் திரு. குலசிங்கம், திருமதி நே.ரவீந்திரன், திருமதி ஜெ.விமலன், திருமதி ஜெ.பேரின்பநாதன் ஆகியோருக்கு எனது பாராட்டுக்கள். மேலும் சிறப்பாகச் செயற்பட வாழ்த்துகின்றேன்.

**ஆங்கிலமன்றம்:**

**பொறுப்பாசிரியர்கள் :**
**திருமதி க.இலங்கநாதன் ,**
**அ.கோசலை (2008)**
**திருமதி.ஜே.ஏ.வி.அன்ரன் (2009)**

எமது வித்தியாலயத்தில் தற் போதைய நவீன தொடர்பாடல் முறையில் ஆங்கில மொழியின் மகத்துவத்தை உணர்ந்து மாணவர் களுக்கு வகுப்பறைக் கற்பித்தலுடன் மட்டுமில்லாது, மேலதிக செயற்பாடுகளான ஆங்கிலச் சொற் பிரயோகங்களைத் தகுந்தமுறையில் காலைக் கூட்டத்தில் மாணவர்களுக்கு வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். அத்துடன், இம்மன்றமானது ஆங்கில தினத்தினையும் வருடாவருடம் முன்னெடுத்து வருகின்றது. இதன்மூலம் கோட்ட, வலயமட்ட போட்டிகளில் பங்குபற்றி பரிசில்கள் பெறுவதும் பாராட்டத்தக்க தாகும்.

**விளையாட்டுத்துறை**

**பொறுப்பாசிரியர் :**
**செல்வி ம.புவனா (2008, 2009)**

மாணவர்கள் உடல், உள ஆரோக் கியம் உடையவர்களாகவும், வெற்றி தோல்விகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்குவிருத்தி உடையவர்களாக வளர்வதற்கு விளையாட்டுத்துறையினர் செயற்பட்டு வருவது பாராட்டுவதற்குரியது. பாடசாலைமட்ட இல்ல மெய்வல்லுநர் போட்டி வருடா வருடம் சிறப்பாக நடாத்தப்படுகிறது. மற்றும் கோட்ட, வலயமட்ட போட்டிகளிற் பங்குபற்றச் செய்து வெற்றியீட்டியுள்ளனர். பொறுப்பாசிரியருடன் இணைந்து செயற்படும் உபஅதிபர் திருமதி ஜெ.விமலன், திருமதி ஜே.ஏ.வி அன்ரன், செல்வி அ.கோசலை, செல்வி.சி.திஷா ஆகியோ ருக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மேலைத்தேய வாத்தியக்குழு**

எமது வித்தியாலயத்தில் உள்ள இக்குழுவானது செல்வி அ.தர்சினி, திருமதி ற.சர்வேஸ்வரன், செல்வி யே.றொனிற்றா ஆகியோரின் மேற்பார்வையில் பாராட்டத் தக்க வகையில் வித்தியாலயத்தின் சிறப்பு நிகழ்ச்சிகளில் விருந்தினர்களை வரவேற்பதிலும் விழாக்களின்போது தமது ஆற்றல்களை வெளிப்படுத்தி அனை வரினதும் பாராட்டுக்களைப் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இக்குழுவினருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### சாரணியம்

**குருளைச் சாரணர்**

**பொறுப்பாசிரியர் :**
செல்வி ம.புவனா (2008
செல்வி அ.கோசலை (2009)

**சிறுதோழியர்**

**பொறுப்பாசிரியர் :**
திருமதி டொ.சுவேந்திரராஜன்

இவ்வித்தியாலயத்தில் 1998ஆம் ஆண்டு குருளைச்சாரணர், சிறுதோழியர் அமைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு உற்சாகத்துடன், மகிழ்ச்சிகரமாக செயற்பட்டு வருகின்றன. இவர்கள், தமது பொறுப்புக்களை, கடமையுணர்வுடனும், சிரத்தையுடனும் மேற்கொண்டு வருகின்றனர். வாரந்தோறும் வியாழக்கிழமைகளில் மாணவர்களுக்கான கூட்டம் கூட்டப்பட்டு அதில் மாணவர்களின் கடமைகள், பொறுப்புக்கள் கூறப்பட்டு ஆடல், பாடல் மூலம் அவர்களின் திறன்களை வளர்க்கின்றனர். பொறுப்பாசிரியர்களுடன் இணைந்து செயற்படும் திருமதி ஏ.வி அன்ரன், திருமதி த.ஷாம்சன், திருமதி. ஜெ.பேரின்பநாதன் ஆகியோரை பாராட்டி எதிர்காலத்திலும் இவர்கள் பணி இன்னும் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

**மாணவ முதல்வர் குழு**

**பொறுப்பாசிரியர் :**
**திருமதி ஜெ.விமலன் (2008, 2009)**

மாணவர்கள் ஒழுக்கத்தில் சிறந்து விளங்குவதற்கும், தலைமைத்துவப் பண்புகளில் வளர்வதற்கும், பாடசாலையின் நிர்வாகத்திற்கு தம்மால் இயன்ற பணிகளைச் செய்வதற்கும் வழிப்படுத்தப்பட்டு வருகின்றனர். பாடசாலைக்கு நேரத்துடன் வருகைதந்து தமது கடமைகளைச் செய்வதுடன் காலைக்கூட்டத்திற்கு மாணவரை ஒழுங்குபடுத்தி, அமைதிபேண ஆசிரியர்களுக்கு உதவியாக செயற்படுகின்றார்கள். இவர்களுக்கு பாராட்டுக்களைத் தெரிவித்து, இவர்களின் பணி தொடர்ந்தும் நடைபெற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

### ஆசிரியர் நலன்புரிச் சங்கம்

**2008**
தலைவர் : திருமதி ஜெ.விமலன்
செயலாளர் : திருமதி ப.ஸ்ரீராமன்
பொருளாளர்: திருமதி தி.மனோகரநாதன்

**2009**
தலைவர் : திருமதி ஜெ.விமலன்
செயலாளர் : திருமதி க.சிவகாந்தி
பொருளாளர் : திருமதி ஜே. ஏ.வி.அன்ரன்

பாடசாலையின் அதிபரையும், சகல ஆசிரியர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டு அவர்களின் இன்பதுன்ப நிகழ்வுகளில் மனித நேயத்துடன் பங்குபற்றி பங்களிப்பும் நல்கி வருகின்றது. அத்துடன் ஓய்வுபெறும் மற்றும் இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்களைக் கௌரவித்தும் வருகின்றது. மேலும் எதிர்காலத்தில் பயனுள்ள வகையிற் செயற்பட்டு நற்சேவைக்கழகமாகத் திகழ வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

**2008**

**தலைவர்** : அதிபர் (பதவிவழி)
**செயலாளர்** : திரு இ.அரசகுலசூரியன்
**பொருளாளர்** : திருமதி நே.ரவீந்திரன்

**2009**

**தலைவர்** : அதிபர் (பதவி வழி)
**செயலாளர்** : திரு.நா.குமணதாஸ்
**பொருளாளர்** : திருமதி.நே.ரவீந்திரன்

இவ்வித்தியாலயத்தின் அபிவிருத்திக்கு தம்மால் இயன்ற முழு ஒத்துழைப்பினையும் வழங்கும் அமைப்பாக இச்சங்கம் விளங்குவது குறிப்பிடத்தக்கது. வித்தியாலயத்தின் கல்விசார் வளங்கள், விளையாட்டு அபிவிருத்திப்பணிகள், பௌதிக வளங்களின் அபிவிருத்தி பராமரிப்பு போன்ற செயற்பாடுகளுக்கு தோளோடு தோள் நின்று பக்கபலமாக இயங்கி வருகின்றனர். இத்தகைய செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் சங்கச் செயலாளர்கள், உறுப்பினர்கள், நலன்விரும்பிகளும் குறிப்பிடத்தக்கவர்கள். கல்வி, வள அபிவிருத்திகளில் இவர்களின் பங்களிப்பு பாராட்டத்தக்கது. இச்சங்கத்தின் சேவை பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என ஆசிக்கின்றேன்.

## பழைய மாணவர் சங்கம் 2008, 2009

**தலைவர் :** அருட்சகோதரி மரியமலர் யோசவ்
**செயலாளர்:** திரு.ஆர்.நிரோஷானந்
**பொருளாளர்:** செல்வி.அ.தர்சினி

வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கும், நடைபெறும் அனைத்து செயற்பாடுகளுக்கும் தமது மனப்பூர்வமான ஒத்துழைப்பினை வழங்கி வருகின்றனர். 2009ஆம் ஆண்டு தமது கன்னி முயற்சியான ஓர் அதிஷ்டலாப சீட்டிழுப்பின்மூலம் எமது வித்தியாலயத்திற்கு ஒரு தொகைப் பணத்தினை தந்துதவியமை பாராட்டத்தக்க விடயமாகும். இவர்கள் எப்பொழுதுமே வித்தியா லயத்திற்கு பக்கபலமாக இருப்பார்கள் என எதிர் பார்க்கின்றேன்.

## எதிர்காலத் தேவைகள்

**விளையாட்டு மைதானம்**

எமது வித்தியாலய மாணவர்கள் உடல், உள ஆரோக்கியம் உடையவர்கள் ஆகவும், மனப்பாங்கு விருத்தி உடையவர்களாகவும் ஊக்குவிப்பதற்குப் பாடசாலைக்கென நிலையான விளையாட்டு மைதானம் ஒன்றினை கொள்வனவு செய்யவேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும். இதனை எமக்கு நிவர்த்திசெய்ய கல்வித் திணைக்களத்தையும், பெற்றோரின் பேருதவியையும் நாடிநிற்கின்றோம்.

**ஆசிரியர் பற்றாக்குறை :**

எமது வித்தியாலயத்தின் மாணவர்களின் கல்வியுடன் கலைத்திறனை வளர்த்தெடுப்பது இன்றைய தேவையாகும். எம் வித்தியாலயத்தில் பல்வேறு நிகழ்வுகள் நடாத்தப்படுவது தாங்கள் யாவரும் அறிந்ததே. அந்த வகையில் இப்பாடசாலைக்கு அழகியல் ஆசிரியரைத் தந்துதவும்படி கல்வித் திணைக்களத்தை வேண்டி நிற்கின்றோம்.

அடுத்து இன்றைய நவீன கற்பித்தல் முறைக்கு ஏற்ப மாணவர்களுக்கு கணினி அறிவினை வழங்குவது பாடசாலையின் பணியாகும். அந்த வகையில் எமக்கு கணினி கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரை தந்துதவும்படி நாடி நிற்கின்றோம்.

**உவகையுடன் உதவிக்கரம் நீட்டுபவர்**

எமது வித்தியாலய மாணவர்களில் அதிகஅக்கறையும், கரிசனையும் கொண்டு அவர்களுக்கு பல்வேறு வகையில் உதவி புரிந்து வருகின்ற கனடா வாழ் திரு திருமதி பாலகுமார் குடும்பத்தினருக்கு எமது பாடசாலை சமூகம் என்றும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது. வருடந்தோறும் நடைபெறும் ஒளிவிழா நிகழ்வில் மாணவர் களுக்குத் தேவையான கற்றல் உப கரணங்களை வழங்கி அவர்களது கற்றலை ஊக்குவித்து வருவதையிட்டு நாம் அவரை உளமாரப் பாராட்டுகின்றோம்.

அத்துடன் பொருளாதார வசதி குறைந்த மாணவர்கள் தம் கல்வியைத் தொடர அவர்களுக்கு நிதியுதவி வழங்கி வருவதை யிட்டு எமது பாடசாலைச் சமூகம் சார்பாக நன்றிகூறி நிற்கின்றேன்.

அண்மையில் நலன்புரி முகாம் களில் இருந்து வருகைதந்த அனைத்து மாணவர்களுக்கும் காலணிகளை வழங்கி அவர்களை மகிழ்வித்தமை என்றும் எம்மால் நினைவு கூரப்பட வேண்டியதொன்றாகும்.

**நன்றியோடு நினைவு கூறுவோம்**

இவ்விழா இனிதே நடைபெற இறையாசி வேண்டி இறைவனுக்கு நன்றி கூறிக் கொண்டு வித்தியாலயத்தை சிறந்த முறையில் நடாத்தவும், நிர்வாகத்தை திறம்பட நடாத்தவும், கல்வியில் உயரவும் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து, பொறுப்பெடுத்து ஒத்துழைப்பு நல்கிவரும் என் அன்புக்குரிய ஆசிரியர்களுக்கும் நிறைவான நன்றிகள்.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தின ராக கலந்து கொண்ட அன்பிற்கும், பெருமதிப்பிற்குமுரிய வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்களுக்கு பாடசாலை சமூகத்தின் சார்பில் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின் றேன்.

சிறப்பு விருந்தினராக கலந்து சிறப் பித்துக் கொண்டு இருக்கும் பேராசிரியர் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் திரு.சி.சிவலிங்கராஜா அவர் களுக்கு பாடசாலை சார்பாக மனமார்ந்த நன்றி களைத் தெரிவித்துக் கொள்கின் றேன்.

கௌரவ விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக்கொண்டு இருக்கும் நல்லூர்க் கல்விக்கோட்டப் பணிப்பாளர் அவர்களுக்கு பாடசாலை ஆசிரியர், மாணவர்கள் சார்பாக மனமார்ந்த நன்றிகள்.

எமது அழைப்பை ஏற்று வருகை தந்துள்ள அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், கல்விப்புலம் சார்ந்த சான்றோர்கள், அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

நிறைவாக எனது அறிக்கையை ஒழுங்காகவும், பொறுமையாகவும் இருந்து கேட்ட அனைவருக்கும், மாணவச் செல்வங்களுக்கும் என் நன்றியைக் கூறிக் கொள்கின்றேன்.

இம்மலரினை சிறந்த முறையில் மிகக் குறுகிய காலத்தில் அச்சிட்டுத் தந்த கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் எனது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்து உங்கள் அனைவருக்கும் இறையாசீர் வேண்டி எனது அறிக்கையை நிறை செய்கின்றேன்.

## மூன்றெழுத்து

வாழ்வு - மூன்றெழுத்து
பண்பிலே சுரக்கும் அன்பு - மூன்றெழுத்து
அன்பிலே சுரக்கும் காதல் - மூன்றெழுத்து
காதல் விளைவிக்கும் வீரம் - மூன்றெழுத்து
வீரர் செல்லும் களம் - மூன்றெழுத்து
களத்திலே றெும் வெற்றி - மூன்றெழுத்து
அந்த வெற்றிப் பாதைகான அறிவு - மூன்றெழுத்து

# யா/நல்லூர் சென். பெனடிக்ற் வித்தியாலய வரலாறு

திருமதி டொ. சுவேந்திரராஜன்
ஆசிரியை,
யா/ நல்லூர் சென்.பெனடிக்ற் வித்தியாலயம்

யா/நல்லூர் சென். பெனடிக்ற் றோ.க.த.க. வித்தியாலயம், யாழ். நகரின் கச்சேரி நல்லூர் வீதியில் நல்லூர்க் கோட்டப் பாடசாலைகளுள் நூற்றாண்டுகளைக் கடந்த ஒரு முன்னணி ஆரம்பப் பாடசாலை யாகத் திகழ்ந்துவருகின்றது. இப்பாடசாலை 1903ஆம் ஆண்டு புனித ஆசீர்வாதப்பர் ஆலயம் உருவாக்கப்பட்டபின் 1904ஆம் ஆண்டில் பேரறிஞர் சுவாமி ஞானப்பிரகாசர் ஆசீர் வாதப்பர் பங்கிற் பணியாற்றிய பொழுது விசுவாசிகளின் ஆன்மீகத் தேவையை மட்டும் நோக்காது சமூக மேம்பாட்டினையும் கருத்திற் கொண்டு கல்விப்பணிக்கும் அதிக முக்கியத் துவம் கொடுத்து மறுமலர்ச்சியை ஏற்படுத்த முனைந்தார். அதன் விளைவாக இப்பாடசாலை 1905.02.21 ஆம் திகதி யாழ் மறைமாவட்ட ஆயர் வந்தனைக்குரிய யூலன் ஆண்டகையின் அனுசரணையுடன் கத்தோலிக்க சமய வளர்ச் சிக்கும், தமிழ் மொழி வளர்ச்சிக்கும் அரும் பணிபுரிந்த அமரர் அருட்திரு நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசிரியார் அடிகளாரால் ஆசீர் வாதப்பர் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. அரசாங்கம் 1965இல் பாடசாலைகளைப் பொறுப்பேற்ற நாள்வரை இப்பாடசாலை கத்தோலிக்க மிசனின் பொறுப்பிற் சிறப்புடன் இயங்கிவந்தது.

இப்பாடசாலைச் சுற்றாடலில் வாழ்ந்த மக்கள் மிகவும் வாழ்க்கை வசதி குறைந்தவர் களாகவே காணப்பட்ட பொழுதிலும் தமது குழந்தைகளின் வளமான எதிர்காலம் அவர்கள் பெற்றுக்கொள்ளும் கல்வியிலே தங்கியுள்ளது. அதிலும் குறிப்பாக ஆரம்பக் கல்வியிலே தங்கி யுள்ளது என்பதை உணர்ந்து கல்வியைப் பெறவேண்டும் என்ற ஆர்வமுள்ளவர் களாகக் காணப்பட்டனர். ஆரம்பத்தில் ஆலயத்தின் விறாந்தையிற் சில பிள்ளைகளுடன் ஆரம்பிக் கப்பட்ட கல்விப் பணிக்கு முதல் ஆசிரியராக மறைஆசிரியர் இறப்பியேற்பிள்ளை நியமிக்கப் பட்டார். ஆரம்பத்தில் ஓர் ஆசிரியருடன் காணப்பட்ட இப்பாடசாலை காலப் போக்கில் இருவர் மூவராக அதிகரித்துச் சிறிது சிறிதாக வளர்ச்சி யடையத் தொடங்கியது. இப்பாடசாலை யின் அதிபர்கள் பலர் சிறப்பாகக் கடமையாற்றி னார்கள்.

இதன்பின் இப்பாடசாலைக்கு அருட் சகோதரி ஒருவர் அதிபராகவேண்டும் என்ற பங்குமக்களின் விருப்பத்திற்கிணங்க யாழ். மறைமாவட்ட ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்ட கையின் முயற்சியினால் அப்போஸ் தலிக்க கார்மேல் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி ஸ்ரனிஸ்லஸ்மேரி அவர்கள்

1978ஆம் ஆண்டு இப்பாடசாலைக்கு அதிபராக நியமிக்கப்பட்டார். இவரது காலத்திற் பாழடைந்திருந்த ஒரு சிறிய கட்டடம் மறுசீரமைக்கப்பட்டுப் புதுப்பொலிவு பெற்றது. மாணவர் தொகையும் அதிகரிக்கத் தொடங்கியது. கல்வித்துறை, கலைத்துறை, விளையாட்டுத்துறை ஆகியவற்றில் ஏனைய பாடசாலையுடன் போட்டிபோட்டு முன்னணி யில் நிற்கத் தொடங்கியது.

அருட்சகோதரி அவர்கள் 6 வருடங்கள் சிறப்பாகப் பணியாற்றியதுடன் பெற்றோரின் மத்தியிற் கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

இவரைத் தொடர்ந்து 1984ஆம் ஆண்டு அருட்சகோதரி எலொய்சா பாடசாலையைப் பொறுப்பேற்றார். இவர் குறுகிய காலம் பணி புரிந்தாலும் மாணவர்களை இறைபக்தியிலும் பண்பிலும் வளர்க்கப் பல்வேறு முயற்சிகளை மேற் கொண்டார்.

அருட்சகோதரியைத் தொடர்ந்து 1985 ஆம் ஆண்டு அருட்சகோதரி லைசா அவர்கள் பாடசாலையைப் பொறுப்பேற்றார். குறிப்பாக வசதிகுறைந்த மாணவர்கள் இனங் காணப்பட்டு அவர்களுக்குப் பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்தார். மாணவர்களும் கல்விகற்க வழி அமைத்து, மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்து வதில் முனைப்புடன் செயற்பட்டார். நிர்வாகத் திறன்கொண்ட இவர் எல்லோருடனும் அன்பாகப் பழகுவார். இவருடைய சேவைக் காலத்திலும் இப்பாடசாலை கோட்ட வலயமட்ட (விளையாட்டு, கவின் கலை) போட்டிகளிற் பங்குபற்றி முதன்மையான இடங்களைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கதாகும். மாணவர்கள் மத்தியில் ஆங்கில அறிவின் முக்கியத்துவத்தை உணர்த்தி அனைவருக்கும் ஆங்கிலத்தைக் கற்பதற்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார். அவரது காலப்பகுதி இப்பாடசாலை வரலாற்றிற் சிறப்பான காலமாக அமைந்தது.

அவரைத் தொடர்ந்து 1994ஆம் ஆண்டு அருட்சகோதரி செல்வராணி இப்பாட சாலையைப் பொறுப்பேற்றார். இவரது காலப் பகுதியிற் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியது. யாழ் நகர மக்கள் முழுமையாக இடப்பெயர்வைச் சந்தித்ததுடன் உடைமைகள் பலதும் அழிக்கப்பட்டபோது எமது பாடசாலையின் கட்டிடங்கள், ஆவணங்கள் முழுமையாக அழிக்கப்பட்டன. 1996ஆம் ஆண்டு மீள் குடியேற்றத்தின் பின்னர் அதிபர் அவர் களாற் பாடசாலை புனரமைக்கப்பட்டது. இவரது பணியும் இப்பாட சாலையின் வளர்ச்சிப்படியில் முக்கியமானது.

இவரைத் தொடர்ந்து 1997ஆம் ஆண்டு அருட்சகோதரி மேரிதேவநேசம் பாடசாலையைப் பொறுப்பேற்றார். மாணவர் களின் எண்ணிக்கை அதிகரிப்புக்கு ஏற்பப் போதிய கட்டிடங்கள் இல்லாமை. இப்பாட சாலையின் பெரும் குறையாக இருந்ததை உணர்ந்த அதிபர் அவர்களின் விடா முயற்சி

யாலும், அயராத உழைப்பினாலும் பாடசாலைக்குத் தேவையான காணியைக் கொள்வனவு செய்து பொறுப்பான நிறுவனங்களுக்குச் சென்று, அணுகவேண்டிய முறையில் அவர்களை அணுகி, எமது மாணவச் செல்வங்கள் வசதியாகக் கல்வி கற்பதற்கு ஏற்றதாக ஓர் மூன்று மாடிக் கட்டிடத்தை அமைத்ததும், மாணவர்களின் கல்வியின் வளர்ச்சியில் அவர் ஆற்றிய பங்கு எம்மக்கள் அனைவராலும் நினைவு கூரப்பட வேண்டிய ஒன்றாகும். இவரது காலத்திலும் எமது பாடசாலையானது கல்வியில்மட்டுமன்றி ஏனைய துறைகளிலும் முன்னணிப் பாடசாலை யாகத் திகழ்ந்தது. குறிப்பாக, விளையாட்டு, கவின்கலை, ஆங்கில தினம் ஆகிய போட்டி களிலும் மாணவர்கள் பங்குபற்றி முதல் இடங்களைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் பௌதிகவளம், ஆசிரியவளம் ஆகியவற்றைச் சீர் செய்வதில் முனைப்புடன் செயற்பட்டார். கல்வியோடு இணைப்பாட விதானச் செயற்பாட்டிலும் அக்கறையோடு செயற்பட்டுப் பாடசாலை மேலைத்தேய வாத்தியக்குழு, சிறு தோழியர், குருளைச்சாரணர் போன்ற அமைப்புக்களை உருவாக்கி மாணவர்கள் நல்ல விழுமியங்களைப் பெற வழிகோலினார். அத்துடன் இவர் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்கள் என்பவர்களுடன் மிகவும் நட்புடன் உறவாடி, அவர்கள்மூலமாக இப்பாடசாலையின் வளர்ச்சியைக் கட்டி எழுப்புவதிலும் தன்னால் இயன்ற பங்காற்றினார்.

இவரைத் தொடர்ந்து 2007ஆம் ஆண்டு அருட்சகோதரி மரியமலர் யோசெவ் அவர்கள் இப்பாடசாலையைப் பொறுப்பேற்றார். மாணவர்களின் கல்வித்தரத்தை மேன்மேலும் உயர்த்தவேண்டும் என்ற நோக்கத்தோடு பல்வேறு செயற்றிட்டங்களை வகுத்துச் சிறப்பாக நடைமுறைப் படுத்தி வருகின்றார். அந்த வகையில் எமது பாடசாலையின் கல்விப் பெறுபேறு முதன் முறையாக அதிகரித்துள்ளது சான்றாகும். மாணவர்களின் ஆங்கில, கணினி அறிவின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதை எங்கள் மாணவர்களும் சிறப்பாகப் பெற வேண்டுமென்ற நோக்குடன் பலதிட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. எமது பாடசாலையிற் சிறந்த அதிபர் அலுவலகம் இல்லாத குறையை நீக்கப் புதிய அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டு நவீன வசதிகளுடன் புனரமைக்கப்பட்டுச் செயற்படுகின்றது. மாணவர்கள் மகிழ்ச்சிகரமான கல்வியைக் கற்க வேண்டும் என்ற நோக்குடன் பாடசாலை வகுப்பறைகளும், சுற்றாடலும் அழகுபடுத்தப்பட்டு மெருகூட்டப்பட்டிருக்கின்றது. சிறப்பான கவின் நிலை எங்கும் பேணப்பட்டு வருகின்றது. பாடசாலைக்குத் தேவையான ஒலி பெருக்கி வசதிகள், கணினி, O.H.P என்பன பெறப்பட்டு மாணவர்கள் சிறப்பான, நவீன கல்வியைப் பெற ஆளுமைமிக்க நல்ல விழுமியங் களைக் கொண்ட ஒரு மாணவ சமுதாயத்தை உருவாக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு செயற்படுகின்றது. இவ்வித்தியாலயமானது "உண்மை, தூய்மை, நேர்மை ஒளிர்க" என்ற மகுட

வாசகத்தைத் தன்னகத்தே கொண்டு, கல்வியோடு ஆன்மீகத்திலும் சிறந்து விளங்கக்கூடிய வகையில் இவ்வித்தியாலயம் சிறப்புடன் மிளிர்கின்றது. பாடசாலைகளிடையே நடைபெறும் சகலவிதமான போட்டிகளிலும் இப்பாடசாலை மாணவர்கள் கோட்ட, வலய, மட்ட நிகழ்வுகளிற் பங்குபற்றி வெற்றி பெறுகின்றார்கள். இப்பாடசாலையின் பெற்றோர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியோரின் பங்களிப்பு இவ்வித்தியாலய வளர்ச்சியிற் சிறப்பான ஒன்றாகும். இவ்வித்தியாலயம் நூறு ஆண்டுகளைக் கடந்து இன்று பெருமையுடன் மிளிர்வதற்குப் பல்வேறு வகையில் அர்ப்பணிப்புடன் பணிபுரிந்த, பணிபுரிகின்ற ஆசிரியர்களின் சேவையும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். தற்போதைய அதிபரின் சேவைக்காலத்தில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கனவாக எமது பாடசாலையின் பௌதிக வளங்கள் நல்ல முறையிற் பேணப்பட்டு "எங்கும் தூய்மை எதிலும் புதுமை" எனும் குறிக்கோளுக்கேற்ப இப்பாடசாலையானது மிளிர்ந்து வருகின்றது.

மாணவர்களின் கற்றலை மேம்படுத்தக் குடும்பப் பாடசாலைகளுடன் இணைந்து வாசிப்பு முகாம், சுற்றாடல் முகாம் என்பன நடாத்தி மாணவரின் கல்வியை மேம்படுத்தியமை சிறப்பான ஒன்றாகும். அத்தோடு நின்றுவிடாது இரு நாட்கள் கல்விக் கண்காட்சியை ஒழுங்கமைத்து ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஒன்றிணைந்து எல்லோருக்கும் விழிப்புணர்வு ஊட்டியது இவரின் பணிக்காலத்திற் போற்றப்பட வேண்டிய ஒன்றாகும்.

இப்பாடசாலை மாணவர்களின் ஆளுமை விருத்தியை நோக்கமாகக் கொண்டு செயற்படுத்துவ துடன், அவர்கள் சிறந்த விழுமியங்களைப் பெற்றுச், சமூகப் பொருத்தப்பாடு உடையவர்களாக மாற்றுவதிலும் இவ்வித்தியாலயம் பெரும்பங்கு வகிக்கின்றது. இவ்வித்தியாலயத்திற் கல்வி ஊட்டும் ஆசிரியர்கள் மாணவர்களின் ஆளுமை விருத்தியை மென்மேலும் முன்னேற்ற அர்ப்பணிப்போடும் தியாகத்தோடும் பணிபுரிந்து, மாணவர்களைச் சிறப்பாக வழிநடாத்தவதில் தனித்துவத்துடன் செயற்படுகிறார்கள்.

இப்பாடசாலை மாணவர்களது பெற்றோர்கள், பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் மிகவும் அக்கறையுடன் செயற்பட்டு, அவர்கள் எடுக்கின்ற முயற்சிகள் பெற்றோர்கள் மத்தியிற் கல்வியின்பால் விழிப்புணர்வு ஏற்பட்டிருப்பது இப்பாடசாலைக்குக் கிடைத்த பெரு வெற்றியாகும்.

இப்பாடசாலை மேன்மேலும் வளர்ச்சிபெற்று மாணவர்கள் இறை அருள் பெற ஒரு ஊடகமாக இவ்வித்தியாலயம் மிளிர இறை ஆசீர் வேண்டி நிற்கின்றோம்.

# கடமையே கண்ணாயினார்

**திருமதி ஜெ.விமலன்**
உபஅதிபர்,
யாழ் / நல்லூர் சென். பெனடிக்ற்
றோ.க.த.க.வித்தியாலயம்

ஈழத்திருநாட்டின் மங்காப்புகழ் படைத்த யாழ். குடாவின் நுழைவாயிலாக, வந்தோரை வாழ வைக்கும் பளை என்னும் பிரதேசத்தில், தென்னைவளமும், நெல்வயலும் பொலிந்து விளங்கும், வீரத்தமிழர் பலர் உதித்த வீரம் நிறைந்த மண்ணாம் புலோப்பளை என்னும், ஊரிலே, யோசெவ் – அக்னஸ் தம்பதியரின் இரண்டாவது மகளாக 05.02.1950 இல் அருட்சகோதரி மரியமலர் யோசெவ் ஆகிய எங்கள் அதிபர் பிறந்தார்.

இவர் தனது ஆரம்பக்கல்வியைப் புலோப்பளை றோ.க.த.க.பாடசாலையிற் கற்று, துடிப்புமிக்க மாணவியாகத் திகழ்ந்தார். அதன்பின் இடைநிலைக் கல்வியை யாழ். அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரியிலும் கற்றார். கற்கும் போதே இவரது மனதில் இறைபக்தியும், இறைஅன்பும் கொண்டிருந்தார். இவர் துறவற வாழ்விற்குத் தன்னை அர்ப்பணிக்க விரும்பி, கண்டி அம்பிற்றியாவில் துறவற வாழ்க்கைக்கான முதற் பயிற்சியையும், அதைத் தொடர்ந்து கம்பகாவில் கார்மேல் சபையில் நவசந்நியாசப் பயிற்சியை முடித்து 1972இற் கார்மேல் சபைத் துறவியாக இறைபணியைப் பெருவிருப்பத்துடன் தொடர்ந்தார். அங்கும் இவரது சிறப்பான திறமைகள், சுறுசுறுப்பு, ஒப்படைத்த பொறுப்புக்களை நிறைவேற்றும் பாங்கு என்பன உணரப்பட்டுத் தொடர்ந்து, மேற்படிப்புக்காக அனுமதிக்கப்பட்டார். அந்த வகையில் யாழ். பல்கலைக் கழகத்தில் 1990ஆம் ஆண்டிற் கலைப்பட்டதாரியாகப் பட்டம்பெற்றுக் கல்வியியல் முதுமாணிப் பட்டத்தையும்பெற்றார்.

கார்மேல் கன்னியர்மடச் சபையினரால் ஆசிரிய பணிக்கான அழைப்பு விடுக்கப்பட்டதும் மகிழ்வுடன் அதனை ஏற்று, தனது முதல் நியமனத்தை யாழ். அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியிலும், அதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு கல்முனை பாத்திமா தேசிய பாடசாலையிலும் ஆசிரியராக, மாணவர் போற்றும் வகையிற் சிறப்புடன் பணியாற்றினார். பின் மீண்டும் யாழ்மாவட்டத்தில் தாளையடி றோ.க.த.க. பாடசாலையிலும், கரவெட்டி இருதயக்கல்லூரியிலும் மகிழ்வுடன் பணியாற்றினார்.

2003இல் தாளையடி றோ.க.த.க. வித்தியாலயத்தில் அதிபராகப் பொறுப்பை ஏற்று மிகவும் உற்சாகத்துடனும், கடமை

யுணர்வுடனும், அன்புடனும் பாடசாலையை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணத்திற் செயற் படுத்தி வெற்றிகாணும் வேளையில் இயற்கைப் பேரழிவான சுனாமியின் தாக்கத்திற்குட்பட்டு இவரது பாடசாலை மட்டுமல்ல, இவர் அன்போடு அரவணைத்த குழந்தைகள் காலனின் பிடிக்குள் அகப் பட்டதும், அப்பிள்ளைகளைப் பெற்றெடுத்த தாயினும் மேலாகத் தன்னை மறந்து அழுது, துவண்டு, பெரும் சிரமப்பட்டு மீண்டதையும் பலர் கூறக் கேட்ட துண்டு.

அதில் இருந்து மீண்டெழுந்து மீண்டும் தனது அயராத உழைப்பினாலும், இறை பராமரிப்பினாலும் பாடசாலையைக் கட்டியெழுப்பிச் சேவைசெய்யும்போது 2006இல் மீண்டும் யுத்த அனர்த்தம், இடப்பெயர்வுபோன்ற பல இடர்களைச் சந்தித்தபோதிலும் பணியைத் தொடர்ந் தார்.

வெள்ளை உடை, வேகநடை, நேரிய பார்வை, சிறந்த ஆளுமை, இனியகுணம், எறும்பின் சுறுசுறுப்பு, சேவை மனப்பாங்கு, இவை எல்லாம் ஒருங்கே சேரப்பெற்ற எம் மதிப்புக்குரிய அதிபர், அருட்சகோதரி மரியமலர் ஜோசவ் அவர்கள் 2007ஆம் ஆண்டு எங்கள் பாடசாலையில் அதிபராகப் பொறுப்பேற்றார். பொறுபேற்ற நாள்முதல் இன்றுவரை அவரது சேவைகள் பாடசாலைச் சமூகத்தை மட்டுமல்ல; பலரையும் ஆச்சரியப்படவைத்துள்ள தென்றால் அது மிகையில்லை.

ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கு ஒரு அதிபரின் முகாமைத்துவமும், மதிநுட்பமான செயற்பாடுகளும் மிக முக்கிய மானதாக அமைகின்றது. அந்தவகையில் நல்லூர் சென். பெனடிக்ற் வித்தியாலயம் கிராமப்புறம் சார்ந்த நகரப்பாடசாலையாகும். இங்கு கல்வி கற்கும் மாணவர்கள், அவர் தம் பெற்றோர்கள், சூழல் என்பன பெரும் வசதி படைத்ததென்று கூறமுடியாது. இத்தகைய சூழலைக்கொண்ட பாடசாலையை எங்கள் மதிப்பிற்குரிய அதிபர், நேரகாலம் பார்க்காது, அத்துடன், தன் துறவற விதிகளையும் மறவாது, தன் பாடசாலை வளர்ச்சிக்கு இறைவன் பணியாகக் கொண்டு செயற்பட்டுவருவதன் சான்றாக நல்லூர் கல்விக் கோட்டத்தினுள் இயங்கும் ஆரம்ப பாடசாலைகளுள் சிறப்பார்ந்த கட்டொழுங்கு, பண்பாடு, பரீட்சைப் பெறுபேறுகள், இணைப்பாடவிதானச் செயற்பாடுகள், பாடசாலை விழாக்கள், மதவழி பாடுகள், சுத்தம், சுகாதாரம் எனப் பல துறை களிலும் திட்டமிட்டு உழைத்து, அதிபர்களுக்கே எடுத்துக்காட்டாக விளங்கி, நகரப்புறப் பாடசாலைக்கு நிகராக எங்கள் பாடசாலையை உயர்த்தி, கல்விப் பணிப்பாளர் முதல் வருபவர்கள் அனைவ ராலும் பாராட்டப்படுவதற்கு எம் அதிபர், அருட்சகோதரி மரியமலர் ஜோசவ் அவர்களின் அயராத உழைப்பே காரணம் என்றால் மிகையில்லை.

தனது பாடசாலைக்குவரும் ஒவ் வொரு மாணவரதும் நிலை அறிந்து, வறிய மாணவர்களும் ஏனையவர்கள்போலச்

செயற்பட வேண்டும் என்பதற்காக வெளிநாடுகளில் இருந்து மாதாந்தம் நிதிபெற்றுக் கொடுக்கின்றமை அவரது இரக்க சிந்தனையையும், ஒவ்வொரு மாணவரிலும் உள்ள தனிப்பட்ட அக்கறையையும் காட்டி நிற்கின்றது. இங்கு வரும் மாணவர்கள் கல்வியறிவு மட்டு மல்லாமல், தூய்மை, ஒழுக்கம் உள்ளவராக மிளிரவேண்டும் என்றோர் அன்னையின் அன்புடன் உணர்த்தி நிற்பார்.

இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் மாத்திரமல்ல, தனது ஆசிரியர்களும் எல்லாவிடயத்திலும் ஆற்றலும் ஆளுமையும் மிக்கவர்களாகத் திகழவேண்டும் என்பதிலும், நவீன உலகிற்கு முகங் கொடுக்கக் கூடியவர்களாக இன்னும் வளர்ச்சி அடைய வேண்டும் என்பதில் பேரார்வம் கொண்டவர்.

இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு முழுமூச்சோடு அதன் வளர்ச்சியே தன் பணி என விடாமுயற்சியுடன் உழைக்கின் றமைக்குச் சான்றாகப் பரீட்சைப் பெறு பேறுகளும், இணைப் பாடவிதானச் செயற்பாட்டு முடிவுகளும், பாடசாலையில் மாணவர் அனுமதிக்காக வருகை தரும் பெற்றோர்களும், அதிகரித்துள்ள மாணவ எண்ணிக்கையுமே சான்றாகும்.

இவர் தான்பெற்ற கல்வியையும், தான் வகித்துக்கொண்ட துறவற வாழ்வியலையும், கல்விச்சேவைக்கென அர்ப்பணித்து, பாட சாலைக் கல்வித்தரத் தினை உயர்த்துவதற்கு அரும்பாடுபட்டு உழைக்கும் எம் அதிபரின் கனவு, நினைவு எல்லாமே பாடசாலை, மாணவர்கள், ஆசிரியர்கள்தான் இன்னும் சில ஆண்டுகள் என் அன்புக்குரிய அதிபரின் பணி தொடருமானால், பல திட்டங்களையும், செயற்பாடுகளையும் நிறைவேற்றி, மேலும் பாடசாலைக்குப் பெருமை சேர்த்திருப்பார்.

எந்த தீமையும் நோக்காது கடமையே கண்ணாக உழைத்து அகவை அறுபதை பூர்த்தி செய்த எம் அதிபரை பாடசாலை சமூகத்தின் சார்பில் நல்ல உடல், உள ஆரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழ்ந்து இவரது பணி தொடர இறையருளை வேண்டுகின்றேன்.



கருத்துக்கள் தோன்றிய இடத்தில் மீண்டும் இரு கருத்துக்கள் தோன்றும்படி செய்பவர்தான் ஆசிரியர்.

இலட்சியம் மட்டும் உயர்வானதாக இருந்தால் போதாது. அதை அடையும் வழியும் உயர்வானதாக இருக்க வேண்டும்.

## சென்.பெனடிக்ற் நிர்வாகச் சமூகம்



ஆசிரியர் குழாம்



பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள்



பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள்

## எம் பாடசாலை வளர்ச்சியில் துணை நிற்போர்...



யாழ். ஆயரை வாழ்த்தும் சென். பெனடிக்ற் சிறார்கள்



அப்போஸ்தலிக்க கார்மல் சபை தலைவியின் வருகையில்...



கல்வி அமைச்சின் செயலாளரின் வருகையில்...

# An ardent & active Principal - Sr. Malar

*Mrs.J.A.V.Anton*
The Teacher of St.Benedict's

**"We can't do great things, But
We can do small things with greater love"**
*- Mather Theresa*

In our life journey we meet so many, who walk with us to live as human beings, in this passing world. As a teacher I have met a few remarkable and considerable persons, among whom, one is the Principal of J/St.Benedict's R.C. Vidyalayam. Rev.Sr.Mariamalar Joseph. I am really priviledged to pen a few words of felicitation of our dear and beloved principal Sr.Mariamalar Joseph.

In her, I admire always a smiling face. She welcomes every body at any time with a beautiful smile. In fact she is smart and steady, even though she is in her sixties. She lives every moment of her life. In the other words, I would say, She is an active and lively lady. She is never prepared to loose a minute in her life, and she never post ponds things. She wants to perform everything with greatest love.

I would go further a step and say, she is a perfectionist. She organizes even a small thing in a perfect way. She wants things to be perfect, what may come. She likes to be neat and tidy. In other words she wants the things to be in their own places. She sees in everything an aesthetic value. She enjoys the creation and tries her best to co-create with the nature. In other words, She is like Saint Francis of Assise, a lover of nature and try to see the beauty of God in every thing that comes under her adminis tration.

When we look at her administrative section, she loves it very much. And also she always reminds us clearly of our teaching vocation. She instructs us positively, appreciates and pushes every teacher to be well- equipped, having the greater vision in her back of the mind.

She dedicates herself to the upliftment of our school in all

aspects with so much commitment and self giving. She goes out of her way to bring up the children to a greater standard, that is to say in her own words. "There should be always a go." She wants the children to be wholestically brought up. That is in her own words, "Every child should be brought up in all spheres of a person's life" ie Not only in mere studies but also skills, attitudes, values, physically, mentally, religiously and above all humanly.

Originality is her very peculiar character, that is to say to be creative and spontaneous on your own. Because of her push and effect only. We were able to get places in English day Competitions and other extra curricular activities.

May I conclude wishing my dear and beloved principal, all the best and blessings of God in coming years. May she enjoys good health of mind and body.

May the choicest blessing on you dear sister.

## Laughter



*Laughter is the greatest humanizer and medicine God has given us. It can reliever tension and hysteria faster than all of the best pills rolled into one.*

# பாடசாலையின் வளர்ச்சியும், அருட்சகோதரியின் விடாமுயற்சியும்

திருமதி ஜோசப்பின் சர்வநாதன்
பழைய மாணவி.

யாழ். நகரின் மத்தியிற் கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்திருப்பது தான் யாழ்/ நல்லூர் சென். பெனடிக்ற் றோ.க.த.க. வித்தியாலயம். இப்பாடசாலையின் அதிபராக 2007ஆம் ஆண்டுகாலப்பகுதியிற் பொறுப் பேற்ற நாள்முதல் இன்றுவரை இவரது பணி அளப்பரியது.

அருட்சகோதரி மரியமலர் ஜோசவ் நிர்வாகத்திறமை கொண்டவராகவும், ஆளுமையுடன் அனைத்தையும் வழிநடத்தக் கூடிய உயர்ந்த தோற்றமும், நேரிய நடையும், கண்டிப்பான பார்வையும், அதோடு கூடவே அனைவரையும் அரவணைக்கின்ற பண்பு கொண்டவராகவும் பாடசாலையை நிர்வகித்து வருவது இங்கு குறிப்பிடத் தக்கது.

தாம் பொறுப்பேற்ற காலத் திலிருந்து இப்பாடசாலையின் முன்னேற்றத் திற்காக அல்லும்பகலும் அயராது உழைத் தவர் எமது அன்புக்குரிய அதிபராவார். இவரது தலைமைத் துவத்தின்கீழ் பல வெற்றிப்படிகளை மாணவர்கள் அடைய உந்துதலாகவும், மாணவர்கள் கல்வி, இறைபக்தி, நற்பண்பு, பகிர்வுபோன்ற வற்றில் வளர நல்வழிகாட்டியாகவும், அத்தோடு ஆசிரியர்களை அன்புடன் அரவணைத்து வழிநடத்தும் நல்லதிப ராகவும், கற்றல், கற்பித்தற் செயற்பாடு களிலும் முன்னிலையில் திகழ வேண்டு மென்ற ஆர்வம் கொண்டவராகவும் விளங்குவது, எமது பாடசாலை சமூகத் திற்கு இறைவன் தந்த கொடையென்றே சொல்லத் தோன்றுகிறது.

மாணவர்கள் ஆங்கிலதினப் போட்டி, தமிழ்த் தினப் போட்டி போன்ற வற்றிற் பங்குபற்றிக் கோட்ட மட்டத்தில் வெற்றி பெற்றமை இன்னும் பாண்ட் வாத்தியக் குழுவினர், குருளைச் சாரணர், சிறுதோழியர் என இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் அவர்களைப் பயிற்று விக்க விடாமுயற்சியோடு செயற்பட்டு வெற்றியும் கண்டவர் எமது அதிபர். பல முன்னணிப் பாடசாலைகளுடன் ஒப்பு நோக்குகையில் எமது பாடசாலையும், அப் பாடசாலைகளின் தரத்தில் மிளிர்வதை எண்ணும்போது எமக்கு மிகவும் சந்தோஷ மாகவும், பெருமையாகவும் இருக் கிறது. பல நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு பாடசாலையின் தேவைகள் பலவற்றை நிறைவேற்றிய பெருமையும் இவரையே சாரும்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத் தினர், பழைய மாணவர் சங்கத்தினர், நலன் விரும்பிகள் அனைவரும் தமது பாடசாலை

வளர்ச்சியில் அக்கறையோடு செயற்பட, அனைவரையும் பாடசாலை விழாக்களிற் பங்குபற்றுவதோடு, பொறுப்புக்களைப் பகிர்ந்தளித்து ஒன்றிணைந்து செயற்பட வாய்ப்புக்களைக் கொடுத்து நல்லதொரு உறவை வளர்த்தவரும் எமது அதிபரே.

அருட்சகோதரி பாடசாலைப் பணியோடு மட்டும் நின்றுவிடாது, ஆலயப் பணிகளிலும் பங்குத்தந்தைக்கு உறுதுணையாகவும், மறைக்கல்விப் போதனையில் ஆர்வமுள்ளவராவும் எம்பங்கினில் வகித்து வருவது பெருமைக்குரிய விடயமாகும்.

இவ் ஆற்றல்கள் அனைத்தையும் ஒருங்கேகொண்ட எமது அன்புக்கும், மதிப்புக்குமுரிய அதிபர் அவர்கள் ஓய்வு பெற்றாலும், மீண்டும் பாடசாலை வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்க வேண்டுமெனப் பணிவுடன் வேண்டி, பழைய மாணவர்கள் சார்பில் ஆசிகள் பல கூறி நிற்கின்றேன்.

"வாழ்க அவர் பணி
வளர்க அவர் புகழ்"

## சிந்திக்கச் சில துளிகள்



- வயதில் இளையவனாகவும் அறிவில் மூத்தவனாகவும் இருக்கப் பழகிக் கொள்.
- வரட்டுக் கௌரவம் வாழ்க்கைக்கு உதவாது. பிடிவாதம் முயற்சிக்கு உதவாது.
- தன் கையை பணத்தால் நிரப்ப வேண்டும். தன் மனதை குணத்தால் நிரப்ப வேண்டும்.

# அரவணைக்கும் எம் அதிபர்

செல்வி த. சோபியா
(மாணவி)- தரம் 1A

உள்ளங்கள் பண்பாடும்
பொன் நாளாம் இன்நாளிலே
எம் அதிபர் மரியமலர் யோசப்
அவர்களுக்கு அன்போடு கூறிடுவோம்
பலகோடி நன்றிகள்
அன்போடு கூறிடுவோம்
பலகோடி நன்றிகள்.

ஆண்டுகள் அறுபதை மகிழ்வோடு களித்திட
அதிலும் சில ஆண்டு எம்மோடு இணைந்திட
அருள் கூர்ந்த இறைவா எம் நன்றி உமக்கே
அருள் கூர்ந்த இறைவா எம் நன்றி உமக்கே.

பாடசாலை வந்த முதல் நாளிலே
இவர்கள் என் பிள்ளைகள் என்று கூறி
அன்போடு எமை அணைத்த எம் அதிபரை
பாசத்தோடு வாழ்த்திடுவோம் என் நாளுமே.

வாழ்க எம் அதிபர்
வளர்க அவரது புகழ்
இறை ஆசீர் வேண்டி
அன்போடு வாழ்த்துகிறேன்.

# ஆளுமை மிக்க அதிபர்

திருமதி திரேசம்மா துரைரட்ணம்
பழைய மாணவி

நாம் வாழும் இச் சமுதாயத்தில் ஒவ்வொருவரும் பலதரப்பட்ட திறமைகளை வெளிக்காட்டிக் கொண்டிருக்கிறார்கள். மனிதனானவன் ஓர் ஈடு இணையற்ற தனியாளாக உள்ளான். ஏனெனில், ஒவ்வொருவரும் தமக்குரிய சிறப்புக்களைக் கொண்டு கருமங்களை முன்னெடுத்துச் செய்கிறார்கள். பூரண மான தனிமனிதனை உருவாக்குவதில் ஆளுமை விசேட செல்வாக்கைச் செலுத்துகின்றது. ஒருவரின் தனிச் சிறப்புக்கள், நடத்தை, இயல்புகள் என்பவற்றிற் காணப்படும் வேறு பாடுகள் செல்வாக்கைப் பெறும் காரணி களை அறிவதன் மூலம் ஆளுமையை நாம் புரிந்து கொள்ளமுடியும்.

ஒருவரில் வெளிப்படையாகக் காணப்படும் விருப்பு வெறுப்புக்கள், உணர்வுகள், மன எழுச்சிகள், திறமைகள், சமூக நடத்தைகள், மனப்பான்மைகள் என்பவற்றின் முழுமையான இயல்பு ஆளுமை எனலாம். சமூக மனஎழுச்சி, வளர்ச்சி, ஒழுக்கம், இறைபக்தி என்ற எண்ணக்கருத்தை வளர்த்தல், முகா மைத்துவத் திறனை வளர்த்தல் போன்ற எல்லாப் பண்புகளும் ஒருங்கே அமைந்த எம் அதிபர் அருட்சகோதரி மரியமலர் யோசப் அவர்கள்.

2007ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டுவரை எமது பாடசாலையைப் பொறுப்பேற்று, பல ஆக்க பூர்வமான தம்பணி களை அர்ப்பணித்துச் சேவையாற்றினார். தம் ஆளுமைத் திறமை யால் எம் பாடசாலை ஆசிரியர்களையும், மாணவர்களையும் ஆளுமைமிக்கவர்க ளாகச் சமூகத்தில் திகழவேண்டும் என்ற எழுச்சியான மனத்திடத்தை உருவாக்கக் கூடிய தன்மையுடன் வழிநடத்திச் சென்றார் என்பதிற் சந்தேகம் இல்லை. ஒவ்வொரு ஆசிரியர்களையும், மாணவர்களையும் எல்லாச் செயற்பாடுகளிலும் பங்குபற்ற இடமளித்தும், எல்லாவகையான உணர்வு களையும் வெளிக்காட்டுவதற்குரிய சந்தர்ப்பங்களை அளித்தும் வகுப்பறையில் மிகத் தெளிவான சட்டதிட்டங்களை ஒழுங்கமைத்துக் கொடுத்தும், இவர்களின் கருத்துப் பரிமாறல்களுக்கும் ஒழுங் கமைத்து கொடுத்துப் பல்வேறு செயற்பாட்டினால் வழிநடத்திச் சென்ற ஓர் அதிபர் ஆவார். இவ்வாறான நல்லெண்ணக் கருத்துக்களைக் கொண்டு ஒரு நேர்மை யான தலைமைத்துவத் திறனுக்குப் பொருத்தமான மாணவர்களை உருவாக்கிக் கொடுத்த வெற்றி இவரையே சாரும்.

ஆளுமை விருத்தியில் முகாமைத் துவத் திறமைகள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. தனது குறுகிய சேவைக் காலத்தில் தாம் திட்டமிட்டபடி ஒழுங்கு படுத்தலாலும், ஊக்கப் படுத்தி வழிப்படுத்த லாலும் தம் முகாமைத்துவத் தொழிற்பாடு களால் எமது பாடசாலை பல உயர்ச்சி களைக் காண வழிவகுத்தவர். நல்ல மனப்பான்மை, நன் நடத்தை நுண்ணறி வுடன் செயற்படல், சிறந்த மனவெழுச்சி, பொறுமை, சமூகப் பொருத்தப்பாடு அடக்கம், விரைவாகத் தீர்மானம் எடுத்தல், பிரச்சனைகளுக்குச் சரியான தீர்வுகாணல், முன்மாதிரியாகச் செயற்படல், என்னும் குணாதிசயங்களுடைய இவர் தனது முகாமைத்துவச் செயற்பாடுகளாற் பல விடயங்களை முன்னெடுத்துச் சென் றார்.

இவ்வாறான ஆளுமைமிக்க எமது அதிபரின் சேவை குறுகிய காலம் என்றாலும், எமது பாடசாலையின் பொற்காலம் என்பதில் ஐயமில்லை. இவர் தனது 60ஆவது வயதைப் பூர்த்திசெய்யும் நிலையில் தொடர்ந்தும் உடற் சுகத்துடன் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தி விடை பெறுகிறேன்.

## சிந்திக்கச் சில துளிகள்

- உன் உழைப்பை நம்பு – ஆனால்
கடவுளையும் உன் தாயையும் மறந்துவிடாதே.
- பணம் இல்லாவிட்டால் உன்னை யாருக்கும் தெரியாது.
பணம் இருந்துவிட்டால் உன்னையே உனக்கும் தெரியாது.

# பாடசாலையில் அதிபரின் பங்கு

திருமதி நேசமலர் இரவீந்திரன்
யாழ். நல்லூர்/ சென். பெனடிக்ற் வித்தியாலய ஆசிரியை.

*அதிபர் அதிபர் அதிபரவர் - எம்*
*அனைவர் மனதினிற் புனிதரவர்*
*இலக்கை நோக்கும் மாணாக்கரை*
*ஏற்றிச் சுமக்கும் கற்பாறை.*

*அறிவை அமுதாய்ப் பருகிடவே*
*சிறந்த ஓடங்கள் தோள் சுமந்து*
*அவரவர் பணிகளைச் சிறப்புறவே*
*புரிந்திட உதவிடும் ஏணியவர்.*

*தினமும் உரிய நேரமதிற்*
*பள்ளிச் சமுகம் தரிசித்து*
*உயரிய பணிகளை உயிராகத்*
*திகழ்ந்திடும் நேரிய உள்ளமது.*

*இறைவன் சமைத்த பாதையென*
*உள்ளம் தனிலே பதித்த வழி*
*நிறைவை எய்தும் மாணாக்கர்*
*நிலையை நிறுத்தும் தூணுமவர்.*

*நாம் பெற்ற விலையில்லா*
*வெகுமதியாய் வலம் வரும்*
*எம் முடிக்குரிய முத்தாம்*
*பெரும் சொத்தாம் எம் அதிபர்.*

*தேன் கொண்ட வார்த்தைகள் வழி*
*பற்பல தேர்ச்சிகள் கண்ட நீர்*
*எம்மவர் மனங்களில் என்றும்*
*மாறாத வெற்றித் திருமகளாய்.*

*எம் பாடசாலையில் மேன்மை படைத்து*
*வையம் போற்றும் மேதகு வளர்ச்சியிற்*
*சோதனைகள் கடந்து சாதனைகள் புனைந்த*
*சாகசத் தலைவி நீரன்றோ உமக்கிங்கு நிகருண்டோ.*

## பாடசாலையின் முக்கிய விழாக்களில்...



புதிய அலுவலகத் திறப்பு விழா



அதிபர் தினம்



ஆசிரியர் தினம்



அப்போஸ்தலிக்க கார்மல் சபை மாகாணத்தலைவி அவர்களை வரவேற்கும் போது...



கால்கோள் விழா

## பெற்றோருக்கான கல்விச் செயற்பாட்டு விழிப்புணர்வின்போது...



கல்விக் கண்காட்சியில்...



வாசிப்பு முகாமில்...

# சென் பெனடிக்ற் பாடசாலையும் புலமைப் பரிசிற் பரீட்சையும் ஒரு நோக்கு

திருமதி ஜெ. விமலன்
உப அதிபர், யா/ நல்லூர் சென் பெனடிக்ற் வித்தியாலயம்

இன்றைய இலங்கையின் கல்வித் திட்டத்திற் பல்வேறு தரங்களில் நடாத்தப் படுகின்ற பொதுப்பரீட்சைகள் சமுதாயத்தில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இப் பரீட்சைகளினூடாக மாணவர்களின் கல்வித் தரம், ஆசிரியர்களின் செயற் பாட்டின் வினைத்திறன், பாடசாலையின் தரம் போன்றன பொதுவாக மதிப்பிடப் படுகின்றது. அந்த வகையில் தரம் 5 மாணவர்களுக்காக நடாத்தப்படுகின்ற புலமைப்பரிசிற் பரீட்சையானது மிக முக்கிய மான இடத்தை வகிப்பது நாம் அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. இப்பரீட்சை யானது மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு போன்றவற்றை மதிப்பீடு செய்து, அவனை ஒரு தேர்ச்சிமிக்க பிரஜையாக ஆக்குவதிற் செல்வாக்குச் செலுத்துகிறது. மாணவரது அவதானிப்புத் திறன், கிரகிப்பு, உற்றுநோக்கல், கண்டறிதல், பிரச்சினை விடுவித்தல், நுண்ணறிவு போன்ற பல்வேறுபட்ட திறன்கள் இப்பரீட்சையின்மூலம் அள விடப்படுகின்றது.

புலமைப் பரிசிற் பரீட்சையானது பின்வரும் முக்கிய நோக்கத்தை அடிப்படை யாகக் கொண்டு நடாத்தப்படுகின்றது.

01. பிரபல பாடசாலைகளுக்கான அனுமதி.
02. வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மாணவர்களுக்கு நிதி வழங்குதல்.

அந்த வகையில் இப்பரீட்சை யானது இன்றைய காலகட்டத்திற் சமுதாயத் தின் வாழ்க்கைச் சுட்டியாகக் கணிக்கப் படுகின்றது.

பொதுவாக, கிராம மட்டத்திற் பெற்றோர்களின் பரீட்சையாக பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது. ஏனெனில், பிள்ளை களைத் தயார்படுத்துவதிற் பெற்றோர்களின் பங்களிப்பு மிகவும் அதிகமாகக் காணப்படு கிறது. பணம், காலம், வேலை போன்ற பல்வேறுபட்ட வளங்களை இழந்து தமது பிள்ளைகளை இப் பரீட்சையிற் சித்தி யடையச் செய்வதிற் பெற்றோர்கள் மிகவும் ஈடுபாடு செலுத்துகின்றார்கள். மாறாக, பிள்ளைகள் சித்தியடையத் தவறும் பட்சத்தில் தமது வாழ்க்கையிற் ஏற்பட்ட மிகப்பெரும் தோல்வியாக எண்ணி மனம் வருந்துகின்றார்கள். அந்தவகையில் பெற்றோர்களின் கௌரவத்தைப் பாதிக்கும் ஒரு பரீட்சையாக இது அமைந்துவிட்டதை அறிந்துகொள்ள முடிகின்றது.

எமது பாடசாலையானது ஓர் ஆரம்ப பாடசாலையாக இருக்கின்ற காரணத்தால் 5ஆம் தரப் புலமைப் பரிசிற் பரீட்சையானது எமக்கு ஒரு முக்கியமான மைற்கல்லாக அமைகின்றது. இன்றைய காலகட்டத்தில் மாணவர்களுக்கு அறிவை வழங்குவதும், வளர்ப்பதும், பரவலாக்கு

வதும் அதனூடாக, மாணவன் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு அவற்றைப் பிரயோகித்து வாழ்க்கை யில் ஏற்படும் பல சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளச் செய்வதில் எமது பாடசாலை பெருமளவிலான பங்களிப்பைச் செய்து வருகின்றது.

எமது பாடசாலையை நாடி வருகின்ற மாணவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. பொருளாதார ரீதியிலும் வறுமைக்கோட்டின் கீழ் அவர்களின் பல குடும்பங்கள் இருப்பதை அவதானிக்க முடிகின்றது. அத்துடன் பெரும்பாலான மாணவர்களது பெற்றோர் களின் கல்வி அறிவு குறைந்த மட்டத்திலேயே காணப்படு கின்றது. பெற்றோர்களின் தொழிலை நோக்குமிடத்து அரசதுறைகளிலும், பொருளாதார வசதி கூடிய தனியார் துறைகளிலும் கடமையாற்றுகின்றவர்களை விரல்விட்டு எண்ணக்கூடியதாக உள்ளது.

எனவே, இவ்வாறான சூழ் நிலை யிலுள்ள மாணவர்களைத் தரம் 1–5 வரை கற்பித்து, இப் புலமைப் பரிசிற் பரீட்சைக்குத் தயார்படுத்துவதிற் பல்வேறு பிரச்சனைகள், சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய வர்களாகவே ஆசிரியர்களும், அதிபரும் காணப்படுகின்றார்கள்.

இவ்வாறான சவால்களை முறியடிப் பதற்கு எமது ஆசிரியர்கள், பல்வேறு செயற்றிட்டங்களையும், செயற்பாடு களையும் நடைமுறைப்படுத்துகின்றனர். இதற்கு எமது அதிபர், அருட்சகோதரி மரியமலர் யோசெவ் அவர்கள் பல வழிகளில் வழிகாட்டியாக இருந்து ஆசிரியர்களை ஊக்கப்படுத்துகின்றார்.

கடந்த மூன்று வருடங்களில் (2007–2009) எமது பாடசாலையிற் புலமைப்பரிசிற் பரீட்சைப் பெறுபேறுகள் முக்கியமான ஓரிடத்தை வகிக்கின்றது. பிரபல பாடசாலை களின் பெறுபேறுகளுடன் போட்டிபோட்டு அவற்றிற்கு நிகராக எம்மாலும் நிற்க முடிகின்றதற்கு எமது ஆசிரியர்களின் தன்னலம் கருதாத சேவையும், அதிபரின் மதிநுட்பமான செயற் பாடுகளும் காரணமாக அமைகின்றது.

| புள்ளிகள் | 2007 | | 2008 | | 2009 | |
|---|---|---|---|---|---|---|
| 0 - 80 | 12 | 30% | 13 | 37.14% | 06 | 10.90% |
| 81- 90 | 02 | 05% | 01 | 2.85% | 05 | 9.09% |
| 91-100 | 02 | 05% | 02 | 5.71% | 08 | 14.54% |
| 101-110 | 04 | 10% | 04 | 11.42% | 07 | 12.72% |
| 111-120 | 03 | 7.5% | 06 | 17.14% | 08 | 14.54% |
| 121-130 | 04 | 10% | 06 | 17.14% | 07 | 12.72% |
| 131-140 | 05 | 12.5% | 02 | 5.71% | 05 | 9.09% |
| 141-150 | 04 | 10% | - | - | 05 | 9.09% |
| 151-160 | 02 | 05% | 01 | 2.85% | 02 | 3.63% |
| 161-170 | 02 | 05% | | | 02 | 3.63% |
| 171-180 | | | | | | |
| 181-190 | | | | | | |
| 191-200 | | | | | | |
| மா.தொகை | **40** | | 35 | | 55 | |

2007இல் 100 புள்ளிகளிற்குமேற் பெற்ற மாணவர்கள் 60% மாகக் காணப்படுகின்றனர்.

2008இல் 100 புள்ளிகளிற்குமேற் பெற்ற மாணவர்கள் 54.28% காணப்படுகின்றனர்.

2009இல் 100 புள்ளிகளிற்குமேற் பெற்ற மாணவர்கள் 65.45% காணப் படுகின்றனர்.

இவற்றை நோக்கும்போது எமது பாடசாலையில் 100 புள்ளிகளிற்குமேல் எடுத்த மாணவர்கள் மிக அதிகமாக இருப்பதை அறிய முடிகின்றது.

## புலமைப் பரிசிற் சித்தியடைந்த மாணவர்கள்

| ஆண்டு | மாணவர்களின் எண்ணிக்கை | % | நிதி உதவி பெறும் மாணவர்கள் | % |
|---|---|---|---|---|
| 2007 | 08 | 20% | 4 | 50% |
| 2008 | 13 | 37.14% | 8 | 61.53% |
| 2009 | 09 | 16.36% | 5 | 55.5% |

மேற்குறித்த அட்டவணையை நோக்கும்போது கடந்த 3 வருடங்களில் 2007ஆம் ஆண்டில் 8 மாணவர்களும், 2008ஆம் ஆண்டில் 13 மாணவர்களும், 2009 ஆம் ஆண்டில் 09 மாணவர்களும், சித்தியடைந்துள்ளார்கள். இவ்வாண்டு களிற் சித்தியடைந்த மாணவர்களில் நிதி உதவியினைப் பெறும் மாணவர் களையும் இவ்வட்டவணை சுட்டிக் காட்டுகிறது.

கடந்த மூன்று வருடங்களில் இப் பரீட்சையில் எமது பாடசாலை ஒரு வளர்ச்சிப் போக்கைக் கொண்டுள்ளதைக் காண முடிகிறது. எமது வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்களின் கருத்துப் படி 100 புள்ளிகளுக்குமேற் பெற்ற மாணவர்களும் சித்தியடைந்தவர்கள் என்பதாகும். அந்த வகையில் எமது பாடசாலை 65%மான மாணவர் களை 100 புள்ளிகளிற்குமேல் எடுப்பதற்குத் தயார் படுத்தியுள்ளது. இதற்கு மேற் பாடசாலை அதிபர் பல்வேறு வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளார்.

ஒரு மாணவரின் கற்றல் இலக்கு களை அடைய அவனை ஊக்கப்படுத்துதல் அவசியமாகின்றது. உளவியல் அறிஞர் களும் கற்றலுக்கு ஓர் உந்துசக்தி அவசியம் என்கின்றனர். அந்தவகையில் எமது அருட் சகோதரி மரியமலர் யோசெவ் அவர்கள் மாணவர்களைப் பல்வேறு வழிகளில் ஊக்கப்படுத்தி உள்ளார். மாணவர்கள் சிறந்த முறையில் அறிவைப்பெற வேண்டு மாயின் முதலிற் பாடசாலையும், வகுப்பறையும் மகிழ்ச்சிகரமானதாக கவின் நிலையான சூழலைக் கொண்டிருக்க வேண்டும். எமது பாடசாலைக்குத் தேவையான வளங்களைச் சேர்ப்பதற்குப், பல்வேறுபட்ட அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார்களின்

உதவிகளைப்பெற எம் அதிபர் முன்நின்று உழைத்துள்ளார். மாணவர்களின் வகுப்பறைகள், தளபாடங்கள், பாடசாலைக் கட்டிடங்கள், நூலகம் போன்றவற்றைத் தூய்மைப்படுத்துவதிலும், தூய்மை பேணுவதிலும் எமது அதிபருக்கு நிகரில்லை. அந்த வகையில் மாணவர்கள் விருப்புடன் பாடசாலைக்கு நுழைவதற்கு வழி அமைத்துள்ளார். எமது அதிபர் மாணவர் களிடம் ஏற்றத் தாழ்வுகள் இருக்கக்கூடாது என்பதற்காகப் பல்வேறுபட்டவர்களிடம் உதவிகளைப் பெற்றுக்கொடுத்துள்ளார்.

மாணவர்களின் கற்றலை ஊக்கப் படுத்துவதற்கு, இலகுபடுத்துவதற்குப் பல்வேறுபட்ட புதிய கற்பித்தற் சாதனங் களை அதாவது (O.H.P.கணினி) போன்றவற்றைப் பாடசாலைக் குப் பெற்றுக் கொடுத்து மாணவர்களின் கல்வி நவீன மயப்படுத்தப்படுவதில் அக்கறை காட்டி நிற்கின்றார்.

தரம் 5,மாணவர்களில் மிகுந்த கரிசனம் எடுத்து ஆசிரியர்களுடன் இணைந்து வகுப்பறையில் மாணவர் களுக்கு விளங்காததை திரும்பத்திரும்பக் கூறி அதேபோன்று வேறு வினாக்களை வழங்கி, சகல மாணவரும் விளக்கம் பெற்றுள்ளார்கள் என்பதை அறிந்த பின்பே சமாதானம் அடைவார். அதைவிடக் கூடுதலான புள்ளிகளைப் பெறும் மாணவர் களுக்குப் பரிசில்களை வழங்கி ஊக்கப் படுத்தி, ஏனையோர்களும் கூடுதலான புள்ளிகளைப்பெற வைப்பதில் உந்துசக்தி யாக அதிபர் அவர்கள் திகழ்கின்றார். ஒவ்வொரு மாணவரிலும் தனிப்பட்ட கவனம் எடுத்துத் தனித்தனியாக மாணவரை அழைத்து அவர்களது பிரச்சினைகளைக் கேட்டறிந்து அறிவுரைகூறி அவர்களை ஊக்கப்படுத்தி, மேலும் கற்றற் செயற் பாட்டில் ஈடுபடவைக்கும் பெருமை எம் அதிபரையே சாரும். அவை தவிர பெற்றோரை அடிக்கடி அழைத்து அவர் களுடன் பிள்ளைகளைப் பற்றிக் கலந்துரை யாடுவார். எத்தனையோ வேலைப்பழுவிற்கு மத்தியிலும் விடுமுறைக்கால வகுப்புகளிற்கு மாணவர் வராதுவிட்டால் வீட்டிற்குச் சென்று அவர்களை அழைத்து வந்து கற்றலில் ஈடுபட வைப்பார்.

எமது பாடசாலைக்கு வரும் மாணவர் அனைவரும் அடிப்படைக் கல்வி அறிவு பெற்றே வெளியேறவேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டு செயற்பட்டு வருபவர் எம் அதிபர் அவர்கள். இவரது சுறுசுறுப்பான செயற்பாடுகளாலும், அயராத கடின உழைப்பாலும், ஆசிரியர் களின் தகுதி அறிந்து அவர்களை நெறிப்படுத்தும் தனது வினைதிறன் மிக்க செயற்பாட்டாலும், எம்பாடசாலைப் புலமைப் பரிசிற் சித்தி வீதத்தை அதிகரிக்கச் செய்தது மட்டுமன்றி, பல்வேறுபட்ட செயற் பாடுகளிலும் எமது பாடசாலையை ஓர் வளமான ஆரம்ப பாடசாலையாக மாற்றியமைத்த பெருமை கல்விப் பணிப் பாளர் முதல் சகலராலும் பாராட்டப்பட்டு வருவது எம் அதிபர், அருட்சகோதரி மரியமலர் யோசவ் அவர்களையே சாரும் என்பதை அறிந்து கொள்ளமுடிகின்றது.

# எமது பாடசாலையும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளும்

ப. அனோஜா,
மாணவி
யாழ் /நல்லூர் சென். பெனடிக்ற் வித்தியாலயம்.

பாடத்திட்டத்திற்குப் புறம்பான செயற்பாடுகளையே இணைப் பாடவிதானச் செயற்பாடுகள் என அழைக்கின்றோம். இந்த வகையில் விளையாட்டு, நடனம், பேச்சு, இசை, எழுத்தாக்கம், கட்டுரை யாக்கம், கவிதை, உறுப்பெழுத்து ஆகிய பல்வேறு செயற்பாடு களும் இதில் அடங்கும். இவையாவும். பாடசாலை, கோட்டம், வலயம், மாகாணம் என ஒவ்வொரு மட்டங்களிலும் போட்டிகளாக நடை பெறுகின்றன. இவை ஒவ்வொன்றிலும் பங்கு பற்றுவதன்மூலம் உடல், உள, சமூக விருத்திகள் ஏற்படுகின் றன. தரம்1 தொடக்கம் 5 வரை இப்பாடசாலையில் நான் கல்வி கற்றேன். ஒவ்வொரு வருடமும் நடைபெறுகின்ற பல்வேறு இணைப் பாடவிதானச் செயற் பாடுகளிலும் முழுமையாகப் பங்குபற்றி பரிசுகளும் பெற்றேன்.

இதனால் எனது எழுத்து ஆற்றல், மொழித்திறன் விருத்தி, இசை ஆற்றல், நடனம் என்பன திறமையாக விருத்தி யடைந்தன. என்னாற் சுயமாகவே சிந்திக் கவும், எழுதவும் முடியும்.

விளையாட்டின்மூலம் தலைமைத் துவப் பண்பையும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையையும் வெற்றி தோல்வியை ஏற்கும் பக்குவத்தையும் பெற்றுக் கொண்டேன். சக மாணவருடன் எவ்வாறு நடந்துகொள்வது என்பதையும் நான் அறிந்துகொள்ள எமது பாடசாலைச் செயற்பாடுகள் பெரிதும் உதவின. மேலும், மாணவத் தலைவி என்ற வகையிற் பாடசாலையின் பல்வேறு நிகழ்வுகளிலும் முன்னின்று செயற்படுவேன். அதிபர், ஆசிரியர்களுடன் பண்புடன் பழகும் திறமையையும் வளர்த்தேன்.

மேலும், சாரணிய இயக்கமும் எமது பாடசாலையில் தோற்றம் பெற்றிருந்தது. சிறு தோழியர் என்னும் அமைப்புமூலம் பிறருக்கு உதவும் மனப்பாங்கும், அன்பு, கருணை, இரக்கம் ஆகிய பண்புகள் எனக்குள்ளே வலுப்பெற்றன. பாடசாலையில் மட்டுமன்றிச் சமூகத்திற்கு உதவும் வகையில் எமது ஆசிரியர்கள் எம்மை வலுப்படுத்தியுள்ளனர்.

இத்துடன் நவீன தொழில் நுட்ப அறிவை வளர்க்கும் நோக்குடன் கணினி பற்றிய பயிற்சிகளையும் எமது அதிபர் எமக்குப் பெற்றுத் தந்துள்ளார். இதன்மூலம் ஆங்கிலத்தில் தேர்ச்சியடையும் சந்தர்ப்பம் எமக்குக் கிடைத்துள்ளது. பாடசாலைச் சூழலிற் சுத்தம் செய்தலிலும், அழகுபடுத்து வதிலும் நேர அட்டவணைப்படி எமது

பங்களிப்பைப் பாடசா லைக்கு வழங்க எமது அதிபர் எம்மை வழிப்படுத்தினார். பிற இடங்களில் இத்தகைய செயற்பாடு எமது ஆளுமையை வலுப்படுத்த உதவும்.

பான்ட் வாத்தியக் குழுவில் இணைந்து மேலைத்தேய வாத்தியக் கருவியான மலோடிக்கா இசைக்கக் கற்றுக்கொண்டேன். இவ்வாறாக வருடந்தோறும் சகல துறைகளிலும் பங்கு பற்றியதால் மேடைக்கூச்சம் இன்றி நிகழ்ச்சிகளிற் கலந்து கொண்டேன். எனவே, எனது பாடசாலை என்னை ஒரு முழுமையான ஆளுமை மிக்க மாணவியாக உருவாக்கித் தந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

## இருக்க வேண்டியவை



- சுவையான உணவு படைக்க அன்புள்ள தாய்.
- ஒழுக்கமுள்ள நடத்தைக்கு நல்ல நண்பர்கள்.
- நல்ல அறிவு வளர சிறந்த ஆசான்.
- இனிமையான இல்லற வாழ்க்கைக்கு இங்கிதமான மனைவி.
- தூய சிந்தனைக்குத் தெய்வ பக்தி.

# எமது பாடசாலையும், கல்விக் கொள்கைகளும்

அரசுகுல சூரியன்
பா.அ.ச.உறுப்பினர்

பாடசாலைக் கல்வி கட்டாயக் கல்வி என்ற கட்டுப்பாடு சட்டப்படி வந்ததன் பின்பு பாடசாலைகள் பல்வேறு பரிணாம வளர்ச்சியைக் காட்டுவனவாக மாறியமை வெளிப்படையான உண்மையாகும். எமது வித்தியாலயமும் இதற்கு விதிவிலக்கான தல்ல. நல்லூர் பிரதேசத்தில் அனைவரையும் கவரும் வகையிற் கல்வியிலும், அழகிலும், தோற்றத்திலும் தனக்கென ஒரு கொள்கையை வகுத்து அதன்படி ஒழுகி, வழி காட்டிப் பாடசாலையாகத் திகழ்கிறது எனக் கூறும்போது அதற்காகப் பாடுபடும் அனைவரும் பெருமைப்படுத்தப்பட வேண்டியவர்கள்.

பாடசாலைச் சமூகம் என்பது முன்னைய காலங்களில்; அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வியதி காரிகள் என்ற வரையறுக்கப்பட்ட வட்டத் திற்குள் நின்று செயற்பட்டது. கட்டாயத் தேவையின் நிமித்தம் அபிவிருத்தி என்ற குடையின்கீழ் பெற்றோர்கள், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள் என அணி திரளச்செய்து, நவீன கொள்கையை வகுத்து, அனைவரிடமும் நல்லுறவைப் பேணுவதன்மூலம் கல்வி; இலக்கை எளிதில் அடையமுடியும் எனக்கண்டு கொண்டது. இச் செயற்பாட்டை நன்கு நிறைவேற்ற அனைவருக்கும் பலமாக நல்லதிபர் திகழ்வாராயின், அப்பாடசாலை அச்சமூகத் திற்கு நல்ல தொண்டாற்றும். அந்த வகையில் அனைவரையும் ஒருங்கிணைக் கும் நல்லதிபராக எங்கள் பெருமதிப்புக்குரிய அதிபர், அருட்சகோதரி மரியமலர் யோசப் அவர்கள் திகழ்கின்றார்.

பாடசாலையின் வளர்ச்சியில் அதிபர், ஆசிரியர் உறவுகள் திருப்திகர மானதாக அமைந்து காணப்படுமாயின் ஆரோக்கியமான கல்வியை மாணவர்கள் பெற்றுக்கொள்வார்கள். ஆசிரியர்கள் எதிர்நோக்கும் நேர்மை, கண்ணியம், கடமைக்கு மதிப்பளிக்கும் தன்மை, திறமையை, பாராட்டும்போக்கு ஒரு அதிபரிடம் காணப்படுமாயின் அதிபர், ஆசிரியர்கள் உறவில் விரிசல்தோன்றும் வாய்ப்புக்கள் குறைவாகக் காணப்படும். குறித்த இயல்புகள் ஆசிரியர்கள் எதிர் பார்ப்பிற்கு மிகையாகக் காணப்படுவதால் உறவுகளில் விரிசல் காணப்படுவதில்லை. இது இப்பாடசாலையிற் காணப்படும் பாரம்பரிய செயற்பாடுகளாகும்.

"பசி வந்தாற் பத்தும் பறந்து போம்" என்பார்கள். பச்சிளம் சிறார்கள் பசி பொறுக்கமாட்டார்கள். இதனை அறிந்து அதிபர் விழிப்படைந்தார். பல்வேறு

நிறுவனங்கள், வெளிநாட்டு நன்கொடையாளர்களின் உதவி யைநாடிப் பசி போக்கியதோடு, விருப்புடன் பாடசாலைக்கு ஓடிவரும் பிள்ளைகளாக மாற்றினார். எங்கள் பாடசாலைமாணவர்கள் வெளியே செல்லும் போது தமக்கெனச் சீருடையுடன் செல்ல வேண்டும் சென். பெனடிக்ற் என இனம் காணவேண்டும். ஒழுக்கம், அழகு ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்தும் அன்புள்ளம்கொண்ட அதிபராகத் திகழ்ந்தார்.

எந்தவொரு நிகழ்விற்கும் பெற்றோர்கள் அதிகம் கலந்துகொள்ள வேண்டும். பாடசாலையிற் பல்வேறு பொறுப்புக்களில் பெற்றோரின் பங்கு அதிகம் காணப்பட வேண்டும் என்றும் நினைப்பவர். அதுமட்டுமன்றி பாடசாலைக்கு வரும் அனைவரும் மனத்திருப்தியோடு வெளியேறவேண்டும் என்று பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்தி வெற்றியும் கண்டவர்.

அதிபரின் சேவைக்காலத்திற் புதிய அலுவலக அறை, சுற்று மதில் பூர்த்தி, ஒவ்வோர் வகுப்பிற்கும் ஒவ்வொரு வர்ணம், கணினி அறை என, பல்வேறு புதிய செயற்பாடுகளை மேற்கொண்டதோடு, கல்வித்தரத்திற் புலமைப் பரீட்சைப் பெறுபேற்றில் அதிகமானவர்களிற் சித்தி என, அவரின் கல்விச்சேவை நீண்டு கொண்டே செல்கிறது. வறிய சூழலைக் கொண்ட கிராமமொன்றில் எல்லோராலும் மதிக்கத்தக்க பாடசாலையாகத்திகழ நிகழ்ச்சி செய்ததோடு மட்டுமன்றி, பெற்றோர்கள் அதிக சுமையைத் தாங்காது பார்த்துக் கொண்டதோடு மட்டுமன்றி, தரத்தைக் குறைக்காது உயர்த்தி, பலராலும் மதிக்கப்படும் கண்ணியமிக்க அதிபராக, எமது வித்தியாலய அதிபர் திகழ்கிறார். அவரின் இச் சேவையைப் பெற்ற மாணவர்கள், பெற்றோர்கள், அயலவர்கள், புண்ணியம் செய்தவர்கள். எமது வித்தியாலய அதிபர் நீண்ட காலம் வாழவேண்டும். நற்பணிகள் அதிகம் ஆற்றவேண்டும். பல்வேறு சிறப்புக்கள் பெறவேண்டும் என்று, ஆண்டவனைப் பிராத்திக்கின்றோம்.

## நீங்கள் எந்த வகை

கோபமாய்ப் பேசினால் குணத்தை இழப்பாய்!
அதிகமாய்ப் பேசினால் அமைதியை இழப்பாய்!
வெட்டியாய்ப் பேசினால் வேளை(ல)யை இழப்பாய்!
வேகமாய்ப் பேசினால் அர்த்தத்தை இழப்பாய்!
ஆணவமாய்ப் பேசினால் அன்பை இழப்பாய்!
அவதூறாகப் பேசினால் இறையருளை இழப்பாய்!
அநாகரிகமாய்ப் பேசினால் ஆதரவை இழப்பாய்!



# பாடசாலை தந்த புலமைப்பரிசில்

அ.மதுமிதா
மாணவி. யாழ். நல்லூர்/ சென். பெனடிக்ற் வித்தியாலயம்

பாடசாலைக்குத் தவறாது சமுகமளித்தல், கல்வியின் இலக்கை அடைதல், போட்டிகளிற் பங்குகொள்ளல், பெறுபேறுகளில் மகிழ்ச்சியடைதல் என்பன மாணவர்களாகிய நாம் எதிர்நோக்கும் சவால்களாகும். சவால்களை முழுமையாக எதிர்கொண்டு கிடைக்கும் வளங்களை நேர்த்தியாகப் பயன்படுத்தப் பழகிக்கொண்டோமாயின் கல்வியின் இலக்கை எளிதில் அடைந்துவிட முடியும்.

புலமைப் பரிசிற் பரீட்சையில் எமக்குக் கிடைத்த வளங்களை, வாய்ப்புக்களை எவ்வாறு பயன்படுத்தினோம் என்று திரும்பிப் பார்த்தோமானால், கல்லூரியின் அதிபர், பெருமதிப்புக்குரிய அருட்சகோதரி மரியமலர் ஜோசப் அவர்களின் அளப்பரிய அர்ப்பணிப்புடனான கல்விச் சேவை கண்முன்னே நிற்கும். துடிப்புடைய மாணவர்களாகிய எமக்குப் பொருத்தமான ஆசிரியரைத் தேர்ந்தெடுத்துத்தந்து, இறுதிவரை அவரிடமே ஒப்படைத்ததுமின்றி ஆசிரியரின் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் கவனம் செலுத்தியதோடு, ஒவ்வொரு மாணவர்களின் நிலைமைகளையும், இருப்புக்களையும் அறிந்து தனித்தனியே கவனம் செலுத்தியவர் எமது கல்லூரி அதிபர்.

முன்னேற்றமடைந்த பெரிய பாடசாலைகளுக்கு நிகராக எங்கள் பாடசாலையையும், கல்வித் தரத்தை உயர்த்துவதற்காகப், புலமைப் பரீட்சையில் அதிக மாணவர்கள் சித்தியடைய வேண்டும் என்ற நோக்கிற் பரீட்சை வழிகாட்டிகளை வெளியிடங்களான கொழும்பு, காத்தான் குடி, மட்டக்களப்பு, யாழ். நகரிலிருந்து வெளிவரும் வினாக்களையும் பெற்று எமக்குத் தந்து, பயிற்றுவித்து, அத்தனை பயிற்சிகளையும் தவறுகளுக்குரிய பரிகாரத்தையும் உடனே பொருத்தமான ஆசிரியரைப் பயன்படுத்தித் திருத்திவித்து எம் கல்வியைத் தரமுயர்த்தியவர் எம் வித்தியாலய அதிபர் அவர்கள்.

வாழ்க்கையிற் பாடசாலை வாழ்க்கை மறக்கமுடியாத நினைவில் நிற்பதற்கான சில செயற்பாடுகள் அமைந்துவிடுவதுண்டு. அந்த வகையிற் களப்பயணம் ஒரு மறக்கமுடியாத செயற்பாடாகும். சமூகக்கல்வி முகாம், வேறு பாடசாலை மாணவர்களுடன் சேர்ந்து பயிற்சி முகாம் என ஒழுங்குசெய்து, புதிய தேடலைப் பெறும் பயிற்சியை வழங்கி, புதிய கல்வியுலகிற்கு எம்மை இட்டுச்சென்றவர் எங்கள் கல்வித்தாய் அதிபர் அவர்கள்.

பாடசாலை சாராத நிறுவனங்கள், மன்றங்கள் நடாத்தும் கல்விசார் போட்டி

களிற் சமய வேறுபாடின்றி அனைவருக்கும் வாய்ப்புக்களை வழங்கி அதன்பொருட்டு எமக்குக் கிடைக்கும் வெற்றிகளை விளம் பரப் பலகையில் இட்டுக் காட்சிப்படுத்துவ தோடு நிற்காது, மாணவர்கள் ஒன்றுகூடும் பிரார்த்தனைக் கூட்டத்திற் பரிசுகளை வழங்கி உற்சாகப்படுத்தி, ஏனைய மாணவர் களுக்கும் போட்டியிற் பங்குபற்றவேண்டும், பரிசில் பெற வேண்டும் என்ற உந்துசக்தியை ஏற்படுத்தி, அனைத்து மாணவர்களின் உள்ளங்களையும் வென்றவர் எமது அதிபர் அவர்கள்.

எமது பாடசாலையிற் கிடைத்த அனைத்துச் சந்தர்ப்பங்களையும் இயன்ற வரை பயன்படுத்தியிருக்கிறார். என்று எனக்கு எண்ணத்தோன்றுகிறது. கிடைக் கும் வாய்ப்புக்களைத் தட்டிக்கழியாது போட்டிகளிற் கலந்து பரிசுகள் சிலவற்றைப் பெற்றதோடு, புலமைப்பரிசிலின் இலக்கை யும் அடைந்திருக்கின்றோம். இத்தனை மேன்மைக்கும் வித்தியாலய அதிபரின் ஊக்கமும், ஆக்கமும், சேவை மனப்பாங்கும், அவரின் அன்புள்ளமும் துணை நின்றது என்றால் மிகையாகாது.

அதிபர் எம் மேம்பாட்டிற்காகச் செய்த அர்ப்பணிப்புச் சேவையை நினைக்கும்போது எங்கள் கண்களிலிருந்த கண்ணீர் சொரிந்து நிற்கிறதே.

எங்கள் அதிபர் நீடுழி வாழ்ந்து என்றும் சேவைகள் பல செய்ய ஆண்டவனை வேண்டி நிற்கின்றேன்.

## சிந்தனைத் துளிகள்

| | | |
|---|---|---|
| வணங்கத்தக்கவர்கள் | – | தாயும் தந்தையும் |
| வந்தால் போகாதது | – | புகழ், பழி |
| போனால் வராதது | – | மானம், உயிர் |
| தானாக வருவது | – | இளமை, முதுமை |
| நம்முடன் வருவது | – | பாவம் , புண்ணியம் |
| அடக்க முடியாதது | – | ஆசை, துக்கம் |
| தவிர்க்க முடியாதது | – | பசி, தாகம் |
| நம்மால் பிரிக்க முடியாதது | – | பந்தம், பாசம் |
| வருவதும் போவதும் | – | இன்பம், துன்பம் |
| எல்லோருக்கும் சமமானது | – | பிறப்பு, இறப்பு |



## இணைப்பாடவிதான செயற்பாடுகள்...



## விழாக்களில் ஆடிப்பாடி மகிழ்கையில்...



# My School

*R.Hariharan*
Past Student
Grade-7B.

My formar school is Jaffna Nallur St.Benedict,s R.C.T.M.S. It is situated in Nallur in the district of Jaffna Nothern province of Srilanka. Rev.Sr.M. Thevanesam and Rev.Sr.Mariamalar Joseph served as principals during my school life. They did their level best and kept the school flag flying higher and higher.

All my class teachers and other teachers who taught me from Grade 1 to Grade 5 did an excellent service to the school and specially to each on of us. They worked hard and helped us to face the scholarship examination bravely and helped us to get more marks in the examination.

The school not only helped us to grow intellectually but also in many other fields such as physical, spirituals, mental and social. It provided mid time meal during the interval with the help of UNICEF and we got many opportunities to show our talents during the sports meet.

We had many celebrations, namely School day, English day, Parents day, Tamil day and Religious festival. I got many friends in my formar school. I enjoyed studying with them. I love my formar school.

## It's a Joke



| | |
|---|---|
| Richard: | Would you punish a boy for some thing he didn't do? |
| Teacher: | of course, not |
| Rochard: | That's good. I haven't done my home work. |
| Dad: | How were your exam questions Ben? |
| Ben: | Fine, but I had difficulty with the answer. |
| An old man: | How long will the next bus be? |
| A young man: | About eighteen feet. |
| Priyah : | This restaurant must have a very Clean kitchen. |
| Vishnuya: | How did you know? |
| Priyah: | Everything tastes of soap. |

# விசேட கல்வி: ஒரு நோக்கு

**ஆ.ரவீந்திரன்**
B.A.Dip.in. Ed.M.Ed.
விரிவுரையாளர் யா/ தேசிய கல்வியற் கல்லூரி

விசேடகல்வி என்பது இன்று விரிந்துபரந்த ஒரு துறையாகப் பரிணமித்துள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகள் பலவற்றில் இத்துறையானது ஒட்டுமொத்த கல்வி மற்றும், அதனூடான சமுதாய மேம்பாட்டுக்குக் காத்திரம்மிக்க பங்களிப்பினை ஆற்றிவருகின்றது. இருந்தபோதிலும் வளர்முக நாடுகள் பலவற்றில் இன்றும் இத்துறையானது அரும்பு நிலையிலேயே இருந்துவருகின்றது என்பது நம் அனைவராலும் மறுக்கமுடியாத ஒரு உண்மையாகும்.

கல்வி அறிவைப் பொறுத்தமட்டிலே ஏனைய வளர்முக நாடுகள் பலவற்றுக்கு முன்மாதிரியாகத் திகழும் நமது நாட்டில்கூட இன்றும் பலர் இவ்விசேட கல்வி தொடர்பான புரிதலற்றவர்களாகவே காணப்படுகின்றனர். நல்ல கல்வியறிவினைப் பெற்ற, கல்விப்புலம் சார்ந்த உயர் மட்டத்தினரிடையேகூட இந்நிலையென்றால் மாணவர்கள் மற்றும், சாதாரண மக்கள் பற்றி நாம் எதுவும் கூறவேண்டியதில்லை.

எது ஏவ்வாறாயினும்? நமது நாட்டில் அண்மைக்காலங்களில் இவ்விசேட கல்வித்துறை தொடர்பான சில ஒளிக்கீற்றுக்கள் கிழம்பி வருவது ஓரளவுக்கேனும் ஆறுதல் தருவதாயுள்ளது. "விசேட கல்வி என்றால் என்ன? என்னும் வினாவுக்கு நாம் விடை பகர்வோமாயின்? விசேட தேவையுடைய மாணவர்களைப் போசிப்பதற்கான நுட்பங்கள், உத்திகள், வளங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய, விசேட ஆசிரியர் ஒருவரால் செயற்படுத்தக்கூடிய ஒரு இயல் அல்லது துறை என நாம் ஒருவாறு கூறலாம். இவ்விடத்தில் விசேட தேவையுடைய மாணவர்கள் என்றால் யார்? என்ற வினாவும் எழுவது இயல்பே. அதாவது சாதாரண வகுப்பறையொன்றிலிருந்து தனது கற்றல் செயற்பாட்டினை மேற்கொள்வதிற் பெருமளவு இடருறுகின்ற மாணவர்களையே நாம் விசேட தேவையுடைய மாணவர்கள் என்கின்றோம். மீத்திறனுடையோரும் விசேட நிபுணத்துவமுடை யோரும், மெல்லக்கற்போர், மெதுவாக உளவளர்ச்சியடைவோர், தீவிர உள நெருக்கீடு களுக்குட்பட்டோர், மற்றும் நெறிபிறழ்வுக் குட்பட்டோர், கேட்டல்குறைபாடுடையோர். முற்றாகப் கேட்டல்புலலை இழந்தோர், பார்வைக் குறைபாடுடையோர், பார்வையற்றோர். உடலுறுப்புக்கள் பாதிக்கப்பட்டோர். மொழிதலும் மொழிதற் குறைபாடும் உடையோர், பல்லினக் குறை பாடுடையோர், வலிப்பு, ஆஸ்துமா, சரும நோய்கள் போன்ற சில நோய்களால் பாதிக்கப் பட்டோர் போன்ற

பதின்மூன்று வகையினர் விசேட தேவை யுடையோராய் நமது நாட்டில் வரையறுக்கப் பட்டுள்ளனர்.

எனினும் இது முடிந்தமுடிவான ஒரு வரையறையன்று. சில மேலைநாடுகளில் பதின்மூன்றுக்கும் அதிகமான வகையினர் விசேட தேவையுடையோராக வரையறுக்கப் படுகின்றனர். விசேட தேவையுடையோர் என்ற வரையறைக்குள் மேலும் சில தரப்பினரும் உள்வாங்கப்படவேண்டும் என்ற வாதங்கள் நமது நாட்டிலும் எழுந்துவருகின்றன. எது எவ்வாறாயினும், விசேட தேவையுடையோர் பற்றிய இவ்வரையறையானது முடிந்தமுடிவான தன்று என்பதை இவ்விடத்தில் நாம் மனங் கொள்ள வேண்டும்.

ஆசிரியச்சேவை என்பது மகத் தானது: மேன்மைமிக்கது. சமுதாயத்தைக் கட்டி யெழுப்பிச் சீரிய வழியில் நெறிப்படுத்து கின்ற இந்த நேரிய பணிக்கு நிகராக நாம் வேறெதையும் குறிப்பிட்டுவிட முடியாது. ஆசிரியர்கள் பற்றி மனம் போனபடி விமர்சிப் பவர்களை, ஏன் கண்டிப்பவர்களைக் கூட உருவாக்கியவர்கள் ஆசிரியர்களே. இவ்வித மாய் அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை இகழ்வாரையும் தாங்கி நிற்கின்ற தன்னிகரில்லாப் பெருமைமிக்கவர்கள் நம் ஆசிரியர்கள். இவ்விதமான ஆசிரியப் பெருமக்களுக்கும் சில இன்றியமையாக் கடப்பாடுகள் இருக்கவே செய்கின்றன. குறிப்பாக, தன்னை நம்பி வருகின்ற அத்தனை மாணவர்களையும் போசிக்க வேண்டிய கடப்பாடு எந்தவொரு ஆசிரிய ருக்குமுண்டு. எவ்வாறு ஒரு தோட்டக்காரன் தன் பயிர்கள் அத்தனைக்கும் நீர் மற்றும், போசனைகள் கிடைக்கவேண்டும் என்பதில் குறியாக இருப்பானோ அவ்வாறே ஒரு ஆசிரியரும் தன் வகுப்பிலுள்ள எல்லா மாணவர்களும் தன் கற்பித்தலால் பயனடையுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் ஆசிரியத்துவம் முழுமைபெறும். இவ்விடத்திலேயே நாம் விசேட கல்வி பற்றிச் சிந்திக்க வேண்டியவர் களாக உள்ளோம். எந்த ஒரு வகுப்பறையை நாம் எடுத்துக்கொண்டாலும் குறைந்த பட்சம் பதினைந்து அல்லது இருபது சதவீதமான மாணவர்கள் ஏதோ ஒரு வகையில் விசேட தேவையுடையோராக இருப்பதற்கு வாய்ப்புண்டு எனத் தற்போது அறியப்பட்டுள்ளது. அதேவேளை, எல்லா மாணவர்களுமே ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் விசேட தேவை யுடையோராய் இருக் கவேண்டி ஏற்படும் என்பதும் தற்போது கண்டறியப் பட்டுள்ளது.

இவ்வகையில் நோக்குகின்ற போது இவ்விசேட கல்வி பற்றிய அறிவு நம் ஆசிரியர்கள் அனைவருக்குமே இன்றியமை யாதது என்பது நமக்குப் புலனாகும். தொடர்ச்சியாக நமது நாடு எதிர்கொண்டு வந்த யுத்த நிலைமைகள், எதிர்பாராதவித மாக ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் என்பன வற்றின் விளைவாக இன்று நம்மிடையே விசேட தேவையுடைய பிள்ளைகளின் எண்ணிக்கை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ள இந்த நிலையில் விசேட

கல்வியின் இன்றியமையாமை மேலும் அதிகமாகின்றது. விசேட கல்வித்துறை தொடர்பாக திடமான, தீர்க்கமான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படாத நிலையில் நாம் ஒட்டுமொத்தமான கல்வி முன்னேற்றம் பற்றிப் பேசுவதில் எவ்வித அர்த்தமுமில்லை.

நமது ஆசிரியர்களுக்கு இவ்விசேட கல்வி தொடர்பான ஒரு முன்னறிவினையேனும் ஏற்படுத்தும் நோக்கோடு அண்மைக் காலங்களில் பல்வேறு பயிலமர்வுகள், செயலமர்வுகள் நடத்தப்பட்டுவருகின்றன. இருந்த போதிலும், இவற்றால் ஏற்படுகின்ற பயன்கள் எந்த அளவுக்குக் காத்திர மானவை என்பது இன்னும் கேள்விக்குறி யாகவே உள்ளது. அத்தோடு, தேசிய கல்வி நிறுவகத்தில் தமிழ்மொழி மூலமான டிப்ளோமாக் கற்கை நெறியொன்று தற்போது நடத்தப்பட்டு வருகின்றது. ஆயினும், ஒருசில ஆசிரியர்கள் மட்டுமே இக்கற்கை நெறியினை மேற்கொள்ளக் கூடியவர்களாக உள்ளனர். அன்றியும், இக்கற்கை நெறியும் அத்துணை காத்திரமானதொன்றாக வடிவமைக்கப்பட வில்லை.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியானது 2004ஆம் ஆண்டு தமிழ்மொழி மூலமான விசேட கல்விக் கற்கை நெறியினை முதல்முதலாக ஆரம்பித்ததன் மூலம் இலங்கை யின் விசேட கல்வி வரலாற்றில் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்துக்கொண்டது என்பது உண்மையே. எனினும், இத்தனை ஆண்டுகள் கடந்த நிலை இன்றுங்கூட இத்துறை நவீன சொல்நெறிகளுக்கேற்ப வளர்ச்சிபெறாத ஒரு துறையாக, ஏனைய துறைகளைக் காட்டிலும் சவால்கள் நிறைந்த ஒரு துறையாகவே காணப்படுகின்றது என்பது நாம் ஏற்றுக் கொள்ளவேண்டிய ஒரு கசப்பான உண்மையாகும். தொகுத்து நோக்குகின்றபோது, விசேட கல்வியின் தேவை வெகுவாக உணரப்படுகின்ற இக்காலகட்டத்தில் இது தொடர்பான சிற்சில முன்னெடுப்புக்கள் நமது பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுவருவது மகிழ்ச்சிக்குரியதே.

எனினும், இவ்விடயத்தில் இன்னும் வலுமிக்க நடவடிக்கைகள் விரைந்து மேற் கொள்ளப்படவேண்டும் என்பதை யாரும் மறுக்கமுடியாது. நிச்சயமாக யாதேனு மொரு பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழி மூலமான விசேடகல்விக் கற்கை நெறியொன்று ஆரம்பிக்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியிலுள்ள விசேட கல்விக் கற்கைநெறி உரியவாறு வலுவூட்டப்பட வேண்டும். தேசிய கல்வி நிறுவகத்தில் தற்போது நடத்தப்படும் விசேடகல்வி டிப்ளோமாக் கற்கை நெறியானது பட்டப்பின் கல்வி டிப்ளோமாக் கற்கை நெறிக்குச் சமமானதாகத் தரமுயர்த்தப்பட வேண்டும்.

ஆசிரியர்களுக்கான. ஆசிரிய மாணவர்களுக்கான கற்கைநெறிகளிலே விசேட கல்வியும் ஓர் இன்றியமையாத

பகுதியாக இணைக்கப்படவேண்டும். விசேட ஆசிரியர்களின் பிரச்சினைகள் கவனிக்கப் பட வேண்டும்: அவர்களின் நிலை அல்லது அந்தஸ்து உயர்த்தப்படுவதற்கான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்விதமான முன்வைப்புக்கள் நடை முறைக்கு வருகின்றபோது நிச்சயமாக நமது சமூகத்தின் ஒட்டுமொத்தமான கல்வி முன்னேற்றத்தில் நல்ல பல மாற்றங்களை நாம் காணமுடியும்.

பத்து ஆண்டுகளுக்கும் மேலாகப் பயின்றும் க.பொ.த. சாதாரணப் பரீட்சையில் ஏன் ஒரு பாடத்தில்கூடப் பல மாணவர் களால் சித்திபெற முடிவதில்லை? எப்படியோ க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சித்திபெற்ற போதிலும் உயர்தரப் பரீட்சையில் ஏன் சில மாணவர்களால் ஒரு சாதாரண சித்தியைக் கூடப் பெற முடிவ தில்லை?

பத்தாம் வகுப்பில்கூட எழுத, வாசிக் கத் தெரியாத பல மாணவர்கள் காணப்படுவது ஏன்? இவ்விதமான வினாக் களுக்கு நாம் அப்போது பொருத்தமான தெளிவான பதில்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.



## முழுவட்ட வானவில்

**மழை பெய்து வெயிலடிக்கும்போதுதான் வானவில் தோன்றும். இதை நாம் பூமியில் இருந்து பார்க்கும் அரைவட்டமாகத்தான் தெரியும். ஆனால் நாம் விமானத்தில் போகும்போது பார்த்தால் வானவில் முழு வட்டமாகத்தான் தெரியும்.**

# கல்வி, ஒழுக்கம், இறைபக்தியில் எம்மை வளர்க்கும் பாடசாலை

**ஆர்.நிசாந்தன்**
03ஆம் வருடம் யாழ். பல்கலைக்கழகம்
பழைய மாணவன்- சென். பெனடிக்ற் பாடசாலை.

பாடசாலை என்பது வெறுமனே கல்வியை மட்டும் புகுத்தும் ஓர் இடமல்ல. ஒரு மனிதனை மனிதனாக்குவதிற் பாடசாலையின் செல்வாக்கு அளப்பரியது. அந்த வகையில் எமது நல்லூர் சென். பெனடிக்ற் றோ.க.த.க. பாடசாலை தனக்குரிய வகிபங்கை மிகச் சிறப்பாகச் செய்து வருகின்றது. இப் பாடசாலை எமக்குக் கல்வியை மட்டுமல்லாது; ஒழுக்கம், இறைபக்தி என்பவற்றையும் கற்றுத் தருகிறது. அந்தவகையிற் சிறந்த ஆளுமை மிக்க மாணவர்களை வளர்த்து அவர்களைச் சமூகத்தில் நல்லதொரு பிரஜைகளாக உருவாக்கியுள்ளது. இப்பாடசாலை தொடர்ந்தும் பல்வேறு சவால்களை எதிர்கொண்டும், தனது நேரிய பயணத்தில் வெற்றிகண்டும் பயணித்துக் கொண்டிருக் கிறது. இவ் வெற்றிப் பயணத்துக்கு இப்பாடசாலையின் அதிபர்கள் மிகச்சிறந்த வழிகாட்டிகளாகத் தமது பங்கினைச் செவ்வனே செய்து வருகின்றனர்.

இன்றைய மாணவர்களைப் பொறுத்த வரை, உறங்கும் நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களிற் பெரும்பகுதியைப் பாடசாலையிலும், மீதியைக் குடும்ப, சமூக, சூழலிலுமே செலவழிக்கின்றனர். எனவே, எந்த ஒரு பிள்ளையினதும் ஆளுமையிற் பாடசாலைச் சூழலின் வகிபங்கு அதிக மாகும். அந்த வகையில் கற்றல்– கற்பித்தற் செயற்பாடுகளிற் பாடசாலையின் முக்கியத் துவம் பற்றிய ஒரு சிறு கட்டுரையே இதுவாகும்.

ஒரு பிள்ளையின் எல்லாவிதமான ஆளுமையையும், விருத்தியையும் இன்றைய நவீன கல்விமூலம் குறிப்பிடத்தக்க அளவுக்கு சாத்தியமாக்கமுடியும். இதனுள்ளும் ஆரம்பக் கல்வியே பிள்ளை யின் பாதுகாப்பான எதிர்காலம், நல்வாழ்வு, தன்னம்பிகை கொண்ட வாழ்வு என்பவற் றுக்குத் துணை செய்யும். அந்த வகையில் இன்றைய கல்வி என்பது அறிவை மட்டும் புகுத்தும் ஒரு செயற்பாடல்ல. மாணவரது ஒட்டுமொத்த ஆளுமையையும் விருத்தி செய்ய வேண்டிய கட்டாயம் இன்றைய பாடசாலைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் உரியதா.

இதனடிப்படையில் ஆரம்பக் கல்வி யின் முக்கியத்துவம் மிகவும் உச்சமானது. ஆரம்பக்கல்வி என்பது பொதுவாக 1–5 வரையான வகுப்புக்களை உள்ளடக்கு கிறது. இதுவே இடைநிலை, உயர்நிலைக் கல்விக்கு அத்திவாரமாக அமைவதனால் அது உறுதி உடையதாக இடப்படல்

வேண்டும். ஆரம்ப கல்வியிலேயே சரியான கல்வி அறிவு, நற்பழக்கவழக்கங்கள், நல்மனப்பாங்கு, விழுமியங்கள், திறன்கள், சுயசிந்தனை, திறனாய்வு, சமூக இசை வாக்கம், ஒழுக்கம், இறைபக்திபோன்ற அடிப்படை மனிதப்பண்புகள் கற்பிக்கப் படுகிறது.

**இன்றைய நவீன கல்வி**

இன்றைய நவீன உலகிற் கல்வி பற்றிய சிந்தனைகள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. கல்விக்கான நோக்கங்களும், கற்றலுக்கான தேவை களும், கற்பித்தல் முறைகளும் காலத் துக்குக் காலம் மாற்றமடைந்து வருகின்றது. ஏனெனில், நடைமுறையிற் காணப்படும், எதிர்பார்க்கப்படும் பல்வேறுபட்ட பிரச்சினை களுக்கும், சவால்களுக்கும் கல்வியூ டாகவே தீர்வுகாண முனையப்படுகின்றது. இதனால் கற்றல் என்பது வெறுமனே விடய அறிவுக்கானது மட்டுமல்லாமல், மனிதனது பல்வேறு ஆளுமைகளை விருத்திசெய்து சமுதாயத்திற் சவால்களுக்கு முகம் கொடுத்து வாழக்கூடிய ஆற்றலை வளர்த் தெடுக்கின்றது. இதனடிப் படையில் இன்று "கற்றலுக்காகக் கற்றல்" என்ற எண்ணக் கரு வலுப்பெற்று வருகின்றது.

இக் கற்றலுக்கான கற்றல் என்பது பிரதானமாக நான்கு செயற்பாடுகளை அடிப் படையாகக் கொண்டது. அவையாவன:

01. அறிவதற்காகக் கற்றல்.
02. ஆற்றலுக்காகக் கற்றல்.
03. வாழ்வதற்காகக் கற்றல்.
04. சேர்ந்து வாழ்வதற்காகக் கற்றல்.

அறிவதற்காகக் கற்றல் என்பது பிள்ளையின் அறிவுசார் விருத்தியை மையமாகக் கொண்டது. எந்தவொரு பிள்ளையும் வயதுக் கேற்ற தேவையான அறிவினைப் பெறல் வேண்டும். இவ் அறிவு என்பது பாடப்புத்தகங்கள் ஊடாக மட்டுமன்றி, நடைமுறையில் அன்றாடம் மாற்றம்பெறும் விடயங்கள் தொடர்பாகவும் மாணவர் மத்தியிற் காணப்படல் வேண்டும். பாடப் புத்தகங்கள், சில வரையறைக்குள் உள்ளடக்கப்படும்போது, அவை தொடர்பாக ஏனைய விடயங்களைத் தேடல் மூலம் கற்க வேண்டிய அவசியம் தோன்றியுள்ளது. மாணவர்கள் எந்தவொரு விடயம் தொடர்பா கவும் பரந்துபட்ட அறிவினைத் தேடல், வாசித்தல்மூலம் பெறுவது அவசியமானது. இவ்வாறு தேடிக்கற்றலுக்கான சந்தர்ப்பத் தையும், சூழலையும் பாடசாலைச் சமூகமே ஏற்படுத்திக் கொடுப்பது அவசியம்.

ஆற்றலுக்கான கற்றல் என்பது மனிதன் தான்பெற்ற அறிவை வாழ்க்கையிற் பிரயோகிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அறிவுக்கான கற்றலுடன் ஆற்றலுக்கான கற்றலும் சேரும்போதே மனிதன் தான் எதிர்கொள்ளும் புதிய சவால்களுக்கு முகம் கொடுத்து வாழமுடியும். மாணவர்களைப் பொறுத்தவரை பாடப்புத்தகங்கள் மூலம் பெற்ற அறிவினை நடைமுறையிற்

பிரயோகித்து பழக வேண்டும். இவ் ஆற்றலுக்கான கற்றல் திறன்சார் விருத்தியை அடைய ஆக்கத்திறன் மற்றும் உற்பத்தித் திறனில் மாணவர்கள் தேர்ச்சி பெற வேண்டும். தாம்பெற்ற அறிவினைச் செயற் படுத்தி அல்லது இயக்கிப் பயன்படுத் துவதன்மூலம் தமது வினைத்திறனை அதி கரிக்க முடியும். இதற்குத் தற்போது பாடசாலைகளிற் செயற்படுத்தப்படும் கணிப் பீடுகள், செயற்றிட்டங்கள் பெருமளவில் உதவுகின்றன.


அடுத்து, வாழ்வதற்காகக் கற்றல் என்பது அறிவு விருத்தியும், திறன் விருத்தியும் ஒன்றுசேரும்போது மனிதன் இயல்பாகவே வாழப்பழகிக் கொள்கிறான். வாழ்வதற்கான கற்றலிலே தனியாள் ஆளுமைவிருத்தி, தீர்மானமெடுக்கும் திறன், தலைமை வகித்தல், செயற்படுதல், பொறுப்புணர்தல், சிந்தித்தல் ஆகிய விருத்திகள் உள்ளடங்கும். இவற்றை வளர்த்துக்கொண்ட மனிதன் எத்தகைய சவால்களுக்கும் முகம்கொடுத்து வாழப் பழகுவான்.

அதேநேரம், மனிதன் சேர்ந்து வாழக் கற்றுக்கொள்ளவேண்டும். மனிதன் சேர்ந்து வாழல் என்பது இன்றைய காலத்தின் முக்கிய தேவையாக உள்ளது. ஏனெனில், நாம் வாழ்வது பன்மைத்தன்மை வாய்ந்த பரந்துபட்ட சமூகச் சூழலிலே. எனவே, பன்மைச்சமூக உறவு, பரஸ்பர நல்லுறவு, புரிந்துணர்வு, ஒருவருக் கொருவர் விட்டுக்கொடுத்தல், உதவி செய்தல், கூட்டுமுயற்சி போன்ற பண்புகளும் கற்றல்மூலம் கிடைக்கிறது. இப்பண்புகள் பாடசாலைகளில் ஆரம்பக்கல்வியிலேயே வளர்த்தெடுக்கப் படுகிறது.

இறுதியாக, கற்றல் என்பது பல்வேறு கோணங்களிலும் நோக்கப்படும் போதே, அது பயனுடையதாக மாறுகிறது. அதேநேரம், கல்வி மட்டுமல்லாது ஒழுக்கமும் நற்பண்பும் ஒன்று சேரும் போதே மனித வாழ்வு நிறைவுபெறுகிறது.

### சிந்திக்கச் சில துளிகள்

◈ கல்வியின் குறிக்கோள் புள்ளி விபர அறிவைப் பெறுதல்,
பண்பு நெறி அறிவைப் பெறுவதே.



## மணிவிழாக் கண்டு மகிழ்கையில்...



இறையாசீர் வேண்டுகையில்...






அகவை அறுபதில்...



அன்னையுடன் அதிபர் அவர்கள்

ஆசிரியர்களுடன் அதிபர் அவர்கள்

## எமது பாடசாலையின் சிறார்கள்



தரம் 1A மாணவர்கள்



தரம் 1B மாணவர்கள்



தரம் 5 மாணவர்கள்

# சிறுவரும் அரங்க விளையாட்டுக்களும்

திருமதி த.ஷாம்சன் ஜெராட் (ஆசிரியர்)
யா/நல்லூர். சென். பெனடிக்ற் வித்தியாலயம்.

இன்றைய காலகட்டத்தில் சிறுவர் களுக்குக் கற்றல்–கற்பித்தலுடன், அரங்க விளையாட்டுக்களும் முக்கியமான தொன்றாக உள்ளது. சிறுவர்களின் உளம் வளர அரங்க விளையாட்டுக்கள் அவசியம். மாணவர்கள் தொடர்ந்தும் பாடசாலைக் கற்றலில் ஈடுபடாது சிறிதுநேரம் அவர்கள் விளையாட்டிலும் ஈடுபடவேண்டும். அப்போதுதான் அவர்களின் உள்ளம் மகிழ்ச்சியடைந்து தொடர்ந்தும் கற்றலில் ஈடுபட உற்சாகத்துடன் காணப்படுவார்கள்.

மாணவர்கள் விளையாட்டுக்களில் ஈடுபடுவதாற் சோம்பலும் நீங்கி அனைவரும் உற்சாகமடைவதுடன் நல்ல கல்வி கற்கும் சூழலும் வகுப்பறையில் உருவாகிறது. அத்துடன் பாடங்களைத் தொடங்கும்முன் சிறுவிளையாட்டுடன் ஆரம்பித்தால் அவர்களுக்கு மகிழ்ச்சியும், கற்றலில் ஆர்வமும் ஏற்படுகிறது. சிறுவர்கள் தங்கள் வாழ்க்கையின் முக்கிய பங்கை ஆரம்பப் பாடசாலையிலே பெறுகிறார்கள். இக் காலத்திலே பிள்ளையின் ஆக்கத்திறன் விருத்தியடையத் தொடங்குகிறது. இதற்கு அரங்க விளையாட்டுக்களும் உதவுகின்றன. இவ் அரங்க விளையாட்டுக்கள் மாணவர் களின் மன நிலையை இலேசானதும், சுதந்திரமானதுமாக மாற்றி, கற்றலுக்கான தயார்நிலையை மாணவர்களுக்கு ஏற்படுத்துவதற்கும் உதவுகின்றன.

கற்றலின்போது கல்வி அளிக்கும் ஆசிரியர்கள் குழந்தைகளாகவும், கல்வி பெறும் சிறுவர்கள் பெரியவர்களாகவும் மாறவேண்டும். என வினோபாஜி அவர்கள் கூறுவதுபோன்று அரங்க விளையாட்டின் போது, ஆசிரியர்களும் மாணவர்களாகி, மாணவருடன் சேர்ந்து விளையாடும்போது அவர்களின் மனம், மிக்க மகிழ்ச்சி யடைகிறது. எனவே, சிறுவர்களின் குணங்களையும், வளர்ச்சி நிலைகளின் தன்மைகளையும் உணர்ந்து உற்றுநோக்கி, ஆசிரியரும் மாணவர்களுடன் அரங்க விளையாட்டுக்களில் ஈடுபடவேண்டும். மாணவர்கள் ஒரு வேலையில் தொடர்ந்தும் ஈடுபட விருப்பம் காட்டமாட்டார்கள். எனவே, கல்வியைக்கூட ஒரு விளையாட்டாக அறிமுகப்படுத்தும் பொழுது அவர்கள் கல்வியின் செயற்பாட்டைக் கற்கவேண்டிய விடயங்களை இலகுவாக விளங்கிக் கொள்ளக் கூடியவர்களாக உள்ளார்கள். ஆரம்பக் கல்வியைப் பொறுத்தவரை கற்றலுடன் விளையாட்டுக்களும் மாணவர் களுக்கு அவசியம். விளையாடும்போது

அவர்களின் தசைநார் வளர்ச்சி, மனவளர்ச்சி என்பன விருத்தியடை கின்றன, மாணவர்களிடையே ஒற்றுமையும் ஏற்படுத்தப்பட்டு ஆசிரிய மாணவர் உறவும் அங்கே வளர்கிறது.

அரங்க விளையாட்டுக்களில் மாணவர்கள் ஈடுபடுவதனால், தன்னையும், பிறரையும் மகிழ்வூட்டும் தன்மையும், எந்நேரமும் எதற்கும் தயார் நிலையில் இருப்பதையும், புதிய விடயங்களைத் தேடியறிந்து வெளிப்படுத்துவதையும், கூச்சமின்றி பேச்சாற்றலை வெளிப்படுத்து வதற்கு முன்வருவதையும், குழுவாக உற்சாகமாகச் செயற்படுவதையும், தனது எண்ணக் கருத்தை உணர்வைப் பயமின்றி வெளிப்படுத்துவதையும் காணக்கூடியதாக உள்ளது.

அரங்க விளையாட்டின்போது ஆசிரியர் தன்னை ஒரு நெறியாளராக நினைத்து, விளையாட்டை நன்கு திட்ட மிட்டு, மாணவர்களைச் செயற்படுத்த வேண்டும். பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு பிள்ளைகளை அரங்க விளையாட்டில் ஈடுபடச்செய்யவேண்டும். மாணவர்களிடையே கணித இயல்பும், மொழி தொடர்பான ஆற்றல்களும் அரங்க விளையாட்டுக்கள்மூலம் வளர்கின்றன. எனவே, மாணவர்கள் அரங்க விளை யாட்டுக்களினூடாகத் தமது கல்வியையும் நற்பண்புகளையும் வளர்க்க முடியும்.

## சிந்திக்கச் சில துளிகள்

- உண்மையான பெரிய மனிதனுக்கு முதல் அடையாளம்
  பணிவு.
- உண்மையான வீரன் மௌனமாக வேலை செய்கிறான்.



# ஆரம்பக் கல்வியின் அணுகுமுறை நுட்பங்கள்

**திருமதி. கவிதா சிவகாந்தி**
ஆசிரியை,
யா/நல்லூர் சென் பெனடிக்ற் வித்தியாலயம்.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" ஐந்து வயது பூர்த்தியடைந்த பிள்ளைகள் தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரை பாடசாலைகளிற் பெற்றுக் கொள்கின்ற கல்வியே ஆரம்பக் கல்வி ஆகும். இக் கல்விக்குரிய களமாக அமைவது ஆரம்பப் பாடசாலையாகும். இயற்கையினால் வழங்கப்படும் அனைத்துமே நல்லவையா கையால், கல்வியும் இயற்கைக்கு இயையவே அமையவேண்டும் என ஜீன் ஜக்ஸ் ருஸோ குறிப்பிட்டுள்ளார். பிள்ளையிடத்தே சிந்தனையினூடாகப் பார்த்தல், சிந்தித்தல், உணருதல் முதலிய ஒழுங்குமுறை ஒன்றிற்கு வழிகாட்டுதல் வேண்டும் என்பதே இன்றைய சிந்தனையாளருடைய கருத் தாகும். "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்பதற்கிணங்கத் திறனும், ஆற்றலும் விருத்தி பெறுவதற்குப் பிள்ளைக்கு ஆரம்பக் கல்வியிற் கற்றல், கற்பித்தல் அணுகுமுறை நுட்பம் அவசிய மும், அவசரமும் என்றால் மிகையாகாது.

ஒரு மாணவனை இன்னொரு மாணவனுடன் ஒப்பிடுவதையும், வகைப் படுத்து வதையும் முதலில் தவிர்த்துக் கொள்வது சிறந்தது. முதலில் மாணவர் களை இனங்காண வேண்டும். குறைவான செயற்பாடுகளுக்கான காரணங்களை அறிதல் சிறந்தது. எடுத்தவுடன் பிள்ளை களைப் பேசுவதையோ, தண்டனை கொடுப் பதையோ தவிர்த்தல் வேண்டும். பிள்ளை களுடன் ஆசிரியர் அணுகுகின்ற முறைகளிற்றான் பிரச்சினைகளைப் படிப்படியாக வெளிக்கொணரும். மாற்று நடவடிக்கையாகப் பெற்றோரை அணுகுதல் அல்லது பாடசாலை நிர்வாகத் திடமோ இருந்து பெற்றுக்கொடுக்கும் வழிமுறை களைக் கையாள முடியும். ஆசிரியர் மீது ஒரு பிள்ளைக்கு நம்பிக்கை ஏற்பட்டுவிட்டால் அந்தப் பிள்ளை சகல துறைகளிலும் படிப்படியாக முன்னேறிவிடும். மாதமொரு தடவையாவது பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு இடம்பெறுதல் அவசியமாகும். இது பிள்ளைகளின் முன்னேற்றங் களையும், பிரச்சினைகளையும் அறிந்து மேலும் விருத்தி செய்ய வழிப்படுத்த உதவும்.

கற்றல், கற்பித்தல் நடவடிக்கை என்பது ஓர் இணைந்த நடவடிக்கை ஆகும். பாடசாலையும், சமூகமும் இணைந்து இதைச் செய்தல் வேண்டும். பாடசாலையிற் கற்றபின் மாணவன் சமூக, வீட்டு அகவயக் காரணிகளின் தாக்கத்துக்குட்பட்டுப் பின்

பாடசாலைக்கு வந்தபின் ஆசிரியர் அவனை மீளளித்து வகைப்படுத்தி மீள் உருவாக்கும் நிலைகளும் உண்டு. கற்றல், கற்பித்தல் அணுகுமுறையைச் சீராக்குவதற்கு ஏற்ற சூழலை வகுப்பறையில் ஆசிரியர் ஏற்படுத்த வேண்டும். இடவசதியும், நல்ல காற்றோட்ட மும், நல்ல வெளிக்களமும் உள்ள இடத்தில் கற்பித்தல் சாதனங்கள், அலுமாரி, அலங்கார வேலைப்பாடுகள் இருந்தால் மாணவரைக் கற்றலுக்கு இட்டுச்செல்ல வாய்ப்பு ஏற்படுகின்றது. பிள்ளைக்குத் தெரிந்த விடயத்தில் இருந்து தெரியாத விடயத்திற்கு இட்டுச்செல்லவேண்டும். வளப் பிரயோகத்திற் பயன்படுத்தும் கற்றற் சாதனம் பாடக் கருவுடன் இணைந்த தாகவும், எல்லா மாணவரும் கையாளக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். கல்வி புகட்டும் ஆசிரியர் தாயாக, தாதியாக, நண்பனாக, ஆலோசனை வழங்குபவராக, வழிகாட்டியாக, சிந்தனையைத் தூண்டு பவராக, துணைச் சாதனங்களை உரிய முறையிற் கையாளக்கூடியவராக இருப்பின் ஆரம்பக் கல்விமூலம் நாட்டில் நற்பிரஜை களை உருவாக்க இடர்பாடு எதுவும் இருக்காது.

பிள்ளைகளிடம் மறைந்திருக்கும் இயல்பான ஆற்றல்களைப் புலப்பயிற்சிமூலம் வெளிக்கொணர்தல் என்பதைக் குழந்தைப் பூங்கா முறையை அறிமுகம்செய்த பெஸ்ரலோஜி முன்வைத்துள்ளார். சிறுவர் கள் வளரும் செடிக்கு ஒப்பானவர்கள். செடியின் வளர்ச்சியில் தோட்டக்காரன் எவ்வளவு கண்ணும் கருத்து மாக இருக்கின்றானோ அவ்வாறே சிறுவர் களின் வளர்ச்சியிலும் ஆசிரியர் தோட்டக் காரனைப் போன்று இருத்தல்வேண்டு மெனக் குழந்தை பூங்காமுறை எடுத்தியம்பு கிறது. ஆரம்பக் காலங்களிற் கல்வி உளவிய லாளர்களாற் கூறப்பட்ட கற்பித்தல் முறை கள் அனைத்தையுமே உள்ளடக்கியதாக இன்றைய கற்பித்தல் முறைகள் அமைய வேண்டிய தேவை உள்ளது.

விளையாட்டு முறையிலான கற்பித் தல், கண்டறி முறை, செய்து காட்டல், குழுமுறை, பிரச்சினை விடுவித்தல், கலந்துரையாடல் முறை, இவை அனைத்துமே வகுப்பறையில் திட்டமிட்டுக் கற்பித்தல் நுட்பங்களாகப் பயன்படுத்தப்படு மாயின் அங்கே மகிழ்ச்சிகரமான கற்றல் – கற்பித்தல் இடம்பெறுகின்றது என்றே கூறலாம். சிறுவர்கள் ஆடிப்பாடவே கூடுதலாக விரும்புகின்றனர். வகுப்பறைக் குள் வைத்துத் தொடர்ச்சியாகக் கற்பிப்பது கற்றலில் ஆர்வத்தைக் குறைப்பதுடன் வெறுப்பு ஏற்படவும் செய்கின்றது.

எனவே, ஆரம்பக்கல்வி ஆசிரியர் கள் ஆகிய நாம், மாணவர்களுக்கு, கற்கக் கூடிய சூழலை உருவாக்கி, அனுபவ ரீதியாகக் கற்க வழிகாட்டி, பிள்ளைகளின் உணர்வுகளுக்கு மதிப்பளித்துப் பிள்ளை களின் எதிர்கால உயர்வுக்கு வழி சமைப்போம்.

# யாழ்ப்பாணப் பாடசாலைகளிற் கவி நிலையைத் தரும் 5 S நடைமுறை

திரு எல். மகேஸ்வரன்
அதிபர்
யாழ் / சென் ஜேம்ஸ் மகளிர் கல்லூரி.

இன்று யாழ்ப்பாணத்திற் பாடசாலைகளைக் கவிநிலையாக்குவதற்கு 5S நடைமுறை பின்பற்றப்படுகின்றது.

அன்று யப்பான் நாட்டிலே ஏற்பட்ட யுத்தத்தால் அந்நகரம் முற்றாக அழிக்கப் பட்டது. ஆனால் அந்நாடு 5S நடைமுறையைப் பின்பற்றி, மிகவும் துரிதமாகக் கட்டியெழுப்பி மிகவும் வளர்ச்சி பெற்ற நாடாக விளங்குகின்றது.

அந்த யப்பான் நாட்டவரால்தான் இலங்கையில் இந்த 5S முறை அறிமுகப் படுத்தப்பட்டது.

2006ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் யாழ். வலயத்திற் பத்து இலக்குப் பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு, ஒரு குறிப்பிட்டளவு நிதியையும் கொடுத்து, இந்த 5S நடைமுறை வேலைத்திட்டம் ஆரம்பிக்கப் பட்டது. அதிலே எமது பாடசாலையும் ஒன்றாகும்.

இந்தப் பத்துப் பாடசாலைகளும் சிறப்பாக இவ்வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தி அதிலே வெற்றிகண்டுள்ளது.

## What is "5S"?

| | | |
|---|---|---|
| SEIRI | SORTING | வகைப்படுத்தல் |
| SEITON | SYSTEMATIZING | ஒழுங்குபடுத்தல் |
| SEISO | SANITIZING | தூய்மைப்படுத்தல் |
| SEIKITSUSTAN | DARDIZING | தரமுயர்த்தல் |
| SHITSUKESELF | DISCIPLINING | சுயஒழுங்கு |

### வகைப்படுத்தல்

வகைப்படுத்தல் என்னும்பொழுது ஒரு நிறுவனத்திற் பல பொருட்கள் காணப்படுகின்றன. அதில் தேவையான பொருட்கள், தேவையில்லாத பொருட்கள் காணப்படுகின்றன. இதில் நாம் தேவையானவற்றைத் தெரிவுசெய்து பட்டியற்படுத்த வேண்டும். தேவையில்லை எனக் கருதும் பொருட்களை முறையான அனுமதியைப் பெற்ற பின்பு பதிவழிப்புச் செய்து அதனை அழிக்கலாம்; அகற்றலாம்.

### ஒழுங்குபடுத்தல்

ஒழுங்குபடுத்தல் என்பது முன்னர் வகைப்படுத்திய பொருட்களை ஒவ்வொரு பிரிவுக்கும் இலக்கம் இட்டு அடையாளப் படுத்தல் வேண்டும். உதாரணமாக நூலகத்திற் புத்தகங்களுக்கு இலக்கமிடல், விஞ்ஞானக் கூடத்தில் பொருட்களை ஒழுங்குபடுத்தல் அலுவலகத்தில் ஒவ்வொரு

அலுமாரிகளில் இருக்கும் கோவைகளுக்கும் இலக்கமிட்டு ஒழுங்குபடுத்தல், அத்துடன் வகுப்பறைகளை அடையாளப் படுத்தல், வரைபடம்போடுதல், நோக்கக் கூற்று, பணிக்கூற்று என்பவற்றைக் காட்சிப்படுத்தல்.

வகுப்பறைக்குள் மாணவர்களின் தளபாடங்கள், புத்தகப்பை, ஆசிரியர் மேசை, கதிரை என்பன உரிய இடங்களில் வைத்தல். ஆரம்பப் பிரிவிற் பிள்ளைமையக் கல்வியை நடைமுறைப்படுத்தக்கூடிய வகையில் மணல் மூலை, நீர் மூலை, வாசிப்பு மூலை, ஒப்பனை மூலை அமைத்து வகுப்பறையைக் கவிநிலையாக்கல்.

**தூய்மைப்படுத்தல்**

இவ்வாறு வகைப்படுத்தி ஒழுங்கு படுத்தியவைகளைத் தூய்மையாகப் பேணிப் பாதுகாக்க வேண்டும். நாளாந்தம் சுத்தம் செய்துவரும்பொழுது தூய்மையாக இருக்கும். அந்த நிறுவனமும் மிகவும் தூய்மையடைந்து வரும்.

**தரமுயர்த்தல்**

இவ்வாறு வகைப்படுத்தி ஒழுங்கு படுத் தப்பட்ட நிறுவனம் தூய்மையாகக் காட்சியளிப்பதுடன் படிப்படியாக முன்பு இருந்த நிலையை விடத் தரமுயர்ந்து காணப்படும்.

**சுய ஒழுங்கு**

இவ்வாறு மேலே குறிப்பிடப்பட்ட வகைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், தூய்மைப் படுத்தல், தரமுயர்த்தல்போன்ற நான்கு விடயங்களையும் ஒழுங்காகப் பேணும் பொழுது அந்நிறுவனத்திற் பணிபுரியும் அனைவரிடமும் சுய ஒழுங்கு ஏற்படும்.

இவ்வாறான 5S நடைமுறையைப் பாடசாலையில் ஒழுங்குசெய்வதால் ஆசிரியர் மாணவர்களிடையே நல்ல மனப்பாங்கு வளர்கின்றது. உள்ளத்திலே நிறைவு, திருப்தி, சேவையிலே மகிழ்வு, நிறைவு என்பன கிடைக்கின்றது. நேரம் மீதப்படுத்தப்படுகின்றது. பாடசாலை மகிழ்வான இடமாக மாறுகின்றது. பிள்ளை பாடசாலையை விருப்புடன் நாடி வருகின்ற நல்ல கவிநிலை உருவாகின்றது.

இவ்வாறு 2009ஆம் ஆண்டும் இரண்டாவது இலக்குப் பாடசாலைகளாகப் பத்துப் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு 5S நடைமுறையைச் செயற்படுத்தி வருகின்றனர்.

இந்த வகையிலே நோக்கும் பொழுது யா/ சென். பெனடிக்ற் வித்தியாலயமும் இந்த 5S நடைமுறையைப் பின்பற்றி, மிகவும் சிறப்பான முறையிற் பாடசாலையை ஒழுங்குபடுத்திச் சிறப்பான கவிநிலையை உருவாக்கி இருப்பது மிகவும் பாராட்டவும் விரும்பவும் தக்கது.

இவ்வாறு செயற்படுத்துவதற்கு முழுவதும் தன்னை அர்ப்பணித்தவர் இந்தப் பாடசாலையின் அதிபர், அருட்சகோதரி மரியமலர் (A.C) அவர்களது சேவையையும் பாராட்டி நிற்பதில் மகிழ்வடைகின்றேன்.

# சிறுவர்களே எதிர்காலத்தை உருவாக்கும் சிற்பிகள்

திருமதி றஜித்தா சர்வேஸ்வரன்
ஆசிரியை,
யா/சென். பெனடிக்ற் வித்தியாலயம்.

"அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது" என்றார் ஔவையார். அரிய மானிடப் பிறவியை எடுத்த மனிதன் இன்று விஞ்ஞானப் பாதையிலே வீறு நடைபோட்டுக் கொண்டிருக்கிறான். இவ்வாறாகச் சிறந்த அறிவுமிக்கதான சமுதாயத்தைப் படைப்பதிற் பெரும் பங்கினை வகிப்பவர்கள் சிறுவர்களே. இன்றைய சிறுவர்களே நாளைய சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் சிற்பிகள்.

சிறுவர்கள் சமுதாயத்தின் ஆணிவேர் போன்றவர்கள். சிறுவர்களது மனங்களிற் சூதுவாதிற்கோ, கள்ளங் கபடத்திற்கோ துளியேனும் இடமில்லை. இத்தகைய மனங்களிலேதான் நல்லெண்ணங்களும், நற்செயல்களும் தோன்றி எதிர்காலச் சமுதாயத்தினை திறம்பட நடாத்த வழி வகுக்கின்றன. சிறுவர்களது உள்ளம் மிகத் தூய்மையானதாகக் காணப்படுவதால் அவர்கள் எண்ணங்களே எதிர்காலத்தினைத் திறம்படச் செதுக்க உறு துணையாகின்றன.

"இழுக்கல் உடையுழி ஊன்றுகோல் அற்றே
ஒழுக்கம் உடையார் வாய்ச்சொல்"

என்பது வள்ளுவன் வாக்கு.

ஒழுக்கமுடைய ஆன்றோரின் வார்த்தைகள் ஊன்றுகோல்போல வாழ்க்கைக்குப் பயன்படுகின்றன. சிறுவர்களும் ஆன்றோர்களின் வார்த்தைகளைச் சிரமேற்கொண்டு ஒழுக முற்படுகின்றார்கள். எனவே, சிறுவர்களாற் செதுக்கப்படும் எதிர்காலத்திலே சிறந்ததொரு சமுதாயத்தினை நாம் கண்டு இன்புறலாம்.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணிற் பிறக்கையிலே அது நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" என்கிறது ஒரு பாடலடி. இதில் இருந்து ஒரு பிள்ளையின் முன்னேற்றத்திற் பெற்றோர்களின் பங்களிப்பு எவ்வளவு முக்கியமானது என்பது தெளிவாகிறது. சிறுவர்கள் பெரியவர்களின் வழியொட்டி நடக்க முற்படுவதாற் பெரியோர்கள் தாம் கடமை, நேர்மை தவறாது ஒழுகவேண்டும். பெரியவர்கள் தாம் தவறு செய்துகொண்டு சிறுவர்கள் செய்யும் தவறுகளைத் திருத்த முற்படும் வேளை பல பிரச்சினைகள் தோன்றுகின்றன.

ஒரு பயிரை நாட்டி, அதற்கு நீரூற்றிப் பசளையிட்டு நன்கு பராமரித்தால்தான் அதன் பலனைப்

பெறமுடியும். அதுபோலவே பெரியவர்கள் அன்பையும், அறிவையும் ஊட்டிச் சிறுவர்களை வளர்த்தால்தான் அவர்களாற் செதுக்கப்படும் எதிர்காலமெனும் சிற்பம் சிறப்பாக அமையும்.

சிறுவர்களின் உள்ளத்தில் நாம் கூறும் விடயங்கள் யாவும் பசுமரத்தாணி போல மிக ஆழமாகப் பதிந்துவிடுகின்றன. எனவே, சிறுவர்களுக்கு வழங்கப்படும் கல்வியானது அறிவு பூர்வமானதாக அமைந்திருக்க வேண்டும் "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்று சொல்வார்கள். எனவே, சிறந்த முறையிற் சிறு வயதிலே சிறப்பான முறையிற் கல்வி கற்பிக்கப்படுமெனின் அவர்களால் எதிர் காலத்திலே சீரிய சமுதாயத்தினை வடித் தெடுக்க முடியும்.

சிறுவர்களாற் சாதிக்கமுடியாதது எதுவுமேயில்லை என்பதற்குப் பாக்கு நீரிணையைக் கடந்த பதின்மூன்று வயதுச் சிறுவனும், எட்டு வயதிலே பட்டதாரியாகிய அமெரிக்காச் சிறுமியும் சிறந்த எடுத்துக் காட்டுக்கள். சிறுவர்கள் மனதிலே வஞ்சகம், பொறாமை போன்ற தீய எண்ணங்கள் சிறிதளவும் காணப்படுவதில்லை. இதனால் இவர்களிடம் உருவாக்கப்படும் எதிர்காலம் அமைதி நிறைந்ததாக "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்னும், அடிப்படையிற் சாதி, இன, நிற, மொழி வேறுபாடுகளைக் கடந்ததாக அமைந்திருக்கும் என்பதிற் சந்தேகமேயில்லை.

இன்று சிறுவர்களுக்கு வழங்கப் படும் அறிவுபூர்வமான விடயங்கள் அவர்களது எதிர்காலத்திற்கு வழிகாட்டி யாக அமையும். நல்லறிவுடன் வளர்க்கப்படும் சிறுவர்கள் எதிர்காலச் சமூகத்திற் பண்புள்ள வைத்தியராக, பொறியிய லாளராக, விஞ்ஞானியாக, ஆசிரியராக, பல்துறை மேதைகளாகப் பிரகாசிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

ஒரு சிலையை நேர்த்தியாகவும், அழகாகவும் செதுக்கவேண்டுமாயின், சிற்பி திறமையும், தன்னம்பிக்கையும் கொண்ட வனாக இருப்பதுடன், அவனிடம் கூடவே சிறந்த உளியும் காணப்பட வேண்டும். இதேபோலவே எதிர்காலம் சிறப்பானதாக அமைய வேண்டுமாயின் சிற்பிகளைப்போற் சிறுவர்களும் தன்னம்பிக்கையும், திறமையும் உடையவர்களாக இருப்பதுடன், உளியைப்போன்ற பெரியோரின் அறிவுரை களும் உறுதுணையாக இருக்க வேண்டும். அவ்வாறாயின் சிறுவர்களே எதிர்காலத் தினை உருவாக்கும் சிறந்த சிற்பிகள் என்பது தெட்டத் தெளிவாகும்.

# எல்லா நாளும் மகிழவே !...

ரா. ஷானுயாமேரி
தரம் 4A
யாழ். நல்லூர்/சென். பெனடிக்ற் வித்தியாலயம்.

இறையன்பை வாழ்விற் கொண்டு
இனியவராய் விளங்கிடும் தாயே
கறையில்லாக் குழந்தை நாங்கள்
கனிவுடன் வாழ்ந்து வந்தோம்
உறையாத உம்தமிழ்ப் பற்றும்
உயர்ந்ததாய் மரி அன்புடன் தலை
முறைபலவற்றைக் கண்டு வாழ்கவே!

பள்ளி வாழ்விலே நீரும்
பலபுகழ் கண்டிட வாழிய
அள்ளிட அள்ளிடக் குறையாத
அன்பர் இயேசுவின் அருளால்
உள்ளம் நிறைந்தவரே உம்மை
உளம் நிறைந்து வாழ்த்துகின்றோம்
வெள்ளம் போலே பெருகிய
வெண்டமிழிலும் புகழ் நிலைத்திடும்!

என்றும் இன்பம் பெறுகவே !
எல்லா நாளும் மகிழவே!
சின்னஞ் சிறியர் எம்போல்!
சிரித்தே என்றும் வாழிய!
நன்மைகள் பல வாழ்வில்
நாளும் வந்தே சேரும்
இன்று போலே நீங்கள்
என்றும் வாழ்வீர் வாழ்க!



# ஆசிரியரே தெய்வம்

**உமாசங்கர் ஆரணன்**
தரம் 4A,
யா/நல்லூர் சென். பெனடிக்ற் வித்தியாலயம்.

எம் அறிவுக் கண்களைத் திறந்து வைத்த
ஆசிரியரைத் துதிப்போம்.
கல்வியெனும் சமுத்திரத்தை நீந்திக் கரைசேரக்
கலங்கரை விளக்காய்த் திகழ்கின்ற ஆசிரியரைப் போற்றுவோம்.



நல்லவை அத்தனையும் உரைத்த
பொல்லாமை நீக்கி நல் மாணாக்கராய்த்
திகழ வழிகாட்டும் ஆசிரியரைப் போற்றுவோம்.

அன்பினைச் சொரிந்தே அகரம் முதல்
அட்சரங்கள் அத்தனையும் - எமக்குச்
சொல்லிக் கொடுக்கும் ஆசானை வணங்குவோம்.

தேசத்தில் நாம் எதிர்காலத்தில் தலை சிறந்த மானிடராய்த்
திகழ வைத்த ஆசிரியத் தெய்வங்களை அன்புடனே
என்றும் நாம் பணிந்திடுவோம் - அவர்தம்
தன்னலமற்ற சேவைக்குத் தலை வணங்குவோம்.



**2008ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்**
**சித்தியடைந்த மாணவர்கள்...**



முதல் வரிசை : தி.பிரவீனன், க.சாருஷன், இ. ஹரிகரன், இ.டிலக்ஷனா, ச.நிவேதிகா, த.கீர்த்தனா, செ.செவ்விதா
இரண்டாம் வரிசை : செ.அனுஷன், ஜெ.நிசூதனன், ஜெ.அபர்ணன், ம.தனுஷ்காந், சி.இந்துஜா, தெ.கவிநயா

## 2009ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்...



**பாடசாலைமட்ட முதல் நிலை மாணவன்**
ய.இன்பன்ற் ஷால்பன் (167 புள்ளிகள்)



ப.சங்கவி
(163 புள்ளிகள்)



ப.அனோஜா
(158 புள்ளிகள்)



அ.மதுமிதா
(155 புள்ளிகள்)



ஜெ.மயூரிக்கா
(148 புள்ளிகள்)



சி.கரணீதரன்
(144 புள்ளிகள்)



ஜெ.கனுஷா
(143 புள்ளிகள்)



இ.கம்சலா
(143 புள்ளிகள்)



ம.நிலக்ஷிகா
(142 புள்ளிகள்)



ப.பகிந்தன்
(120 புள்ளிகள்), முல்லைத்தீவு

# 2008 பரிசில்கள் பெறுவோர்

| தரம் | மாணவர் பெயர் | பாடம் | இடம் |
|---|---|---|---|
| 01 | ஜெ.நிலோஜனா | தமிழ்மொழி | 01 |
| | | சுற்றாடல் | 03 |
| | | ஆங்கிலம் | 02 |
| | | றோமன் கத்தோலிக்கம் | 02 |
| 01 | சு.பிரதாஞ்சன் | தமிழ்மொழி | 02 |
| | | சுற்றாடல் | 03 |
| | | ஆங்கிலம் | 01 |
| | | இந்துசமயம் | 02 |
| | | **வகுப்பு நிலை** | **01** |
| | | **பொதுத்தகைமை** | **01** |
| 01 | வி.கிறிஸ்ரிகா | தமிழ்மொழி | 02 |
| | | கணிதம் | 01 |
| | | றோமன் கத்தோலிக்கம் | 01 |
| 01 | வி.கிறிஸ்ரினா | தமிழ்மொழி | 02 |
| | | கணிதம் | 02 |
| | | சுற்றாடல் | 02 |
| | | ஆங்கிலம் | 01 |
| | | றோமன் கத்தோலிக்கம் | 03 |
| | | **வகுப்பு நிலை** | **01** |
| | | **பொதுத்தகைமை** | **02** |
| 01 | செ.சிந்துஜன் | தமிழ்மொழி | 03 |
| 01 | த.பானுஷா | கணிதம் | 02 |
| | | றோமன் கத்தோலிக்கம் | 02 |
| 01 | த.தர்மதன் | கணிதம் | 03 |
| | | இந்துசமயம் | 01 |
| | | சுற்றாடல் | 01 |
| 01 | இ.பிறேம்நாத் | ஆங்கிலம் | 03 |
| 01 | கு.நிசாருஜன் | இந்துசமயம் | 03 |

| தரம் | மாணவர் பெயர் | பாடம் | இடம் |
|---|---|---|---|
| 02 | அ.அபிசாந் | கணிதம் | 01 |
| | | தமிழ் | 02 |
| | | சுற்றாடல் | 01 |
| | | ஆங்கிலம் | 01 |
| | | இந்துசமயம் | 01 |
| | | **வகுப்பு நிலை** | **01** |
| | | **பொதுத்தகைமை** | **01** |
| 02 | ரா.ஷானுஜாமேரி | கணிதம் | 02 |
| | | சுற்றாடல் | 03 |
| | | தமிழ் | 01 |
| | | றோமன் கத்தோலிக்கம் | 01 |
| | | **பொதுத்தகைமை** | **02** |
| 02 | த.சஜீவன் | கணிதம் | 03 |
| | | தமிழ் | 03 |
| | | சுற்றாடல் | 02 |
| | | இந்துசமயம் | 02 |
| | | **வகுப்பு நிலை** | **01** |
| 02 | ரெ.தூரிகா | றோமன் கத்தோலிக்கம் | 02 |
| | | ஆங்கிலம் | 03 |
| 02 | ம.சாமினி | ஆங்கிலம் | 02 |
| 02 | உ.ஆரணன் | இந்துசமயம் | 03 |
| 02 | ய.தர்சன்யா | றோமன் கத்தோலிக்கம் | 03 |

| தரம் | மாணவர் பெயர் | பாடம் | இடம் |
|---|---|---|---|
| 03 | அ.சோபிகா | தமிழ்மொழி | 01 |
| | | ஆங்கிலம் | 01 |
| | | **பொதுத்தகைமை** | **01** |
| 03 | சி.ஜனனி | தமிழ்மொழி | 02 |
| 03 | வி.வைஷ்ணவி | தமிழ்மொழி | 03 |
| | | இந்துசமயம் | 02 |
| 03 | ம.றஜீவனா | தமிழ்மொழி | 03 |
| 03 | த.நிதர்சனா | கணிதம் | 01 |
| | | ஆங்கிலம் | 02 |
| | | **வகுப்பு நிலை** | **01** |
| | | **பொதுத்தகைமை** | **02** |
| 03 | சி.சாரங்கன் | கணிதம் | 02 |
| 03 | ப.சுலக்ஷன் | கணிதம் | 03 |
| 03 | து.பிரசாந்தி | சுற்றாடல் | 01 |
| | | இந்துசமயம் | 01 |
| | | ஆங்கிலம் | 03 |
| 03 | க.கலாகரன் | சுற்றாடல் | 02 |
| 03 | ஹ.கர்ணன் | சுற்றாடல் | 03 |
| 03 | ஜெ.கஸ்தூரி | இந்துசமயம் | 03 |
| 03 | ஜெ.ஜெயக்கிளின் | றோமன் கத்தோலிக்கம் | 01 |
| 03 | சி.டனுகா | றோமன் கத்தோலிக்கம் | 02 |
| 03 | வி.தோகீசன் | றோமன் கத்தோலிக்கம் | 03 |

| தரம் | மாணவர் பெயர் | பாடம் | இடம் |
| --- | --- | --- | --- |
| 04 | ப.அனோஜா | தமிழ்மொழி | 01 |
| | | சுற்றாடல் | 02 |
| | | ஆங்கிலம் | 03 |
| | | **வகுப்பு நிலை** | **01** |
| | | **பொதுத்தகைமை** | **01** |
| 04 | அ.மதுமிதா | தமிழ்மொழி | 02 |
| | | சுற்றாடல் | 02 |
| | | இந்துசமயம் | 02 |
| 04 | ய.இன்பன் சால்பன் | தமிழ்மொழி | 03 |
| | | சுற்றாடல் | 03 |
| | | ஆங்கிலம் | 03 |
| | | றோமன் கத்தோலிக்கம் | 01 |
| | | **பொதுத்தகைமை** | **02** |
| 04 | ம.நிலக்சிகா | கணிதம் | 01 |
| 04 | சி.சிவரதன் | கணிதம் | 03 |
| 04 | ஜெ.கனுசா | ஆங்கிலம் | 01 |
| | | இந்துசமயம் | 03 |
| | | **வகுப்பு நிலை** | **01** |
| 04 | ச.அபிகாயி | றோமன் கத்தோலிக்கம் | 02 |
| 04 | ந.நர்மதா | றோமன் கத்தோலிக்கம் | 03 |
| 04 | த.சஞ்சீவன் | இந்துசமயம் | 01 |

| தரம் | மாணவர் பெயர் | பாடம் | இடம் |
|---|---|---|---|
| 05 | இ.கரிகரன் | தமிழ் | 01 |
| | | கணிதம் | 01 |
| | | சுற்றாடல் | 01 |
| | | ஆங்கிலம் | 01 |
| | | இந்துசமயம் | 02 |
| | | **வகுப்பு நிலை** | **01** |
| | | **பொதுத் தகைமை** | **01** |
| 05 | து.சிந்துஜன் | தமிழ் | 02 |
| | | சுற்றாடல் | 02 |
| | | இந்துசமயம் | 01 |
| 05 | ம.மதுஷன் | தமிழ் | 03 |
| 05 | ஜெ.நிரூதனன் | கணிதம் | 02 |
| | | ஆங்கிலம் | 03 |
| | | **வகுப்பு நிலை** | **01** |
| | | **பொதுத் தகைமை** | **02** |
| 05 | செ.அனுசன் | கணிதம் | 03 |
| 05 | அ.விஜயராம் | சுற்றாடல் | 03 |
| | | ஆங்கிலம் | 02 |
| 05 | த.மரியதர்சன் | றோமன் கத்தோலிக்கம் | 01 |
| 05 | து.யதுர்சிகா | றோமன் கத்தோலிக்கம் | 02 |
| 05 | க.பவித்தன் | றோமன் கத்தோலிக்கம் | 03 |
| 05 | ம.தனுஸ்காந் | இந்துசமயம் | 03 |

## தரம் -05 புலமைப் பரிசிற் பரீட்சையில் 100 புள்ளிகளுக்குமேற் பெற்ற மாணவர் விபரம் - 2008

| இல | பெயர் | | புள்ளி |
|---|---|---|---|
| 01 | அருளானந்தம் விஜயராம் | – | 113 |
| 02 | மகாலிங்கம் மதுஷன் | – | 112 |
| 03 | அன்பழகன் பிரசாத் | – | 108 |
| 04 | தவராசா மரியதர்சன் | – | 107 |
| 05 | துரைராஜா சிந்துஜன் | – | 105 |
| 06 | ஆதவன் மிதுர்ஷா | – | 101 |

## தரம் -05 புலமைப் பரிசிற் பரீட்சையிற் சித்தியடைந்தோர்- 2008

| இல | பெயர் | | புள்ளி | மாவட்ட நிலை |
|---|---|---|---|---|
| 01 | ஜெகதீஸ்வரன் நிரூதனன் | – | 158 | 10 |
| 02 | செல்வகுருநாதன் செவ்விதா | – | 136 | |
| 03 | திருச்செல்வன் பிரவீனன் | – | 131 | |
| 04 | ஜெகதாஸ் அபர்ணன் | – | 129 | |
| 05 | இரவீந்திரன் ஹரிகரன் | – | 126 | |
| 06 | தெய்வேந்திரன் கவிநயா | – | 124 | |
| 07 | மனோகரநாதன் தனுஷ்காந் | – | 122 | |
| 08 | இரவீந்திரன் டிலக்ஷனா | – | 122 | |
| 09 | தயாபரன் கீர்த்தனா | – | 121 | |
| 10 | சிறிஸ்கந்தராசா இந்துஜா | – | 120 | |
| 11 | சர்வேஸ்வரன் நிவேதிகா | – | 120 | |
| 12 | செல்வராஜா அனுஷன் | – | 119 | |
| 13 | கருணாநிதி சாருஜன் | – | 114 | |

## 2009 பரிசுகள் பெறுவோர் விபரம்

| தரம் | மாணவர் பெயர் | பாடம் | இடம் |
|---|---|---|---|
| 01 | ற.திசானா | தமிழ்மொழி | 01 |
| | | சுற்றாடல் | 02 |
| | | ஆங்கிலம் | 03 |
| | | இந்துசமயம் | 02 |
| 01 | யோ.யதுர்சிகா | தமிழ்மொழி | 02 |
| | | கணிதம் | 01 |
| | | றோமன் கத்தோலிக்கம் | 01 |
| | | **பொதுத் தகைமை** | **02** |
| 01 | த.பியானுசி | தமிழ்மொழி | 03 |
| | | கணிதம் | 02 |

| | | | |
|---|---|---|---|
| 01 | பா.நதீசன் | கணிதம் | 01 |
| | | சுற்றாடல் | 01 |
| | | ஆங்கிலம் | 01 |
| | | இந்துசமயம் | 01 |
| | | **வகுப்பு நிலை** | **01** |
| | | **பொதுத் தகைமை** | **01** |
| 01 | ஸ்ரீ.மதுசாளினி | கணிதம் | 03 |
| | | இந்துசமயம் | 03 |
| 01 | வி.கபிசன் | சுற்றாடல் | 03 |
| 01 | ந.யுகேந்திரன் | ஆங்கிலம் | 02 |
| 01 | ம.கிங்ஸ்ரன் | றோமன் கத்தோலிக்கம் | 02 |
| 01 | வி.இவாஞ்சலின் | றோமன் கத்தோலிக்கம் | 03 |
| 01. | சூ.துஷாயினி | **வகுப்பு நிலை** | **01** |
| 02 | க.கிறிஸ்ரினா | தமிழ்மொழி | 01 |
| | | கணிதம் | 03 |
| | | சுற்றாடல் | 01 |
| | | ஆங்கிலம் | 01 |
| | | **வகுப்பு நிலை** | **01** |
| | | **பொதுத் தகைமை** | **01** |
| 02 | ர. கீர்த்தனன் | தமிழ்மொழி | 02 |
| | | இந்துசமயம் | 01 |
| 02 | சு.பிரதாஞ்சன் | தமிழ்மொழி | 03 |
| | | கணிதம் | 01 |
| | | இந்துசமயம் | 02 |
| | | **வகுப்பு நிலை** | **01** |
| | | **பொதுத் தகைமை** | **02** |

| | | | |
|---|---|---|---|
| 02 | த.ஷானுபா | கணிதம் | 02 |
| 02 | ஜெ.நிலோஜனா | கணிதம் | 03 |
| | | ஆங்கிலம் | 03 |
| | | றோமன் கத்தோலிக்கம் | 02 |
| 02 | வி.கிறிஸ்ரிகா | சுற்றாடல் | 02 |
| | | றோமன் கத்தோலிக்கம் | 03 |
| 02 | கு.நிசாருஜன் | சுற்றாடல் | 03 |
| | | இந்துசயயம் | 03 |
| 02 | கி.டிலான்கணேசன் | ஆங்கிலம் | 02 |
| 02 | றொ.டினுசியா | றோமன் கத்தோலிக்கம் | 01 |
| **தரம்** | **மாணவர் பெயர்** | **பாடம்** | **இடம்** |
| 03 | அ.அபிசாந் | தமிழ்மொழி | 01 |
| | | கணிதம் | 01 |
| | | சுற்றாடல் | 02 |
| | | ஆங்கிலம் | 03 |
| | | இந்துசமயம் | 02 |
| | | **வகுப்பு நிலை** | **01** |
| | | **பொதுத் தகைமை** | **02** |
| 03 | த.சஜீவன் | தமிழ்மொழி | 02 |
| | | கணிதம் | 02 |
| | | சுற்றாடல் | 01 |
| | | ஆங்கிலம் | 02 |
| | | இந்துசமயம் | 01 |
| | | **வகுப்பு நிலை** | **01** |
| | | **பொதுத் தகைமை** | **01** |
| 03 | ஜெ.விஜித் | ஆங்கிலம் | 01 |
| | | தமிழ்மொழி | 03 |
| | | இந்துசமயம் | 03 |
| 03 | ய. தர்சன்யா | கணிதம் | 03 |

| | | | |
|---|---|---|---|
| 03 | ரா. சாணுஜாமேரி | சுற்றாடல் | 03 |
| | | றோமன் கத்தோலிக்கம் | 01 |
| 03 | ரெ. தூரிகா | றோமன் கத்தோலிக்கம் | 02 |
| 03 | க. சஜிந்தன் | றோமன் கத்தோலிக்கம் | 03 |
| 04 | தே. ஜீவதுவாரகன் | தமிழ்மொழி | 01 |
| | | சுற்றாடல் | 01 |
| 04 | து.பிரசாந்தி | தமிழ்மொழி | 02 |
| | | சுற்றாடல் | 02 |
| | | ஆங்கிலம் | 03 |
| 04 | அ.சோபிகா | ஆங்கிலம் | 01 |
| | | தமிழ்மொழி | 03 |
| | | கணிதம் | 02 |
| | | சுற்றாடல் | 03 |
| | | இந்துசமயம் | 03 |
| | | **வகுப்பு நிலை** | **01** |
| | | **பொதுத்தகைமை** | **01** |
| 04 | த.நிதர்சனா | தமிழ்மொழி | 03 |
| | | கணிதம் | 03 |
| | | ஆங்கிலம் | 02 |
| | | **வகுப்பு நிலை** | **01** |
| | | **பொதுத்தகைமை** | **02** |
| 04 | ப.கோதர்சன் | கணிதம் | 01 |
| 04 | ஜெ.ஜெயக்கிலின் | றோமன் கத்தோலிக்கம் | 01 |
| 04 | வி.தோகீசன் | றோமன் கத்தோலிக்கம் | 02 |
| 04 | ஜெ.டனுகா | றோமன் கத்தோலிக்கம் | 03 |
| 04 | ஜெ.கஸ்தூரி | இந்துசமயம் | 01 |

| | | | |
|---|---|---|---|
| 04 | க. தனுசன் | இந்துசமயம் | 02 |
| 04 | ம. றஜீவனா | இந்துசமயம் | 03 |
| 05 | ப. அனோஜா | தமிழ்மொழி | 01 |
| | | கணிதம் | 01 |
| | | சுற்றாடல் | 03 |
| | | **வகுப்பு நிலை** | **01** |
| | | **பொதுத்தகைமை** | **01** |
| 05 | ய. இன்பன் ஷால்பன் | தமிழ்மொழி | 02 |
| | | சுற்றாடல் | 01 |
| | | ஆங்கிலம் | 03 |
| | | றோமன் கத்தோலிக்கம் | 01 |
| 05 | ம.நிலக்சிகா | தமிழ்மொழி | 03 |
| | | ஆங்கிலம் | 02 |
| 05 | ஜெ.கனுசா | கணிதம் | 02 |
| | | ஆங்கிலம் | 01 |
| | | இந்துசமயம் | 02 |
| | | **வகுப்பு நிலை** | **01** |
| | | **பொதுத்தகைமை** | **02** |
| 05 | ப. சங்கவி | சுற்றாடல் | 02 |
| | | இந்துசமயம் | 03 |
| 05 | மோ. கோகுலராஜ் | றோமன் கத்தோலிக்கம் | 02 |
| 05 | ச. அபிகாயி | றோமன் கத்தோலிக்கம் | 03 |
| 05 | சி. கரணிதரன் | இந்துசமயம் | 01 |

# தரம் -05 புலமைப் பரிசிற் பரீட்சையிற் சித்தியடைந்தோர்- 2009

| இல | பெயர் | | புள்ளி | மாவட்ட நிலை |
|---|---|---|---|---|
| 01 | யசீதரன் இன்பன்ற் ஷால்பன் | – | 167 | 62 |
| 02 | பரமேஸ்வரமூர்த்தி சங்கவி | – | 163 | |
| 03 | பஞ்சலிங்கம் அனோஜா | – | 158 | |
| 04 | அரசகுலசூரியன் மதுமிதா | – | 155 | |
| 05 | ஜெயக்குமார் மயூரிக்கா | – | 148 | |
| 06 | சிறீதரன் கரணீதரன் | – | 144 | |
| 07 | ஜெயறஞ்சன் கனுஷா | – | 143 | |
| 08 | லக்ஸ்மிகாந்தன் கம்சலா | – | 143 | |
| 09 | மருதலிங்கம் நிலக்ஷிகா | – | 142 | |
| 10 | பத்மநாதன் பகிந்தன் | – | 120 | கிளிநொச்சி மாவட்டம் |

# தரம் -05 புலமைப் பரிசிற் பரீட்சையில் 100 புள்ளிகளுக்குமேல் பெற்ற மாணவர் விபரம் - 2009

| இல | பெயர் | | புள்ளி |
|---|---|---|---|
| 01 | கனகரட்ணம் டனுஷியா | – | 134 |
| 02 | இரவிச்சந்திரன் தர்ஷியப்பிரியன் | – | 134 |
| 03 | சூர்யக்குமார் கிறிஸ்ரினா | – | 133 |
| 04 | ஹரிசமன்குமார் லோஜனா | – | 131 |
| 05 | இரவிச்சந்திரன் செல்ஷியா | – | 131 |
| 06 | இரவீந்திரன் தாரங்கன் | – | 129 |
| 07 | நந்தகுமார் சிந்துஜன் | – | 129 |
| 08 | அசோக்குமார் நர்மதா | – | 128 |
| 09 | தயாநேசன் சஞ்ஜீவன் | – | 128 |
| 10 | மோகனராஜா கோகிலராஜ் | – | 127 |
| 11 | இராமநாதன் லக்ஷிகா | – | 124 |
| 12 | மகேந்திரன் அனுஷ்ரெலா | – | 124 |
| 13 | அன்பழகன் வினுஷா | – | 120 |
| 14 | தயாநந்தன் வர்ஷா | – | 120 |
| 15 | அமிர்தலிங்கம் விதுஷா | – | 119 |
| 16 | பேரின்பநாதன் உமைவாணன் | – | 114 |
| 17 | சிறிதரன் சிவரதன் | – | 114 |
| 18 | நேசரட்ணம் நிருஷா | – | 113 |
| 19 | விஜயகுமார் ஜதுர்ஷன் | – | 112 |
| 20 | கருணபாலன் எப்சிபா | – | 112 |
| 21 | தங்கேஸ்வரன் தக்ஷயன் | – | 110 |
| | சத்தியபாபு மைக்கன்றோ | – | 110 |
| | விஜயபவன் ஏஞ்சல் | – | 109 |
| | [illegible]குமார் சந்தோஷிக்கா | – | 109 |
| | [illegible]ஞ்சன் திலக்ஷன் | – | 108 |
| | [illegible]சன் மேரிதிரேசா | – | 106 |
| | [illegible]மரன் சத்திதரன் | – | 105 |
| 28 | [illegible]ணராஜா நர்மதா | – | 100 |

# கோட்ட, வலயமட்டப் போட்டிகளில் பரிசு பெற்றோர் விபரம்

## கோட்ட மட்டம் 2008

### சித்திரப் போட்டி

| | |
|---|---|
| 01. ய.இன்பன்ற் ஷரோன் | தரம் 01 |
| 02. ப.சங்கவி | தரம் 04 |
| 03. ம.மதுஷன் | தரம் 05 |

### விளையாட்டுப் போட்டி

| | | |
|---|---|---|
| 01. ம.மதுஷன் | நீளம் பாய்தல் | 2ஆம் இடம் |

### தமிழ்த்தினப் போட்டி

| | | |
|---|---|---|
| 01. இ.ஹரிகரன் | ஆக்கத்திறன் | 3ஆம் இடம் |
| 02. ப.அனோஜா | தனிநடனம் | 3ஆம் இடம் |

### ஆக்கப் போட்டி

| | |
|---|---|
| 01. அ.சோபிகா | 2ஆம் இடம் |
| 02. இ.ஹரிகரன் | 5ஆம் இடம் |

### ENGLISH DAY COMPETITION DIVISIONAL LEVEL

| | | |
|---|---|---|
| **J. Mayurika** | **Recitation** | **3rd Place** |

### மறைக் கல்வித் தேர்வு

| | | |
|---|---|---|
| 01. த.மரியதர்சன் | அதிவிசேட சித்தி | தரம் 04 |
| 02. ய.இன்பன் ஷால்பன் | விசேட சித்தி | தரம் 03 |
| 03. க.கிறிஸ்ரினா | திறமைச்சித்தி | தரம் 03 |
| 04. த.பபித்தன் | திறமைச்சித்தி | தரம் 04 |
| 05. வி.யோதிகா | திறமைச்சித்தி | தரம் 04 |

**செல்வன். தவராசா மரியதர்சன் அவர்கள் அதிவிசேட சித்திபெற்று யாழ். ஆயர் அவர்களால் தங்கப்பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கப்பட்டார்.**

### இந்து சமயப் போட்டி

| | | |
|---|---|---|
| 01. சு.பிரதாஞ்சன் | 3ஆம் இடம் | தரம் 01 |
| 02. ஜெ.டினோஜா | 3ஆம் இடம் | தரம் 02 |

செல்வன் அன்புழகன் அபிசாந் அவர்கள் சைவ பரிபாலனசபைப் பரீட்சையில் விசேட சித்தி பெற்றமைக்காக வெண்கலப் பதக்கம் பெற்றுக்கொண்டார்.

## கோட்ட மட்டம் 2009

### தமிழ்த்தினப் போட்டி

| | | |
|---|---|---|
| 01. அ.நர்மதா | இசையும் அசைவும் | 02ஆம் இடம் |

### விளையாட்டுப் போட்டி

| | | |
|---|---|---|
| 01. அ.நர்மதா | 100 M | 02ஆம் இடம் |
| 02. ம.மதுசன் | நீளம் பாய்தல் | 02ஆம் இடம் |

### ENGLISH DAY COMPETITION

| | | |
|---|---|---|
| 01. A.sobiga | Copy writing | 1st place |
| 02. T.Nitharsana | Copy writing | 3rd Place |
| 03. J.Mayurika | Recitation | 3rd Place |

### ZONAL LEVEL

| | | |
|---|---|---|
| 01. A.Sobiga | Copy writing | 3rd place |

## கோலப் போட்டி

| | | |
|---|---|---|
| 01. பா.நதீஷன் | 08ஆம் இடம் | தரம் 01 |
| 02. ர.கீர்த்தனன் | 01ஆம் இடம் | தரம் 02 |
| 03. ரெ.தூரிகா | 05ஆம் இடம் | தரம் 03 |
| 04. ஜெ.கஸ்தூரி | 03ஆம் இடம் | தரம் 04 |
| 05. கி.விதுசிகா | 09ஆம் இடம் | தரம் 04 |

## யாழ். மாநகராட்சி மன்ற சைவசமயப் பரீட்சை


| | | |
|---|---|---|
| 01. ம.நிலக்ஷிகா | 02ஆம் இடம் | தரம் 04 |
| 02. அ.மதுமிதா | அதிவிசேட சித்தி | தரம் 04 |
| 03. சி.கரணிதரன் | விசேடசித்தி | தரம் 04 |
| 04. ம.அனுஸ்ரலா | விசேடசித்தி | தரம் 04 |
| 05. த.வர்ஷா | விசேடசித்தி | தரம் 04 |
| 06. அ.நர்மதா | விசேடசித்தி | தரம் 04 |

| | | |
|---|---|---|
| 01. த.பிரதாஞ்சன் | 02ஆம் இடம் | கொன்றை வேந்தன்,<br>ஆத்திசூடி |
| 02. பா.நதீசன் | 03ஆம் இடம் | ஆத்திசூடி |

# இதயம் கனிந்த நன்றிகள்

எமது பரிசளிப்பு விழா மலரான "நிவேதன மலரினை" வெளியிடுவதற்கு எமக்கு அருள்புரிந்து வழி நடத்திய இறைவனுக்கு முதற்கண் நன்றிகள்.

- இம் மலருக்கு ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள் வழங்கிய பெருந்தகைகளுக்கும்,
- நல்ல ஆக்கங்களைத் தந்துதவியவர்களுக்கும், பாடசாலை அபிவிருத்திச்சங்க, பழையமாணவ சங்க உறுப்பினர்களுக்கும்,
- இம்மலர் எங்கள் கரங்களில் மலர்வதற்கு நிதியுதவி புரிந்தவர்களுக்கும்,
- இவ்விழா சிறப்பாக நடைபெற கலை நிகழ்ச்சியினை நெறிப்படுத்தியவர்களுக்கும்,
- சிறந்தமுறையில் இம் மலரினை கணினி முறையில் வடிவமைத்த கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும்
- பல வழிகளில் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எம் மனம் நிறைந்த நன்றிகள்.








Harikanan,Jaffna